# කාර්යසාධන වාර්තාව - 2014

# செயல்திறன் அறிக்கை- 2014

# Performance Report - 2014











## රාජ්‍ය ආරක්ෂක හා නාගරික සංවර්ධන අමාත්‍යාංශය

## பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

## Ministry of Defence & Urban Development

# கௌரவ அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



பாதுகாப்பு அமைச்சராக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் 2014 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கைக்கு வாழ்த்துச்செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.
30 வருடத்திற்கும் அதிகமாக சமூகத்தை பலவீனமாக்கிய ஆயுதந் தாங்கிய பயங்கரவாதக் குழுவிற்கு எதிராக நடைபெற்ற யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்து சுதந்திரமாக எழுகின்ற நாடடென்ற ரீதியில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குவதற்கான சந்தர்ப்பத்தினை இல்லாதொழிப்பது, தேசியப் பாதுகாப்பு தொடர்பான மிக முக்கியமான செயற்பாடாகும். 2009 ஆம் ஆண்டில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தத்தினால் தோற்கடிக்கப்பட்ட போதிலும், பயிற்சிபெற்ற போராளிகளுடன் மேலும் இயங்குவதற்கு அதன் வெளிநாட்டு வலையமைப்பானது, இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு மத்திய, நீண்ட கால அச்சுறுத்தலொன்றாக இருப்பதனால், இவ் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுப்பதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக முக்கியமாகும்.

யுத்தத்தின் பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் இலங்கைக்கு மிக முக்கியமானதாகும். இன ரீதியாக பிரிவினையை அடிப்படையாகக் கொள்ளாமல் இலங்கையின் அடையாளத்தினை மேம்படுத்தும் உட்பிரவேசம் அத்தியாவசியமாக இருக்கின்றது. இதன் காரணமாக இன ரீதியாக மற்றும் சமயக் குழுக்களின் அடிப்படைவாதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளதோடு மீள்குடியேற்றம், நல்லிணக்கம், புனரமைப்பு மற்றும் புனர்வாழ்விற்கு பொருத்தமான செயற்பாடுகளுக்கு எதிராக பரந்தளவில் கவனம் செலுத்தி, இச் செயற்பாடுகளினை அடிப்படையாகக் கொண்டு உள்ளக ரீதியான அச்சுறுத்தல்களை மீண்டும் தலைதூக்குவதனை தடுப்பதற்காக, நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

கடற்கொள்ளை, பங்கரவாதம், ஆட்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல், விதிமுறைகள் அற்ற மற்றும் பதிவு செய்யாமல் மீன் பிடித்தல் மற்றும் சட்டவிரோதமாக கழிவுகளை வெளியாக்குதல் போன்ற தவறுகளைக் காரணமாகக் கொண்டு, இந்திய உப கண்டத்தின் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படுவதோடு அதன் பின்விளைவாக நிலையான சமாதானம் மற்றும் வளங்களினை அடையப் பெறுவவதில் பெரும் சவால்களுக்கு உள்ளாகியுள்ளது. அதற்கேற்ப வலய ரீதியாக உருவாகின்ற சர்வதேசப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களில் ஏற்படுகின்ற தாக்கத்தினை குறைத்துக்கொள்வதற்காக மொத்த முழு சமூகத்துடன் இணைந்து நடவடிக்கை எடுப்பதற்கான தேவைப்பாடு எழுந்துள்ளது.

எமது அரசாங்கத்தினால் சகல இனங்களுக்கிடையிலான சமாதானத்தையும் நல்லிணக்கத்தினையும் ஏற்படுத்தல் மற்றும் ஆக்கபூர்வமான சர்வதேச தொடர்புகளை கட்டியெழுப்புவதன் மூலமான பெறுமதி இனங்காணப்பட்டுள்ளது. இதன் காரணமாக உள்நாட்டு, வலய மற்றும் உலக நாடுகளின் தேசிய பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தினை மதிப்பீடு செய்து, அவ்வாறான சவால்களை வெற்றி கொள்வதற்காக தேவையான பாதுகாப்பு செயன்முறைகளை இலங்கையினால் நெறிப்படுத்தப்படல் வேண்டியதாக உள்ளது. அவ்வாறே, பிரச்சினைகள் இல்லாமல் அமைதியான சூழலொன்றை கட்டியெழுப்புவதற்காக ஏனைய இனங்களுடன் செயற்பாடான தொடர்பொன்றினை ஏற்படுத்திக் கொள்வது அத்தியாவசியமாகும்.

தனது தாய்நாட்டிற்காக தன்னலமில்லாமல் விடாமுயற்சியுடன் சேவை செய்த வீரமிக்க துணிச்சலான படைவீரர்களுக்கு நன்றிசெலுத்துவதற்கு இதனை நான் சந்தர்ப்பமொன்ற ஏற்படுத்திக் கொண்டேன். நீங்கள், நம் தேசத்தின் கொடூர பயங்கரவாதத்திலிருந்து மீட்டி வெற்றியைப் பெற்றுக் கொடுத்தீர்கள். இலங்கைக்கு உங்களது அசைக்க முடியாத போட்டி, தியாகம் மற்றும் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வலிமை அவசியம் என்பது எனது நம்பிக்கையாகும்.

மைத்திரிபால சிறிசேன
பாதுகாப்பு அமைச்சர்
**ஒக்டேபர் 2015**

பாதுகாப்புச் செயலாளரின் செய்தி



**கௌரவ பாதுகாப்புச் செயலாளர் அவர்களின் ஆசிச்செய்தி மூன்று தசாப்த காலமாக நிலவிய மோதல் சூழ்நிலைமையை முடிவுக்குக் கொண்டுவந்து அபிவிருத்தியின் வளர்ச்சிக் கதிர்கள் வீசுவதற்கு ஆரம்பமாகியுள்ளது. பொருளாதார சமுதாய மற்றும் கலாசார அபிவிருத்தியொன்றை நோக்கிய திசையில் இவ்வாறான காலகட்டத்தினுள் அதன் செயற்பாடுகள் அரசின் இலக்கினை அடைவதற்கு ஏற்றவாறாக நிறைவேற்றுவதற்கு மிகவும் முக்கிய பங்கை வகிக்கின்ற பாதுகாப்பு அமைச்சின் முன்னேற்றம் மெச்சத் தக்கதாகக் கொண்டு எதிர்கால நோக்கினை எதிர்வுகூருவது முக்கியமானதும் காலத்தின் தேவையுமாகும்.**

**இனங்களுக்கிடையே ஒற்றுமை, சமத்துவம், நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நிரந்தரமான எதிர்கால சமுதாய முறைமைக்கு ஏற்றவாறான அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்காக தயார் செய்வதற்காக நாட்டின் பாதுகாப்பும் ஒற்றையாட்சி நாட்டில் ஆள்புல வலிமை அத்தியாவசியத் தேவையாகவுள்ளது.**

**அனைத்துத் துறைகளின் பங்களிப்பினை ஒழுங்கு முறையில் கூட்டிணைத்துக் கொண்டு அதிமேதகு ஜனாதிபதியின் நல்லாட்சி பற்றி மக்களின் அபிலாசைகளை சாதனையாகக் கொண்டு மற்றும் அதனை இடைநிறுத்தாது அமுல்படுத்தி நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மற்றும் பாதுகாப்பான நாடொன்றை உருவாக்கும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான நோக்கத்தை நிறைவேற்றும் அமைச்சின்** முப்படைகளுக்கும் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தினருக்கம் **எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் நாளை** உருவாகவுள்ள **புதிய இலங்கைத் தலைமுறையினரின் எதிர்காலத்தை வளமாக்க முடியும் என எதிர்பார்க்கின்றேன்.**

பொறி. கருணாரத்ன எட்டியாரச்சி

பாதுகாப்பு செயலாளர்

ஒக்டேபர் 2015


## தொலைநோக்கு

பாதுகாப்பானதும் ஆதரவுமிக்கதுமானதொரு தேசத்தைக் கட்டியெழுப்பல்

## பணிநோக்கு

பிராந்திய ஒருமைப்பாடு, நிலையான நகர அபிவிருத்தி, போட்டிமிகு பொருளாதாரம் மற்றும் உயர் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றைக் கொண்டதொரு நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறைமையைப் பேணுவதற்கான உபாயமுறைத் திட்டங்களையும் கொள்கைகளையும் வகுத்து அவற்றை நிறைவேற்றுதல்.

# அமைச்சின் நிறுவன ரீதியான கட்டமைப்பு



## ஊழுவேநுவேளு


பிரிவுகள் வாரியாக செயலாற்றுகை…………………………………………………………………...1
01 ........................................................................................................................................2
பாதுகாப்புப் பிரிவு ..................................................................................................................2
1.1 மேலோட்டப் பார்வை ..........................................................................................................2
1.2 2014 இல் பெற்ற அடைவுகள் ..............................................................................................2
1.2.1 பிரதான செயற்பாடுகளும் அவற்றின் முன்னேற்றமும் ..........................................................2
1.2.2 2014 இன் போது மேற்கொள்ளப்பட்ட திறன் விருத்திச் செயற்பாடுகள் ....................................3
1.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகள/ மதிப்பாய்வு நடவடிக்கைகள் ...........................3
1.4 பிரச்சினைகளும் சவால்களும்...........................................................................................3
1.5 எதிர்கால வாய்ப்புக்கள்.......................................................................................................3
02 ........................................................................................................................................4
தொழில்நுட்பப் பிரிவு ...............................................................................................................4
2.1 மேலோட்டப் பார்வை ..........................................................................................................4
2.2 2014 இல் இடம்பெற்ற நடவடிக்கைகள் தொடர்பிலான சாதனைகளும் பகுப்பாய்வும் ..................4
03 ........................................................................................................................................7
பாராளுமன்ற மற்றும் சிவில் விவகாரங்களுக்கான பிரிவு ...........................................................8
3.1 மேலோட்டப் பார்வை ..........................................................................................................8
3.2 2014 ஆம் ஆண்டில் பெற்ற அடைவுகள்...............................................................................8
3.2.1 முப்படையினருக்குமான முகாம்கள் மற்றும் படைப்பிரிவுக் கட்டடங்களைத் தாபிப்பதற்கான காணி பற்றியவிடயங்கள…………………...………………………………………………………….………………..8
3.2.2 பாராளுமன்றம் தொடர்பிலான விவகாரங்கள்……………………………………………………..8
3.2.2.1 பாராளுமன்றக் கேள்விகள்………………………………………………………….…...8
3.2.2.2 பாராளுமன்ற ஆலோசனைக் குழு………………………………………………..……….…...8
3.2.2.3 பொது மனுக் குழு…………………………………………………………………….……….9
3.2.2.4 பாராளுமன்ற சபை ஒத்திவைப்பு வேளை மற்றும் நிலையியற் கட்டளையின் கீழான கேள்விகள்……………………………………………………………………………...….9
3.2.2.5 முப்படையினருக்குமான சீருடைகள் மற்றும் ஆடைகள் வழங்கல் தொடர்பிலான விடயங்கள்………………………………………………………..……………………9
3.2.2.6 பொதுமக்களின் முறைப்பாடுகளும் மனக்குறைகளும்………...…………………………………..9
3.2.2.7 ஆட்பதிவுத் திணைக்களம், ரணவிருசேவா அதிகாரசபை, அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை போன்றவற்றின் நிர்வாக விடயங்கள் தொடர்பிலான மேற்பார்வை………………………..9
3.2.2.8 இப்பிரிவின் உள்ளக நிர்வாக விடயங்கள்…………………………………………………….9
04 ......................................................................................................................................10
நிர்வாகப் பிரிவு ....................................................................................................................10
4.1 மேலோட்டப் பார்வை ........................................................................................................10
4.1.1 பொது நிர்வாகம் ..........................................................................................................10
4.1.2 சட்டம் தொடர்பான விடயங்கள்.......................................................................................10
4.1.3 பொறியியல் சார்ந்த விடயங்கள்......................................................................................11
4.1.4 யுத்த வீரர்களின் நலன்புரி சார்ந்த விடயங்கள் ..................................................................11

4.1.4.1 அபி வெனுவன் அபி கருத்திட்டம்.....11

4.1.4.2 யுத்த வீரர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம்.....11

4.1.4.3 யுத்த வீரர்களுக்கான பகுதியளவு பூர்த்தியடையச் செய்யும் வீடமைப்புத் திட்டம்.....11

4.2 பிரச்சினைகளும் சவால்களும்.....14

4.3 எதிர்கால வாய்ப்புக்கள்.....14

05.....15

சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு.....15

5.1 மேலோட்டப் பார்வை.....15

5.2 2014 இல் அடைவுகள்.....15

5.2.1 சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்ட பிரதான செயற்பாடுகள்:-.....15

5.2.2 பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி தொடர்பான பிரதான செயற்பாடுகள்.15

5.2.3 இணைந்த சேவைகள் மொழி மற்றும் பயிற்சி நிறுவகம் தொடர்பிலான பிரதான செயற்பாடுகள்:-.....15

5.2.4 இணைந்த சேவைகள் மொழி மற்றும் பயிற்சி நிறுவகம் தொடர்பிலான பிரதான செயற்பாடுகள்:-.....15

5.2.5 ஆட்கடத்தலுக்கு எதிரான தேசிய படையணி தொடர்பிலான பிரதான செயற்பாடுகள்.....16

5.2.6 2014 இல் முப்படை மற்றும் பொலிஸ் ஆகியோர் தொடர்பான பாடசாலை அனுமதியுடன் தொடர்பிலான பிரதான செயற்பாடுகள்.....16

5.2.7 2014 இல் அடையப்படாத இலக்குகளும் 2015 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட பணிகளும்.....16

5.3 பிரச்சினைகளும் சவால்களும்.....16

06.....17

நிதிப் பிரிவு.....17

6.1 மேலோட்டப் பார்வை.....17

6.2 2014 இல் பெற்ற அடைவுகள்.....18

07.....21

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு.....21

7.1 மேலோட்டப் பார்வை.....21

7.2 2014 இல் பெற்ற அடைவுகள்.....21

7.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு.....22

7.4 பிரச்சினைகளும் சவால்களும்.....22

7.5 எதிர்கால வாய்ப்புக்கள்.....22

08.....23

ஆயுதப் படையினரின் நலன்புரிப் பிரிவு.....23

8.1 மேலோட்டப் பார்வை.....23

8.2 2014 இல் பெற்ற அடைவுகள்.....23

8.3 எதிர்கால வாய்ப்புக்கள்.....23

09.....24

செயலாற்றுகை அறிக்கை.....24

9.1 மேலோட்டப் பார்வை.....24

9.2 நகர அபிவிருத்திப் பிரிவின் முன்னேற்றம்.....24

9.3 நகர அபிவிருத்திப் பிரிவு.....24

9.4 காணிப் பிரிவு……………………………………………………………………………………25

9.5 மதிப்பீடு மற்றும் செயற்பாட்டுப் பிரிவு………………………………………………………...25

9.6 தொழிநுட்ப மற்றும் பொருட் கொள்வனவுப் பிரிவு………………………………………………26

9.7 நகர அபிவிருத்திப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களின் முன்னேற்றம் ……………26

9.7.1 வெளிப்புறச் சுற்றுவட்ட சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்……………………………...26

9.7.2 லோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம்……………………………………………………26

9.7.3 பத்தரமுல்ல தனிநபர் அடையாள செயலகம்……………………………………………...27

9.7.4 நகர மீள் எழுச்சிக் கருத்திட்டம்……………………………………………………………...27

10 ..........................................................................................................................................

ஊடக நிலையம் ...........................................................................................................29

10.1 மேலோட்டப் பார்வை ..................................................................................................29

10.2 2014 இல் பெற்ற அடைவுகள் ........................................................................................29

10.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு......................................29

10.4 எதிர்கால வாய்ப்புக்கள்...................................................................................................30

11 ...............................................................................................................................31

இராணுவத் தொடர்பு அலுவலகம் ..........................................................................................31

11.1 மோலோட்டப் பார்வை .....................................................................................................31

11.2 2014 இல் பெற்ற அடைவுகள் ............................................................................................33

11.3 பகுப்பாய்வும் மதிப்பாய்வும் ...................................................................................................33

11.4 எதிர்கால வாய்ப்புக்கள்......................................................................................................35

நிறுவனங்களின் செயலாற்றுகை…………………………………………………………………36

12 ...............................................................................................................................37

கரையோரக் காவற்படைத் திணைக்களம் ................................................................................37

12.1 மேலோட்டப் பார்வை ........................................................................................................37

12.2 20014 ஆம் ஆண்டில் பெற்ற அடைவுகள் .............................................................................37

12.2.1 செயற்பாடு சார்ந்தவை .................................................................................................37

12.2.1.1 உயிர் காப்பு நடவடிக்கைகள்…………………………………………………………...37

12.2.1.2 சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்கான கரையோரக் கண்காணிப்பு……………………38

12.2.1.3 சட்டவிரோத, கட்டுப்பாடு மீறிய, மற்றும் அனுமதி பெறப்படாத மீன்பிடித்தல்களை கண்காணித்தல்……………………………………………………………………………..38

12.2.1.4 சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகள்……………………………………………………..38

12.2.1.5 தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள்……………………………………………………..38

12.2.1.6 சட்ட அமுலாக்க நடவடிக்கைகள்………………………………………………………...38

12.2.1.7 ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்……………………………………………………………..38

12.2.1.8 வெளிநாட்டு பிரதிநிதிகளுடனான இடைத்தொடர்புகள்……………………………………39

12.2.2 பயிற்சி நடவடிக்கைகள்……………………………………………………………………......39

12.2.3 திறன் கட்டியெழுப்புகை நடவடிக்கைககள……………………………………………………...39

12.2.4 2014 இல் இடம்பெற்ற நிா்மாணிப்பு.: தொழில்நுட்பம் சாா்ந்த பிரதான நடவடிக்கைகள்................39
12..3 பகுப்பாய்வு/ மதிப்பாய்வு ....41
12.3.1 பாரிய கருத்திட்டங்கள் ....42
12.3.2 மதிப்பாய்வும் கற்றுக்கொண்ட விடயங்களும் ....42
12.4 பிரச்சினைகளும் சவால்களும் ....42
12..5 எதிர்கால வாய்ப்புக்கள் ....43
13 ....44
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் ....44
....44
13.1 மேலோட்டப் பார்வை ....44
13.2 2014 இல் பெற்ற அடைவுகள் ....44
13.2 பொருட்கொள்வனவு நடவடிக்கைகள் ....45
14 ....50
ஆட்பதிவுத் திணைக்களம் (னுசீ) ....50
14.1 மேலோட்டப் பார்வை ....50
14.2 மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடைவுகளும் பகுப்பாய்வும் ....50
14.3 பிரச்சினைகளும் சவால்களும் ....53
14.4 எதிர்கால வாய்ப்புக்கள் ....53
15 ....54
சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ....54
15.1 மேலோட்டப் பார்வை ....54
15.2 201 இல் பெற்ற அடைவுகள் ....54
15.3 2014 இல் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய பகுப்பாய்வு.: மதிப்பாய்வு ....55
15.4 பிரச்சினைகளும் சவால்களும் ....55
15.5 எதிர்கால வாய்ப்புக்கள் ....56
16 ....57
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் ....57
16.1 மேலோட்டப் பார்வை ....57
16.2 2014 இல் பெற்ற அடைவுகள் ....57
16.3 2014 இல் முன்னெடுக்கப்பட்ட பகுப்பாய்வு/ மதிப்பாய்வு நடவடிக்கைகள் ....59
16.4 பிரச்சினைகளும் சவால்களும் ....60
16.5 எதிர்கால வாய்ப்புக்கள் ....61
17 ....62
அரச உளவுத்துறைச் சேவை (ளுஐளு) ....62
17.1 மேலோட்டப் பார்வை ....62
17.2 2014 இல் பெற்ற அடைவுகள் ....62
17.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு ....62
17.4 பிரச்சினைகளும் சவால்களும் ....62
17.5 எதிர்கால வாய்ப்புக்கள் ....63
18 ....65
தேசிய கடேட் படை ....65

18.1 மேலோட்டப் பார்வை ....65
18.2 2014 இல் பெறப்பட்ட சாதனைகள் ....65
18.2.1 கடேட் பயிற்சி ....65
18.2.2 வெளிநாட்டுப் பயணங்கள் ....68
18.2.3 அலுவலருக்கான பயிற்சி ....69
18.3 பிரச்சினைகளும் சவால்களும் ....69
18.4 எதிர்கால வாய்ப்புக்கள் ....69
19 ....71
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (முனுரு) ....71
....71
19.1 மேலோட்டப் பார்வை ....71
19.2 யுஉாநைஎநஅநவெள ைை 2014 ....71
19.2.1 பல்கலைக்கழக வைத்தியசாலையின் தாபிப்பு ....71
19.2.2 இணைந்த சுகாதார விஞ்ஞானப் பீடத்தை வெரஹரவிற்கு இடமாற்றல் ....71
19.2.3 சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்களத்தின் தென் பிராந்தி வளாகத்தைத் தாபித்தல் ....72
19.2.4 பட்டப் படிப்பிற்கான பீடத்தின் கட்டட நிர்மாணிப்பு ....72
19.2.5 பல்கலைக்கழக அச்சகத்தைத் தாபித்தல்....72
19.2.6 கடேட் அலுவலர்களின் 20 குடியிருப்புக்களுக்கான வதிவிட வசதியை மேம்படுத்தல்....72
19.2.7 24 x 7 அளவுடைய விஞ்ஞானத் துறையினருக்கான திறந்த வழிக் கொள்கையின் பேரிலான ஆராய்ச்சி ஆய்வுகூடம்....72
19.2.8 பொறியியல் பீட கட்டட நிர்மாணம்**நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகைநைன.** ....72
19.2.9 கந்தவள ஏரியின் புத்தாக்கம் ....73
19.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு ....73
19.4 பிரச்சினைகளும் சவால்களும் ....74
19.5 எதிர்கால வாய்ப்புக்கள் ....74
....76
20 ....
பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி (னுளுஊளுஊ) ....76
20.1 மேலோட்டப் பார்வை ....76
20.2 2014 இல் பெற்ற அடைவுகள் ....76
20.2.1 பிரதான நடவடிக்கைகள் ....76
20.2.1.1 பயிற்சிகள் ....76
20.2.1.2 விஜயங்கள் ....76
20.2.2 விசேட நிகழ்வுகள் ....77
20.2.2.1 வெளிநாட்டுப் பிரமுகர்களின் விஜயங்கள ....77
20.2.3 கல்வி சார் நிகழ்ச்சித்திட்டடங்கள் ....78
20.2.4 பட்டமளிப்பு விழா ....79
அட்டவணை 19.2 : கல்லூரியின் பாடநெறி இல. 8 இன் பெறுபேறுகள் ....79
20.2.4 எட்டப்படாத இலக்குகள் ....79
20.2.5 திறன் அபிவிருத்தி ....79
20.3 முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பகுப்பாய்வு ....79

20.4 பிரச்சினைகளும் சவால்களும் ....79
20.5 எதிர்கால வாய்ப்புக்கள்....80
21 ....81
பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி....81
21.1 மேலோட்டப் பார்வை ....81
21.2 2014 இல் பெற்ற அடைவுகள் ....81
21.3 2014 இல் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு ....82
21.4 பிரச்சினைகளும் சவால்களும் ....82
21.5 எதிர்கால வாய்ப்புக்கள்....82
22 ....83
கூட்டான சேவைகள் மொழி மற்று பயிற்சி நிறுவகம்....83
22.1 மேலோட்டப் பார்வை ....83
22.2 2014 இல் பெற்ற அடைவுகள் ....83
22.2.1 பிரதான செயற்பாடுகள்....83
22.2.2 2015 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட பணிகள் ....83
22.2.3 கற்றுக்கொண்ட விடயங்கள்....83
22.3 நிறுவகம் எதிர்கொண்ட பிரச்சினைகள்....83
22.4 எதிர்கால வாய்ப்புக்கள்....83
23 ....84
லங்கா லாஜிஸ்டிக்ஸ் அன் ரெக்னோலாஜீஸ் லிமிடட் (டுடுவுடு) ....84
23.1 மேலோட்டப் பார்வை ....84
23.2 2014 ஆம் ஆண்டில் பெற்ற அடைவுகள்....84
23.2.1 பிரதான நடவடிக்கைகள்....84
23.2.2 திறன் கட்டியெழுப்புகை ....84
23.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு....85
23.4 பிரச்சினைகளும் சவால்களும்....86
23.5 எதிர்கால வாய்ப்புக்கள்....86
23.5.1 நடுத்தரக காலத்தில் (216-2018) நிறுவனத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.....86
23.5.2 நிறுவனத்தை மேம்படுத்துவதற்காக நீண்ட காலம் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள.....86
நடவடிக்கைகள் ....86
24 ....87
ரக்ணா ஆரக்'க லங்கா லிமிடட் (சுயுடுடு)....87
24.1 மேலோட்டப் பார்வை ....87
25 ....89
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை ....89
25.1 மேலோட்டப் பார்வை ....89
25.2 2014 இல் பெற்ற அடைவுகள.....89
25.3 பிரச்சினைகளும் சவால்களும் ....91
25.4 எதிர்கால வாய்ப்புக்கள்....91

26 ........................................................................................................................................................92
நகர அபிவிருத்தி அதிகாரசபை (ருனுயு) ........................................................................................................92
26.1 மேலோட்டப் பார்வை ..............................................................................................................................92
26.2 2014 இல் பெற்ற அடைவுகள் ......................................................................................................................92
26.3 எதிர்கால வாய்ப்புக்கள் ..............................................................................................................................92

# பிரிவுகள் வாரியாக செயலாற்றுகை

# 01
# பாதுகாப்புப் பிரிவு

## 1.1 மேலோட்டப் பார்வை

பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்புப் பிரிவானது முப்படைகளினதும் அனைத்துவிதமான தாபிப்புகள் மற்றும் நிர்வகம் சார்ந்த விடயங்களுக்கு பொறுப்பாகவுள்ளதோடு, இப்பிரிவானது ஐ.நா. வின் அமைதிகாக்கும் பணியிலுள்ள இலங்கை இராணுவப் பிரிவுடன் தொடர்பான வெளிநாடுசார் விடயங்களிலும் கடப்பாட்டினைக் கொண்டுள்ளது.

## 1.2 2014 இல் பெற்ற அடைவுகள்

### 1.2.1 பிரதான செயற்பாடுகளும் அவற்றின் முன்னேற்றமும்

பாதுகாப்புப் பிரிவின் பிரதா செயற்பாடுகளும் அதன் வெளியீடுகளும் கீழுள்ள அட்டவணையில் சுருக்கமாக விபரிக்கப்படுகிறது.

**அட்டவணை 1.1: 2014 இல் இடம்பெற்ற தாபிப்புக்களும் பதவியுயர்வுகளும்**

| சேவை | ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கை | பதவியுயர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ளுடுயு | 35 | 680 |
| ளுடுே | 109 | 712 |
| ளுடுயுகு | 11 | 80 |

**அட்டவணை 1.2: நட்டஈட்டு விருதுகள்**

| வகை | ளுடுயு | ளுடுே | ளுடுயுகு |
|---|---|---|---|
| இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட இராணு உத்தியோகத்தர்களின் ஆதரவிலுள்ளோருக்கு | 33 | - | - |
| ஏனைய காரணங்களினால் மரணித்த இராணுவ வீரர்களின் ஆதரவிலுள்ளோருக்கு | 51 | 12 | 07 |
| மாற்றுத்திறன் கொண்ட இராணுவ வீரர்களுக்கு | 230 | - | 03 |
| ஒருமுறை மீள்திருமண செய்த மரணித்த வீரர் மனைவிக்கு | 151 | 08 | 02 |
| 26 வயதுக்குக் கீழுள்ள பிள்ளைகளுக்கு | 27 | 03 | 02 |

**அட்டவணை 1.3: வெளிநாடுகளினால் வழங்கப்பட்ட பயிற்சி நெறிகள்**

| | |
|---|---|
| இந்தியா | **439** |
| பாகிஸ்தான் | 230 |
| பங்களாதேஷ் | 43 |
| சீனா | 74 |
| மலேசியா | 31 |
| ஐக்கிய அமெரிக்கா | 27 |
| அவுஸ்திரேலியா | 01 |
| ஜப்பான் | 10 |
| நேரடியாக ஏனைய நாடுகளினால் வழங்கப்பட்ட பயிற்சி நெறிகள் | 86 |
| வெளியக வளங்கள் திணைக்களத்தினூடாக ஏனைய நாடுகளினால் வழங்கப்பட்ட பயிற்சிநெறிகள் | 86 |

**அட்டவணை 1.4: அனைத்து தரங்களுக்குமான கெலன்ரி வீர விருதுகளும் பதக்கங்களும்**

| | ளுடுயு | ளுடுே | ளுடுயு கு |
|---|---|---|---|
| ஏமுீ | 01 | - | 265 |
| ீளுஏ | - | 52 | - |
| நீண்டகால சேவைக்கான பதக்கங்கள் | - | 1860 | 1586 |
| முளுீ | 16 | - | - |
| ருளுீ | 2281 | 529 | 194 |
| ஏளுீ | - | 205 | - |
| ஞுீளு | - | 07 | 15 |
| ீளுஊ | - | 3023 | 377 |

ஐ.நா. அமைதிகாக்கும் பணியிலுள்ள இலங்கை வீரர்கள் 2014 இன் முதல் இரண்டு காலாண்டுகளின் போது 16.73 மில்லியன் ஐ.அ.டொலர் அந்நியச்செலாவணியை ஈட்டியுள்ளனர்.

(ளுடுயு - இலங்கை இராணுவப்படை, ளுடுே - இலங்கை கடற்படை, ளுடுயுகு - இலங்கை விமானப்படை)

**அட்டவணை 1.5: அமைதிகாக்கும் பணியில் வீரர்களின் ஈடுபடுத்துகை**

| | இராணுவப் படை | கடற்படை | விமானப்படை |
|---|---|---|---|
| ஹைட்டி | 892 | 84 | 85 |
| லெபான் | 151 | - | - |
| கொங்கோ | 04 | - | - |
| அபீ | 06 | - | - |
| தென் சூடான் | 02 | - | - |
| மேற்கு சஹரா | 03 | - | - |
| நியுயோக் பணியகம் | 01 | - | - |
| மொத்தம் | 1081 | 84 | 85 |

### 1.2.2 2014 இன் போது மேற்கொள்ளப்பட்ட திறன் விருத்திச் செயற்பாடுகள்

முப்படையினரினருக்குமான திறன் விருத்திச் செயற்பாடுகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சியளிப்பு வாய்ப்புக்களை விரிவாக வழங்கியதன் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. இப்பயிற்சிகள் குறுங்காலப் பயிற்சிகளாகவும் நீண்டகாலப் பயிற்சிகளாகவும் இருந்ததோடு, இது பிராந்திய நாடுகளான இந்தியா மற்றும் பாகிஸ்தான் சார்ந்தவை உள்ளிட்ட, சீனா முதல் ஐக்கிய அமெரிக்கா சார்ந்தவை வரையிலான ஒழுக்க நடைமுறைகளை விரிவான தன்மையில் உள்ளடக்கியிருந்தன.

## 1.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகள்/ மதிப்பாய்வு நடவடிக்கைகள்

பாதுகாப்புப் பிரிவானது முப்படையினருக்கும் பொது மக்களுக்குமாக அவர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையிலான சேவைகளை வழங்கி வருகிறது. இச்சேவையின் விளைவினை பணத்தினால் மதிப்பீடுசெய்ய முடியாவிடினும் இது இராணுவப் படையினர் மூலம் அதிக திருப்தியைப் ஈட்டியுள்ளது. 2014 இல் வழங்கப்பட்ட இச்சேவையின் மதிப்பாய்வானது முனைப்பானதும் உரிய வேளையிலானதுமான பதிலளிப்பின் தேவைப்பாட்டினை சுட்டிக்காட்டுவதோடு, இதனை அரசாங்க ஆவணச் செயலாக்கத்தின் 3-நாள் விதிமுறையினைக் கடைப்பிடித்ததன் மூலம் இப்பிரிவு அடைந்துள்ளது.

## 1.4 பிரச்சினைகளும் சவால்களும்

துணைப் பணியாட்தொகுதியிலான மனித வளப் பற்றாக்குறையே இப்பிரிவு எதிர்கொண்ட பாரிய பிரச்சினையாகும். இது இராணுவப்படையினரின் கோரிக்கைகளுக்கு உரிய வேளையில் பதிலளிப்பதற்கானதொரு சவாலை தோற்றுவித்திருந்தது. அமைச்சின் நிர்வாகப் பிரிவானது மேலதிக தாமதங்களின்றி தேவைப்பட்ட வகைகளுக்கான மனித வளத்தை மேம்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட அரச அமைச்சுக்களுடனான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## 1.5 எதிர்கால வாய்ப்புக்கள்

இப்பிரிவிலுள்ள ஊழியர்களைத் தேவையான துறைகளில் பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் பணியாட்தொகுதியினர் மற்றும் துணைப் பணியாட்தொகுதி வகையினர் ஆகிய இருவரும் அடங்குகின்றனர். இத்தேவைப்பாடுகளுக்கு தீர்வளிக்கும் வகையிலமையக்கூடிய அவசியமான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும் வகையிலான பயிற்சி வாய்ப்புக்கள் மற்றும் செயலமர்வுகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நட்பு நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பயிற்சிகளும் செயலமர்வு வாய்ப்புக்களும், அனைத்து ஊழியர்களும் திறன் விருத்திக்கான சம வாய்ப்பினைப் பெறுவதை உறுதிப்படுத்தும் நோக்கில், ஒரு சுழற்சி முறையில் வழங்கப்படவுள்ளன. இச்சுழற்சி முறையானது வருடத்திற்கு இரு முறை என்றதொரு அடிப்படையில் வழங்குவதற்கு திட்டமிடப்படுகிறது.

# 02
# தொழில்நுட்பப் பிரிவு

## 2.1 மேலோட்டப் பார்வை

பாதுகாப்பு அமைச்சின் தொழில்நுட்பப் பிரிவானது நாட்டின் பாதுகாப்பு குறித்தான தொடர்பாடல்கள் மற்றும் பொறியியல் சார்ந்த அம்சங்கள் ஆகியன தொடர்பில் ஈடுபடுவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள அதேவேளை, நாட்டு மக்களினால் பயன்படுத்தப்படக்கூடிய தனது பிரயோகங்களின் பயன்பாட்டு மற்றும் அவற்றின் விருத்திக்கான உபாயங்களை வகுப்பதற்குமான பொறுப்பினையும் கொண்டுள்ளது. தொடர்பாடல் பற்றிய நோக்கெல்லையானது வானொலி தொடர்பாடல், தொலைத்தொடர்பாடல் சேவைகள், தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள், தரவுத் தொடர்பாடல் ஆகியவற்றை உள்ளடக்குவதோடு, நாட்டின் பாதுகாப்பைப் பாதிக்கக்கூடிய தொடர்பாடல், ஊடுருவல் மற்றும் கண்காணிப்புக் கருவிகளின் இறக்குமதி, பொருத்துகை மற்றும் அவற்றை இயக்குதல் போன்றன தொடர்பில் அவதானம் செலுத்தல் மற்றும் இவை தொடர்பில் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வேண்டப்படுகின்றவாறான அங்கீகாரத்தை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. பொறியியல் சார்ந்த நோக்கெல்லையானது தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை, அரசாங்கத்தினால் அறிவுறுத்தப்பட்டவாறு நாடளாவிய ரீதியிலான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்குத் தேவையான சிவில் மற்றும் கள பொறியியல் ஆதரவினை உள்ளடக்குகின்றது.


தொழில்நுட்பப் பிரிவானது நாட்டின் பாதுகாப்பு தொடர்பிலான தொடர்பாடல் மற்றும் பொறியியல் சார்ந்த விடயங்கள் மீதான ஒருங்கிணைப்பினையும் இடைத்தொடர்பினையும் சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் மேற்கொள்கின்றது.

அனேக கருத்திட்டங்கள் இத்தொழில்நுட்பப் பிரிவின் கீழ் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டன. பாரிய கொழும்பு நகர அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் பாதுகாப்பு தலைமைச் செயலக இடமாற்றக் கருத்திட்டம் ஆகியன இப்பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட பாரிய கருத்திட்டங்களாகும். மேலும், இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம், மற்றும் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான மையம் ஆகியவற்றினால் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களும் தொழில்நுட்பப் பிரிவினால் கையாளப்பட்டன.

## 2.2 2014 இல் இடம்பெற்ற நடவடிக்கைகள் தொடர்பிலான சாதனைகளும் பகுப்பாய்வும்

இப்பிரிவானது, 191 கோபுரங்களை நிர்மாணிப்பதற்கான பாதுகாப்பு அங்கீகாரங்கள், 595 எண்ணிக்கையான தொடர்பாடல்.'. ஊடுருவல் கருவிகளை இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரம், மற்றும் இலத்திரனியல்.'. தொடர்பாடல் சார்ந்த கருவிகள் குறித்தான 222 சேவையாளர் உரிமங்களுக்கான பாதுகாப்பு அங்கீகாரம் ஆகியவற்றை 2014 இல் வழங்கியது.

**வரைபு 2.1: 2014 இல் கோபுரங்களுக்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு அங்கீகாரம்**




மேலும், கொங்கல, பீதுருதலாகலை, கரகஸ்தென்ன, மதுகந்த, கந்தானை, கிகிலியாமன மற்றும் கொக்கவில் போன்ற இடங்களிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலய தொடர்பாடல் கணுக்களைப் பார்வையிடுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, மீன்பிடிப் படகுகளுக்கான தொடர்பாடல், ஊடுருவல் கருவிகள் மற்றும் வெளி மோட்டார்களை இறக்குமதிசெய்தல், வானொலி அலைவரிசைகளை ஒதுக்குதல் மற்றும் உணர் கோபுரங்களை நிர்மானித்தல், மற்றும் ஆர்மேசர் வானொலி உரிமம் உடையவர்களுக்கான (உள்நாட்டு.'. வெளிநாட்டு) வாகன தடய முறைமை மற்றும் தொடர்பாடல் கருவிகளை இறக்குமதி செய்தல் ஆகியவற்றுக்குமான அங்கீகாரமும் வழங்கப்பட்டன.

**உபாய முறையிலான பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்புக் கருத்திட்டம்**

உபாய முறைப் பாதுகாப்புத் தொடர்பாடல்கள் வலையமைப்புக் கருத்திட்டமானது ஒரு சாதாரண பாதுகாப்புமிக்க தொடர்பாடலை வழங்குகின்றது. இது முப்படைகள், பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படை ஆகியன தொடர்பான முன்தெரிவுசெய்யப்பட்ட

முனைப்புள்ளிகளை இணைக்கின்றன 37 நுண்ணலை இணைப்புக்களைக் கொண்டிருக்கும்.

2014 இல், கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவு நியமிக்கப்பட்டதோடு, 04 கருத்திட்டப் பொதிகளுக்கான வரைவு செய்யப்பட்ட கேள்விமனுக்களும் தயாரிக்கப்பட்டன.

**பிரச்சினைகளும் சவால்களும்**

புதிய 11 உணர் கோபுரத் தளங்களைத் தெரிவுசெய்தல் மற்றும் காணி உரிமையாளர்களிடமிருந்து தேவையான காணியைக் கையகப்படுத்தல் போன்ற விடயங்களில் பிரச்சினைகள் காணப்பட்டன.

**பொலிஸ் தகவல் மற்றும் தொடர்பாடல் வலையமைப்புக் கருத்திட்டம்**

திறைசேரியின் நிதியளிப்புடனான பொலிஸ் தகவல் மற்றும் தொடர்பாடல் முறைமைக் கருத்திட்டமானது, இலங்கைப் பொலிஸார் பொதுமக்களின் பாதுகாப்பினை வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் வழங்குவதை இயலச் செய்வதற்கான பொதுமக்கள் பாதுகாப்பு வலையமைப்பொன்றின் இயக்கத்தினை இலக்காகக் கொண்டதாகும்.

கேள்விமனு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதோடு, நாட்டின் வட மாகாணப் பிரதேசங்களில் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான தொடர்பாடல் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன.

**பிரச்சினைகளும் சவால்களும்**

இனங்காணப்பட்ட அதிர்வெண் வரிசையிலுள்ளவற்றை (418-432ஆர்ண) நீக்குதல் மற்றும் தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலைப் பெறுதல்.

**பாதுகாப்பு தலைமை அலுவலகங்களின் இடமாற்றல் கருத்திட்டம்**

பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்புப் பணியாட்தொகுதியின் பிரதானி அலுவலகம், மற்றும் இராணுவப்படை, கடற்படை, ஆகாயப்படையின் தலைமை அலுவலகம் ஆகியவற்றை இடமாற்றும் வகையில், அகுரகொடயில் 56 ஏக்கர் பரப்பிலான பாதுகாப்பு தலைமை அலுவலகத் தொகுதியின் நிர்மானிப்பானது 2011 இல் ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா. 53.2 பில்லியனாவதோடு, 2019 இன் நிறைவில் இதன் பணிகள் நிறைவடைவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

2014 இல், இக்கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 35 சதவீதமாகும். பாதுகாப்புப் பணியாட்தொகுதியினரின் பிரதானி அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட கட்டடத்தின் 80 சதவீத கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளதோடு, இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப்படைக்கான கட்டடத்தொகுதியில் 60 சதவீதம் பூர்த்தியடைந்த அதேவேளை, பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட கட்டடத் தொகுதியானது கிட்டத்தட்ட 25 சதவீதமும் முடிவடைந்துள்ளது.













**பாரிய கொழும்பு நகர அபிவிருத்திக் கருத்திட்டம்**

பாரிய கொழும்பு நகர அபிவிருத்திக் கருத்திட்டமானது 2014 இன் போது அதன் இடைக்கால அளவை வெற்றிகரமாக எட்டியுள்ளது. மொத்தமான 63 பணிப் பொதியில் 14 பொதிகள் நிறைவடைந்துள்ளதோடு, 17 பொதிகள் இடம்பெற்று வருகின்ற அதேவேளை, எஞ்சிய 32 பொதிகள் வடிவமைப்புக் கட்டத்தில் அல்லது சம்பந்தப்பட்ட அமுலாக்கல் முகவரின் பரீட்சிப்பின் கீழ் உள்ளன.

அமுலாக்கல் முகவர்களின் மற்றும் உள்;ராட்சி அதிகாரசபைகளின் திறன் கட்டியெழுப்புகைக்கு இலக்கிடப்பட்ட 22 பணிப் பொதிகளில் 05 பொதிகள் நிறைவடைந்துள்ளதோடு, 03 பொதிகள் இடம்பெற்றுவருகின்ற அதேவேளை, எஞ்சிய 14 பணிப் பொதிகள் பூர்த்தியடையவுள்ளன. திட்டமிடப்பட்ட 37 ஆலோசனைத் தொகுப்புக்களில் எட்டுப் பொதிகள் நிறைவடைந்துள்ளதோடு, 12 பொதிகள் இடம்பெற்றுவருகின்ற அதேவேளை, எஞ்சிய 17 பொதிகள் திட்டமிடல் கட்டத்திலுள்ளன.

கொழும்பு மாநகர சபை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகர சபை மற்றும் தெஹிவளை-கல்கிஸ்ஸ மாநாகர சபை ஆகியவற்றின் கீழான அனேக உட்கட்டமைப்பு அபிவிருத்தி உப கருத்திட்டங்கள் 2014 இல்

பூர்த்தியடைந்தன. தாரிடல், வீதியோர வடிகால் மேம்பாடுகள், நடைபாதை மேம்பாடுகள், வீதிச் சமிக்ஞைகள், பொதுமக்கள் சொகுசு வசதிகள் ஆகியன இதிலுள்ள சில அம்சங்களாகும். அனேக உப கருத்திட்டங்கள் 2014 இன் போது ஆரம்பித்து வைக்கப்பட்டன.


**நிதிசார் முன்னேற்றம்**

மொத்தமாக மதிப்பிடப்பட்ட கருத்திட்டச் செலவினம் 223 மில்லியன் ஐ.அ.டொலா்களாகும். இதில் 213 மில்லியன் ஐ.அ.டொலா்கள் உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்டதோடு, எஞ்சிய தொகை இலங்கை அரசாங்கத்தினுடையதாகும். 2014 ஆம் ஆண்டு நிறைவின் போதான காலம் வரை இடம்பெற்ற மொத்த கருத்திட்டச் செலவினம் கிட்டத்தட்ட 55 மில்லியன் ஐ.அ.டொலா்களாகும். கட்டுப்படுத்த முடியாத வெளியகக் காரணிகளினால் பிற்போடப்பட்ட அனேக உயா் பெறுமதியுடைய உப கருத்திட்டங்கள் பாகம்-1 இனுள் உள்ளடங்குவதனால், இது எதிா்பார்க்கப்பட்டதை விடவும் குறைந்த தொகையாக காணப்படுகிறது.

- **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மையம்**

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மையமானது 2014 ஆம் ஆண்டுக்காலத்தின் போது சில கருத்திட்டங்களை ஆரம்பித்ததோடு, முன்னைய ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சில கருத்திட்டங்களையும் முன்னெடுத்தது. தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் இலத்திரனியல் பிரிவு ஆகியவற்றினால் முன்னெடுக்கப்பட்டு தற்போது இடம்பெற்றுவரும் கருத்திட்டங்களுள் புரஜக்ட் லயன், ரயின் கண்காணிப்பு முறைமை, ஆற்றிலரி பயா் சிமியுலேட்டர், விசேட அதிரடிப்படையினருக்கான நிகழ்வு அறிக்கையிடல் முறைமை மற்றும் ஹைரெக் சோல்ஜா் ஆகியன உள்ளடங்குகின்றன.


2014 இல் ஆரம்பிக்கப்பட்ட புதிய கருத்திட்டமாக ஜீ.ஐ.எஸ் பிரயோக விருத்தியாக்கம் காணப்பட்டது. பீராங்கி இயக்கும் திறன் மற்றும் குறிபார்த்தலிலுள்ள வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் ஜி.ஐ.எஸ் மற்றும் ர்கு.ஃ.ஏர்கு.ஃ.ருர்கு ட்ரான்சீவரைப் பயன்படுத்தி, இடத்தை மையமாகக் கொண்டு அவசர நிலைமையின் போதான உடனடி இரத்த தான தேடல் பொறிமுறையினை மேம்படுத்தல் போன்றன இதன் நோக்கமாகும்.




*Location base immediate Blood*



*Development of GIS application to improve*



*Small Arm Firing Simulator*



*Underwater*



*Medium Range Unmanned Aerial*



*Prison Jammer Project*

- **இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (ளுடுசுனுஊ)**

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனமானது கொழும்பு பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்படக்கூடிய இடரினைக் குறைக்கும் வகையிலான விசேடமான அனேக கருத்திட்டங்களை 2014 இல் மேற்கொண்டது. மேலும், இது நாட்டின் நிர்மாணக் கைத்தொழிலுக்கான கடல் மணலைப் பயன்படுத்தல் தொடர்பில் கடல் மணல் கருத்திட்டமொன்றை ஆரம்பித்தது.

**இவ்வாண்டுக்காலத்தில் பூர்த்தியடைந் கருத்திட்டங்கள்**

- புளுமன்டல், மட்டக்குளி, காக்கைதீவு ஆகிய பிரதேசங்களிலும் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் வடிகால் மேம்பாடு மற்றும் நிலவடிவமைப்பு பணிகள்.
- முதுன்எல, பேலியகொட, ஒலியமுல்லை, களனி, மற்றும் கிரிபத்கொட பிரதேசங்களிலும் இவற்றை அண்டிய பிரதேசங்களிலும் வடிகால் அபிவிருத்தி, வெள்ளப்பெருக்கு கட்டுப்பாடு மற்றும் நகரின் நிலத்தோற்ற மேம்பாடு.
- இத்தம்பகுவ கால்வாய், கொலன்னாவை, மீதொடமுல்ல, முல்லேரியா, மற்றும் அங்கொட போன்ற பிரதேசங்களிலும் இவற்றை அண்டிய பிரதேசங்களிலும் வெள்ளத்தணிப்பு பணிகள் மற்றும் நிலதோற்ற மேம்பாடு.
- பொல்கொட கால்வாய் மற்றும் அதனைச் சூழ்ந்த பிரதேசத்தில் வெள்ளத் தணிப்பு மற்றும் நிலத்தோற்ற மேம்பாட்டு நடவடிக்கைகள்.
- பாராளுமன்றத்தை அண்டிய உயர் நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு கட்டுப்பாடு, சுற்றாடல் மேம்பாடு, தரைத்தோற்ற மேம்பாடு.
- ஹீன் எல சதுப்பு பிரதேசம், பாகொட பிரதேசம், மற்றும் கிருளப்பனை-ஹீன் எல எல்லை உள்ளிட்ட அதன் சுற்றுப்பிரதேசங்களில் வடிகால் மேம்பாடு மற்றும் நகர அபிவிருத்தி.
- பெய்ரா குளத்தின் கால்வாய் நுழைவுகள் மற்றும் அதன் அனைத்துச் சுற்றுப்புறத்திலுமுள்ள வெளியேறல் வழிகளில் தூர்வாரல் மற்றும் புனரமைப்புப் பணிகள்.
- மாளிகாவத்தை, அப்பிள்வத்தை பிரதேசங்கள் மற்றும் அவற்றை அண்டிய பிரதேசங்களில் வடிகால் மேம்பாடுகள்.

- லுனாவை கால்வாய் வலையமைப்பு, லுனாவை குளம் மற்றும் அதனைச் சூழ்ந்த பிரதேசத்தில் தூர்வாரல் பணிகள் மற்றும் புனரமைப்புப் பணிகள்.
- குளம் மற்றும் குட்டைகளை உருவாக்கும் பொருட்டு நீரேந்துப் பிரதேசங்களில் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் புற கால்வாய்களில் தூர்வாரல் செயற்பாடு.
- கொழும்பு மாவட்டத்தின் வெளிப் பிரதேசங்களில் வெள்ளப்பெருக்குத் தணிப்பு மற்றும் வெள்ள நீர் வடிகால் கருத்திட்டம்.
- கொழும்பினுள்ளும் அதன் புற நகர்களிலுமுள்ள பாரிய சிறிய கால்வாய்களின் பேணுகை மற்றும் ஹமில்டன் கால்வாய் பராமரிப்பு.



காக்கைதீவுக் குளம்



காக்கைதீவுக் குளம்



நீர்முனைப் பிரதேசங்களில் அபிவிருத்திச் செயற்பாடுகள்



கிம்புலாவெல பிரதேசத்தில்

## கொழும்பு மாவட்டத்திற்கு வெளியிலான விசேட வெள்ளத் தணிப்புப் பணிகள்



குளம் அபிவிருத்தி மற்றும் குருணாகல் நகரின் நிலத்தோற்ற வடிவமைப்பு



அனுராதபுர கும்பிச்சாங்குளத்தின்

- **கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம்**

இத் திணைக்களமானது கரையோர மண்ணரிப்புத் தொடர்பிலான உடனடித் தாக்கத்தைக் குறைத்தல், நீண்டகால கரையோரப் பாதுகாப்புத் தீர்வுகள், கரையோர முகாமைத்துவ உபாயங்களைத் தயாரித்தல், கரையோரக் கண்காணிப்பினை மேற்கொள்ளல், கரையோர அலை அளவீட்டு ஆய்வினை மேற்கொள்ளல், கரையோர ஆராய்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தல், கரையை அண்மித்த பிரதேச ஆழ மாற்றங்களை அவதானித்தல், கரையோர வடிவமைப்புக்கான வழிகாட்டியை இற்றைப்படுத்தல், கரையோர கண்காணிப்பும் மதிப்பாய்வும், நீடிக்கத்தக்க பயனர் நேயமிக்க கரையோர நிர்மானங்களை ஊக்குவித்தல், கரையோர வலயத்தினுள் கடல்சார் கட்டமைப்புக்களை நிர்மாணிப்பதற்கான வழிகாட்டலை வழங்கல், கரையோர அனர்த்த வரைபடங்களைத் தயாரித்தல் (சுனாமி, கடல் மட்ட அதிகரிப்பு, கடற்பேரலை மற்றும் கரையோர மண்ணரிப்பு), வெளித் தரப்பினருக்கான கரையோர பாதுகாப்பு வடிவ மீளாய்வினை வழங்கல், ஆற்றின் வடிகால் முகாமைத்துவக் கட்டமைப்புக்கான வடிவமைப்பு உதவிகளை வழங்கல், கரையோர நீரின் தரக் கண்காணிப்புத் திட்டத்தை மேற்கொள்ளல், முருகைக் கல் அகழ்வு மற்றும் கடல் மணல் அகழ்வு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தல், கரையோர அபிவிருத்திக்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டினை மேற்கொள்ளல், உரிமப் பத்திரம் தொடர்பிலான இணக்கப்பாட்டின உறுதிப்படுத்தல், பாடசாலைகளுக்கான சம்பந்தப்பட்ட பாடத்திட்ட அபிவிருத்தி உள்ளிட்ட கரையோரம் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வினை மேம்படுத்தல், கரையோர வள முகாமைத்துவத்திலான சமுதாயத்தின் பங்களிப்பினை ஊக்குவித்தல், கரையோர முகாமைத்துவம் தொடர்பில் சமுதாயத்தை பங்குபற்றச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் விசேட பிரதேச முகாமைத்துவத்தை அமுல்படுத்தல், பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், பாதுகாப்புப் பிரதேசங்கள் மற்றும் விசேட முகாமைத்துவப் பிரதேசங்களைப் பிரகடனம் செய்தல், மற்றும் அத்தகைய பிரதேசங்களுக்கு பொருத்தமான முகாமைத்துவத்தை வழங்கல், கரையோரப் பூங்காக்களை அமைத்தல், கரையோர அணுகல் திட்டத்தை தயாரித்து அதற்கான வசதியேற்பாட்டினை வழங்கல், கரையோர வலயங்களில் சட்டவிரோத நிர்மாணிப்புகளையும் மற்றும் சட்டவிரோதமாக காணிகளை அல்லது நீர் நிலைகளை நிரப்புதல் போன்றவற்றையும் கட்டுப்படுத்தல் ஆகிய தொடர்பிலான கருத்திட்டங்களை 2014 இல் மேற்கொண்டது. இவை தவிர, சில அவசர பாதுகாப்புத் தளங்களும் மற்றும் ஏற்கனவேயுள்ள பாதுகாப்புக் கட்டமைப்புக்கள் தொடர்பான புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

திணைக்களத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூபா. 1402.9 மில்லியனாகவுள்ள அதேவேளை, மொத்தச் செலவினம் ரூபா. 1094.2 மில்லியனாகும். இது ஒட்டுமொத்த முன்னேற்றத்தின் 78 சதவீதமாகும்.



கட்டுனெரிய



மணல்



மாத்தறை பிரவுன்



வெல்லமங்காரையில் கடலரிப்புத் தடுப்பான் கிட்டம்

# 03
# பாராளுமன்ற மற்றும் சிவில் விவகாரங்களுக்கான பிரிவு

## 3.1 மேலோட்டப் பார்வை

மேற்படி பிரிவானது பின்வரும் செயற்பாடுகளைக் கையாளுகின்றது.

-  முப்படையினருக்குமான முகாம்கள் மற்றும் படைப்பிரிவுக் கட்டடங்களை தாபித்தல் சம்பந்தமான காணி பற்றிய விடயங்கள்.
-  அமைச்சுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள்.
-  முப்படையினருக்குமான சீருடைகள் மற்றும் துணிகளை வழங்கல்.
-  பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் செயற்படல்.
-  ஆட்பதிவுத் திணைக்களம், ரணவிரு சேவா அதிகாரசபை, மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை ஆகியவற்றின் அனைத்து தாபனம் மற்றும் நிர்வாக விடயங்களை மேற்பார்வை செய்தல்.
-  இப்பிரிவின் உள்ளக நிர்வாக விடயங்கள்.

## 3.2 2014 ஆம் ஆண்டில் பெற்ற அடைவுகள்

### 3.2.1 முப்படையினருக்குமான முகாம்கள் மற்றும் படைப்பிரிவுக் கட்டடங்களைத் தாபிப்பதற்கான காணி பற்றிய விடயங்கள்

முப்படைக்குமான புதிய பிரிவுகளைத் தாபித்தல் மற்றும் ஏற்கனவேயுள்ள பிரிவுகளை விரிவாக்கம் செய்தல் போன்ற நோக்கில் காணிகள் ஒதுக்கம் மற்றும் காணி கையகப்படுத்தல் தொடர்பிலான செயற்பாடுகள் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், காணி அமைச்சு, மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் போன்ற சம்பந்தப்பட்ட அரச மற்றும் தனியார்த்துறை நிறுவகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றுடனான ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்டது.

பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன,

-  காணி ஒதுக்கம்.: காணி கையகப்படுத்தலுக்கான பிரேரணைகளை முப்படைகளிடமிருந்து பெறுதல்.
-  சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் மூலம் பரிந்துரைகளையும் அவதானிப்புக்களையும் பெறுதல்.
-  சம்பந்தப்பட்ட ஆவணங்களை காணி அமைச்சின் செயலாளருக்கும் காணி ஆணையாளர் நாயகத்திற்கும் அனுப்புதல்.
-  நில அளவை தொடர்பான விடயங்களில் ஒத்துழைப்பு வழங்கல் மற்றும் மதிப்பாய்வு அறிக்களைகளைப் பெறுதல்.
-  காணிகளுக்கான நட்டஈட்டினைச் செலுத்துவதற்கான திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
-  முக்கிய தீர்மானங்களுக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
-  காணி உரிமையாளர் தொடர்பில் இடம்பெறக்கூடிய உறுதியற்ற நிலைமையின்போதும் இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டிய விசேட சந்தர்ப்பங்களின் போதும் கள விஜயங்களை மேற்கொண்டு பரீட்சித்தல்.
-  காணி ஒதுக்கம்.: கையகப்படுத்தல் தொடர்பில் எழக்கூடிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அமைச்சரவைக் கூட்டங்கள்.: கலந்துரையாடல்கள்.
-  இவை தவிர, முப்படையினராலும் இடங்கொள்ளப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதன் ஒரு அம்சமாக, உரிய சொந்தக்காரர்களுக்கு காணிகளை மீள வழங்கல் தொடர்பான விடயங்கள்.

### 3.2.2 பாராளுமன்றம் தொடர்பிலான விவகாரங்கள்

#### 3.2.2.1 பாராளுமன்றக் கேள்விகள்

பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து வாய் மூலமான விடைகளை எதிர்பார்க்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களால் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு, கொடுக்கப்பட்ட கால வரையறையினுள் சம்பந்தப்பட்ட பிரிவுகளிலிருந்து தேவையான தகவல்களைத் திரட்டிப் பெற்ற பின்னர் அவை மூன்று மொழிகளிலும் பதிலளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1: கேள்விகளுக்கு பதிலளித்தல்**

| ஆண்டு | வினாக்களின் எண்ணிக்கை | பதிலளிக்கப்பட்ட விளாக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2014 | 47 | 47 |

#### 3.2.2.2 பாராளுமன்ற ஆலோசனைக் குழு

இரண்டு பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் 2014.03.19 மற்றும் 2014.08.19 ஆகிய தினங்களில் இடம்பெற்றன. இவ் அமைச்சு

தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களினூடாக கேட்கப்பட்ட பொதுமக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்திற்குச் சமா்ப்பிப்பதற்கும் முன்னா் அமைச்சுடன் சம்பந்தப்பட்ட சட்டமூலங்களை அமைத்தல் அல்லது அவற்றிலான திருத்தங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான அடிப்படைப் பின்புலம் தயாரிக்கப்பட்டது.

**அட்டவணை 3.2: கேள்விகளுக்கு பதிலளித்தல்**

| இடம்பெற்ற குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை | பதிலளிக்கப் பட்ட வினாக்களின் எண்ணிக்கை | பதிலளிக்கப் பட்ட வினாக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 02 | 53 | 53 |

### 3.2.2.3 பொது மனுக் குழு

முப்படைகள் மற்றும் இவ் அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்க;டாக பொதுமக்களினால் அனுப்பப்பட்ட மனுக்களும் பதிலளிக்கப்பட்டன. பொது மனுக் குழுவானது 2014 ஆம் ஆண்டில் 02 மனுக்களை அனுப்பியதோடு அவை பதிலளிக்கப்பட்டன.

### 3.2.2.4 பாராளுமன்ற சபை ஒத்திவைப்பு வேளை மற்றும் நிலையியற் கட்டளையின் கீழான கேள்விகள்

பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து வாய் மூலமான விடைகளை எதிர்பார்க்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்படுகின்ற பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளை மற்றும் நிலையியற் கட்டளையின் கீழான கேள்விகளுக்கு, கொடுக்கப்பட்ட கால வரையறையினுள் சம்பந்தப்பட்ட பிரிவுகளிலிருந்து தேவையான தகவல்களைத் திரட்டிப் பெற்ற பின்னா் அவை மூன்று மொழிகளிலும் பதிலளிக்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டின் போது, பாராளுமன்ற சபை ஒத்திவைப்பு வேளையின் போதான 8 கேள்விகளுக்கு பதில்கள் சமா்ப்பிக்கப்பட்டதுடன், நிலையியற்கட்டளையின் கீழான 07 கேள்விகளுக்கும் பதில்கள் சமா்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 3.2.2.5 முப்படையினருக்குமான சீருடைகள் மற்றும் ஆடைகள் வழங்கல் தொடர்பிலான விடயங்கள்

முப்படைகள், பொலிஸ் திணைக்களம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தேசிய கடேட் படை ஆகியவற்றுக்கான ஆடைப் பொருட்களை கொள்வனவு செய்வதுடன் தொடர்புடைய விடயங்கள் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் ஒத்துழைப்புடன் இடம்பெற்றதோடு, இது விலைமனுக் கோரல் நடைமுறைக்கேற்ப உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்தான விலைமனுக் கோரல் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இக்கொள்கை முறையானது உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கத்தினால் பின்பற்றப்படுகிறது. 2014 ஆம் ஆண்டின் போது, 20 உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்தான ரூபா. 1,397,834 மில்லியன் பெறுமதியான ஆடைப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டது.

### 3.2.2.6 பொதுமக்களின் முறைப்பாடுகளும் மனக்குறைகளும்

பொதுமக்களினால் அமைச்சுக்கு நேரடியாகவும் மற்றும் பிரதம அமைச்சரின் அலுவலகம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஊடாகவும் அனுப்பிவைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் அவா்களின் குறைகள் தொடர்பில் துயா் தணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 3.2.2.7 ஆட்பதிவுத் திணைக்களம், ரணவிருசேவா அதிகாரசபை, அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை போன்றவற்றின் நிர்வாக விடயங்கள் தொடர்பிலான மேற்பார்வை

மேற்படி நிறுவனங்கள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- நிர்வாக விடயங்கள் தொடர்பிலான மேற்பார்வை.
- பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கைகளை அனுப்பிவைப்பதுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை ஒருங்கிணைத்தல்.
- கணக்காய்வுக் கேள்விகளுக்கான பதில்கள் தொடர்பிலான விடயங்களை ஒருங்கிணைத்தல்.
- பொது முயற்சிகள் குழுவுடன் தொடர்பான விடயங்கள்
- ஆளணி தொடர்பிலான ஒப்புதலைப் பெறுதல்.
- நிதி சார் ஏற்பாடுகளுக்கு வசதியளித்தல்.
- புதிய ஆட்சேர்ப்பு, இணைப்புகள், இடமாற்றங்கள் மற்றும் ஓய்வூபெறல்.
- விலைமனுவுக்கான ஒப்புதல்
- வெளிநாட்டு விடுமுறைகளை வழங்கல்
- பதவியுயா்வுகளுக்கான பரிந்துரை.∴ அங்கீகாரம்.

### 3.2.2.8 இப்பிரிவின் உள்ளக நிர்வாக விடயங்கள்

இப்பிரிவிலுள்ள அலுவலா்களின் அனைத்து நிர்வாக, பயிற்சியளிப்பு மற்றும் நலன்புரி விடயங்களும் வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதிமிக்க முறையிலும் மேற்கொள்ளப்பட்டதோடு, அலுவலா்கள் அவா்களது குடும்பத்தினருடன் 02 நாட்கள் சுற்றுப்பயணம் செல்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

# 04
# நிர்வாகப் பிரிவு

## 4.1 மேலோட்டப் பார்வை

நிர்வாகப் பிரிவானது பின்வருவனவற்றுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

- அமைச்சினதும் அமைச்சின் கீழே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களினதும் தாபிப்பு, நிர்வாகம், மற்றும் பேணுகை தொடர்பான விடயங்கள்.
- இணைந்த சேவைகள் மொழிப் பயிற்சி ஊடக நிலையம், அரச உளவுத்துறைச் சேவை
- பாதுகாப்பு பணியாட்தொகுதி ஆயுதப் படைச் சேவைகளின் பிரதானியின் செயலகம் மற்றும் பொலிஸ் நலன்புரிச் சேவை.
- பின்வரும் நிறுவனங்களின் சிவில் அதிகாரிகள் தொடர்பிலான தாபிப்பு மற்றும் நிர்வாகம் பற்றிய விடயங்கள்.
  - இலங்கை இராணுவப்படை
  - இலங்கை கடற்படை
  - இலங்கை விமானப்படை
  - சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
  - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
  - கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்
  - ஆயுதப்படைச் சேவைகள் மற்றும் பொலிஸ் நலன்புரிப் பிரிவு
  - தேசிய கடேட் படை
  - கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம்
  - இணைந்த சேவைகள் மொழிப் பயிற்சி நிறுவகம்
  - ஊடக நிலையம்
  - அரச உளவுத்துறை சேவை
  - பாதுகாப்புச் செயலாளரின் உத்தியோகபூர்வ வதிவிடம்

பின்வரும் நிறுவனங்களின் நிர்வாக, கொள்கை, தீர்மானமெடுத்தல், மற்றும் நிதிசார் விடயங்களும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- “அபி வெனுவென் அபி” வீடமைப்புக் கருத்திட்டம்
- “மிஹிந்து செத் மெதுர” கருத்திட்டம்

போக்குவரத்து மற்றும் அஞ்சல் பிரிவுகள் உள்ளிட்ட அமைச்சின் உள்ளகப் பிரிவுகளின் அனைத்து நிர்வாக விடயங்களும் நிர்வாகப் பிரிவின் நோக்கெல்லையின் கீழ் நேரடியாக வருகின்றன.

### 4.1.1 பொது நிர்வாகம்

அமைச்சின் உத்தியோகத்தர்களின் உயர் வினைத்திறனையும் விளைவுத்திறனையும் மேம்படுத்தல், மற்றும் அவர்களின் தனிப்பட்ட விளைவுத்திறனை மேம்படுத்தல் மற்றும் அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன், அரசாங்க பயிற்சி நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற பல்வேறு பயிற்சிநெறிகளுக்காக பணியாட்தொகுதியினரையும் பணியாட்தொகுதி சாராத அலுவலர்களையும் திசைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 4.1.2 சட்டம் தொடர்பான விடயங்கள்

நிர்வாகப் பிரிவின் கீழ் இயங்குகின்ற சட்டப் பிரிவானது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இலங்கை அரசாங்கத்திற்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவிருக்கின்ற, பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பான வரைவு உடன்படிக்கைகளுக்குத் தேவையான சட்டம் சார்ந்த தகவல்களை வழங்கல், இப்பொலகம வீடமைப்புத் திட்டம், ரணவிரு ரியல் ஸ்டார் போன்ற விசேட கருத்திட்டங்கள், உடன்படிக்கைகளைத் தயாரித்து அமைச்சுக்கும் அதனோடு இணைந்த நிறுவனங்களுக்குமான தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்கல், சட்டவரைஞர் திணைக்களத்தின் ஒத்துழைப்பின் மூலம் பாதுகாப்பு அமைச்சு சார்ந்த சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்களைத் திருத்துவதற்கான உதவியினை வழங்கல் போன்றவற்றுக்கான பொறுப்பைக் கொண்டுள்ளது.

### 4.1.3 பொறியியல் சார்ந்த விடயங்கள்

நிர்வாகப் பிரிவின் கீழ் வருகின்ற பொறியியல் பிரிவானது அமைச்சுடன் தொடர்பான விடயங்களைப் பராமரித்தல் மற்றும் அமைச்சினாலும் அதன் இணைந்த நிறுவகங்களினாலும் 2014 இல் குளியாப்பிட்டியில் இடம்பெற்ற தயட்ட கிருள தேசிய அபிவிருத்தி கண்காட்சி தொடர்பிலான நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்தமை போன்ற பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் நிர்வானப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. கிட்டத்தட்ட ரூபா. 210 மில்லியன் பெறுமதியுடைய 22 கண்காட்சிக் கூடங்கள் அமைச்சினாலும் அதனோடிணைந்த நிறுவகங்களினாலும் அமைக்கப்பட்டன.

அமைச்சு அமைந்துள்ள பிரதேசத்தினுள் சுற்றுப்புறச்சூழலைப் பேணும் வகையிலான சுற்றாடல் நேயமிக்க சிறிய மற்றும் பெரியளவிலான புத்தாக்கச் செயற்பாடுகள் பொறியியல் கிளையின் ஒருங்கிணைப்போடு முன்னெடுக்கப்பட்டன.

### 4.1.4 யுத்த வீரர்களின் நலன்புரி சார்ந்த விடயங்கள்

#### 4.1.4.1 அபி வெனுவென் அபி கருத்திட்டம்

யுத்தத்தின் போது கொல்லப்பட்ட, காணாமற்போன, அங்கவீனமுற்ற மற்றும் இறுதிக்கட்ட நடவடிக்கைகள் தேவையாகவுள்ள பிரதேசங்களில் இன்னமும் சேவையிலுள்ள யுத்த வீரர்களுக்காக வீடுகளை அமைத்து வழங்குவதே இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இக்கருத்திட்டத்திற்கு “அபி வெனுவென் அபி” நிதியத்தின் மூலம் வசதியளிக்கப்படுவதோடு, இவ்வீடுகளை நிர்மாணிக்கும் பணியானது முப்படையினராலும் மேற்கொள்ளப்படுகின்றன.

இக்கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு,

- ஆயுதப்படைச் சேவையிலுள்ள படையினருக்கான வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான நிதியுதவியை வழங்குவதற்கான திட்டத்தை சமர்ப்பித்தல்.
- வீடமைத்தல் தொடர்பான வசதிகளைப் பெறும் நோக்கில் ஆயுதப்படைச் சேவையிலுள்ள ஊழியருக்கான உதவிகளை வழங்கல்.
- படைவீரர்கள் நிதி நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் உதவும் பொருட்டு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு அத்தகைய கடன்களை தீர்த்த வைத்தல்.
- படைவீரர் ஒருவர் எதிர்பாராவிதமான இறப்பு அல்லது உபாயத்திற்குள்ளாகின்ற வேளையில், அத்தகையோர் பெற்றுள்ள கடனை தீர்ப்பதற்கான திட்டமொன்றை தயாரித்தல்.

#### 4.1.4.2 யுத்த வீரர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம்

இக்கருத்திட்டமானது முப்படையிலும் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையிலும் கொல்லப்பட்ட மற்றும் அங்கவீனமுற்ற யுத்த வீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கு உதவியுள்ளதோடு, புலமைப் பரிசில்களையும் நலன்புரி அம்சங்களையும் முன்னெடுக்கவும் உதவியுள்ளது.

**அட்டவணை 4.1: யுத்த வீரர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்திலுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை**

| சம்பந்தப்பட்ட ஆயுதப்படை | கட்டம் - ஐ | கட்டம் -ஐஐ |
|---|---|---|
| இராணுவம் | 296 | 198 |
| கடற்படை | 47 | 74 |
| விமானப்படை | 27 | 50 |
| மொத்தம் | 370 | 322 |

#### 4.1.4.3 யுத்த வீரர்களுக்கான பகுதியளவு பூர்த்தியடையச் செய்யும் வீடமைப்புத் திட்டம்

இது தெரிவுசெய்யப்பட்ட யுத்த வீரர்களின் பகுதியளவு கட்டப்பட்ட வீடுகளை பூர்த்தியாக்கும் நோக்கில் அதிகபட்சம் ரூபா. 0.75 மில்லினுக்குள்ளாகின்ற அவசியமான பொறியில் கருவிகளை வழங்குதல், நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடையும் வகையில் யுத்த வீரர்களின் வாழ்க்கை நிலைமைகளை தரமுயர்த்தல் போன்ற இலக்கினைக் கொண்டதாகும். இக்கருத்திட்டமானது முப்படையினரினதும் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்போடு, பாதுகாப்பு அமைச்சின் சேவா வநிதா பிரிவின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்டது.

| | |
|---|---|
| **அட்டவணை 4.2: யுத்த வீரா்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம்வீடமைப்புக் கடன்கள்** | **165** |
| **புலமைப் பரிசில்கள்** | 325 |
| **நலன்புரி விடயங்கள்** | 37 |

**அட்டவணை 4.3: 2014 ஆம் ஆண்டின் முன்னேற்றம்**

| பொறுப்பு | நடவடிக்கை | முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|
| **பயனுறுதித் தன்மையை மேம்படுத்தல்** | கணினிகள் மூலமாக கடிதங்களை விநியோகித்தல் | பதிவுத் தபால் | கையினால் | அஞ்சல் |
| | | 15000 | 20000 | 30000 |
| | தனிநபா் கோவையினை இற்றைப்படுத்தல் | 320 கோவைகள் பூா்த்தியடைந்தன | | |
| | தாமதங்கள் எதுவுமின்றி கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் - கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரத்தை வழங்குகின்றது. | நிா்வாகப் பிரிவு | போக்குவரத்துப் பிரிவு | |
| | | 282 | 257 | |
| **துல்லியமான தீா்மானங்களை மேற்கொள்ளும் வகையில் முகாமைத்துவ முறைமையினை தயாரித்து அதனை இற்றைப்படுத்தல்** | மனித வள முகாமைத்துவம் | | | |
| | புதிய நியமனங்கள் | 35 | | |
| | ஓய்வுபெறுகை | 16 | | |
| | பதவியுயா்வு | 20 | | |
| | சம்பள அதிகாிப்பு | 330 | | |
| | ஆதன முகாமைத்துவ முறைமையானது ஆதன புத்தாக்கம் மற்றும் அதன் பராமரிப்பு தொடா்பான பதிவினைப் பேணுகிறது | - | | |
| | வாகன முகாமைத்துவ முறைமை (வாகனம் பெறுதல், புதுப்பித்தல், விற்பனை மற்றும் வாடகைக்கெடுத்தல்) | திருத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை -28 | | |
| **அறிவு மற்றும் திறமைகளைக் கொண்டு மனித வளத்தை மேம்படுத்தல்** | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் வசதிகளை வழங்கல் | நிகழ்ச்சித்திட்டங்கள் 60 | பங்களித்தோா் 150 | |
| | செயலமா்வுகள் | 3 | 200 | |
| | நலன்புரிச் செயற்பாடுகளை ஏற்பாடுசெய்தல் | 5 | 2500 | |
| | பயிலுநா்களுக்கு 6 மாத பயிற்சியை வழங்கல் | 60 பயிலுநா்கள் பயிற்றுவிக்கப்பட்டனா். | | |
| **சட்ட ஆலொசனைகளை வழங்கல்** | முப்படையினருக்கும் இணைந்த நிறுவகங்களுக்கும் சட்ட உதவிகளை வழங்கல் | 06 | | |
| | உடன்படிக்கைகளை வரைவு செய்தலும் திருத்தம் மேற்கொள்ளலும் | 06 | | |
| | புதிய தடுப்பு நிலையங்களை தாபித்தல் | - | | |
| | வா்த்தமானி மூலமான பிரகடனங்களை அறிவிப்புச்செய்தல் | 03 | | |
| | அவசர ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்கள் | - | | |

## அபி வெனுவன் அபி கருத்திட்டம்

"அபி வெனுவன் அபி" கருத்திட்டத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் 03 மாவட்டங்களிலுள்ள யுத்த வீரர்களுக்கான 330 வீடுகள் நிர்மானிக்கப்பட்டதோடு, அவை பின்வருமாறு அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

**அட்டவணை 4.4 : யுத்த வீரர்களுக்கான வீடுகள் பகிர்ந்தளிப்பு பற்றிய விபரம்**

| மாவட்டம் | வழங்கிய திகதி | சம்பந்தப்பட்ட ஆயுதப் படையினர் | | | | | | | | | | | | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | இலங்கை இராணுவப்படை | | | | இலங்கை கடற்படை | | | | இலங்கை விமானப்படை | | | | |
| | | இறந்தவர்கள் | அங்கவீனமுற்றோர் | சேவையில் ஈடுபடுவோர் | மொத்தம் | கொல்லப்பட்டோர் | அங்கவீனமுற்றோர் | சேவையில் ஈடுபடுவோர் | மொத்தம் | கொல்லப்பட்டோர் | அங்கவீனமுற்றோர் | சேவையில் ஈடுபடுவோர் | மொத்தம் | |
| குருணாகல் 11 | 25.04.2014 | 10 | 28 | 45 | 83 | - | 2 | 25 | 27 | 2 | 1 | 12 | 15 | 125 |
| அனுராதபுரம் | 05.07.2014 | 7 | 8 | 53 | 68 | 1 | 2 | 20 | 23 | - | 1 | 12 | 13 | 104 |
| புத்தளம் | 01.11.2014 | 6 | 16 | 41 | 63 | - | - | 22 | 22 | - | - | 16 | 16 | 101 |
| **மொத்தம்** | | **23** | **52** | **139** | **214** | **1** | **4** | **67** | **72** | **2** | **2** | **40** | **44** | **330** |

இவை தவிர, இராணவப்படை, கடற்படை, மற்றும் விமானப்படை ஆகியோரின் உதவியுடன் ஏனைய மாவட்டங்களிலும் பின்வரும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| கண்டி | - கட்டம் ஐஐ | - 100 |
| அம்பாந்தோட்டை | - கட்டம் ஐஐ | - 100 |
| மாத்தறை | - கட்டம் ஐஐ | - 100 |
| காலி | - கட்டம் ஐஐ | – 100 |








## 4.2 பிரச்சினைகளும் சவால்களும்

- அமைச்சின் ஊழியர்களின் தரவுக் களஞ்சியத்தை இற்றைப்படுத்தல் தொடர்பில் பணியாட்தொகுதியருக்கான பயிற்சிகளை வழங்கும் நோக்கில் சம்பந்தப்பட்ட முகவர்களிடமிருந்து உதவிகள் பெறப்பட்டன. 2014 இன் இரண்டாம் காலாண்டின் போது தரவு தயாரிப்பிற்கான சேவையகம் பெறப்பட்டதோடு, 2013 இல் ஊழியர்களின் தரவுக் களஞ்சியத்தை தயார்படுத்துவதற்கான நிதிசார் ஏற்பாடுகளிலான பற்றாக்குறை காரணமாக இத் தாமதம் ஏற்பட்டது.

- அமைச்சின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடையும் வகையிலான வினைத்திறன் மிக்க சேவையினை அடையும் நோக்கில் அமைச்சின் சம்பந்தப்பட்ட நிறுவகங்களுக்கு ஊழியர்களை வழங்குவதில் மந்தநிலை காணப்பட்டது.

## 4.3 எதிர்கால வாய்ப்புக்கள்

- அமைச்சின் பணியாட்தொகுதியினருக்கு அவசியமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டு அவை தொடர்பிலான பயிற்சிநெறிகளை ஏற்பாடுசெய்தல்.

- இலங்கை அபிவிருத்தி மற்றும் நிர்வாகத்திற்கான நிறுவகத்தினால் ஏற்பாடுசெய்யப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்காக பணியாளர்களை ஊக்குவித்தல்.

- யுத்த வீரர்களுக்கான நலன்புரி வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற 1000 மில்லியன் ரூபாக்களைப் பயன்படுத்தி 2000 இற்கும் அதிகமான யுத்த வீரர்களுக்கு வீடுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# 05
# சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

## 5.1 மேலோட்டப் பார்வை

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி, பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி, ரணவிரு சேவா அதிகாரசபை, இணைந்த சேவைகள் மொழிப் பயிற்சி நிறுவகம் ஆகியன தொடர்பிலான தாபிப்பு மற்றும் நிர்வாக விடயங்கள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய மற்றும் பிரபல்யமிக்க பாடசாலைகளுக்கு தேசக்காப்பாளர்களின் பிள்ளைகளுக்கான அனுமதி மற்றும் மனித உரிமையைப் பாதுகாப்பதற்கான தேசிய திட்டம் தொடர்பான அபிவிருத்திச் செயலாக்கம், மற்றும் கன்னி வெடிகளை அகற்றுவதற்கான தேசிய திட்டம் போன்றனவும் இப்பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்ற ஏனைய கடமைகளாகும்.

## 5.2 2014 இல் அடைவுகள்

### 5.2.1 சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்ட பிரதான செயற்பாடுகள்:-

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் கல்வி.ஃ. பயிற்சிநெறிகள் மற்றும் அபிவிருத்திச் செய்றபாடுகளை முன்னெடுக்கும் வகையில் இப்பல்கலைக்கழகம் குறித்தான நிர்வாக விடயங்களுக்கான வழிகாட்டல்கள் மற்றும் வசதிகளை வழங்கல்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சம்பந்தப்பட்ட சட்டங்களை வகுத்தல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளல்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற முதுகலை, பட்டப்படிப்புகள், மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட நிர்வாக மற்றும் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

-  கடேட் அதிகாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நிர்வாக மற்றும் நிதி சார் வசதிகள்
-  சர்வதேச இராணுவ அதிகாரிகளை ஆட்சேர்ப்பதற்காக வெளிநாடுகளுடன் இணைப்பு நபராகச் செயற்படல்.
-  பாரிய நிகழ்வுகளுக்கான நிர்வாக வழிகாட்டல்கள் மற்றும் வசதி வழங்கல்கள் (பட்டமளிப்பு, கல்விச் சுற்றுலா, உண்மை அறிதல் சமூகமளிப்பு)
-  கடேட் அதிகாரிகள்.ஃ.சிவில் மாணவர்களை ஆட்சேர்த்தல்.
-  பணியாளர்களை ஆட்சேர்ப்புச்செய்தல்
-  சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலையைத் தாபித்தல்.
-  இணைந்த சுகாதார விஞ்ஞாப் பீடத்தின் இடமாற்றம்
-  பல்கலைக்கழக அச்சகத்தைத் தாபித்தல்
-  கடேட் அதிகாரிகளுக்கான தங்குமிட வசதிகளை மேம்படுத்தல்
-  சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தென் மாகாண வளாகத்தை தாபித்தல்.
-  பட்டப்படிப்புப் பீடத்திற்கான கட்டடத்தை நிர்மாணித்தல்
-  சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக பொறியில் பட்டத்திற்கான ஐநுளுடு அங்கீகாரத்தைப் பெறுதல்.

பல்வேறு செயற்பாடுகளுக்கான நிர்வாக வழிகாட்டல்களையும் அங்கீகாரங்களையும் வழங்கல் (வெளிநாட்டு விடுமுறை, காணி சுவீகரிப்பு, உத்தியோகத்தர்களின் மனக்குறைகள், விரிவுரையாளர்களை.ஃ. ஆலோசகர்களை ஆட்சேர்த்தல், அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல், கல்வி சார் நடவடிக்கைகள், வெளிநாட்டு மொழிப் பயிற்சிகள்)

### 5.2.2 பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி தொடர்பான பிரதான செயற்பாடுகள்

னுளுஊளுஊ ஆல் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான நிர்வாக மற்றும் தொழிற்பாட்டு மேற்பார்வையினை வழங்கல்.

### 5.2.3 இணைந்த சேவைகள் மொழி மற்றும் பயிற்சி நிறுவகம் தொடர்பிலான பிரதான செயற்பாடுகள்:-

னுளுஊளுஊ ஆல் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான நிர்வாக மற்றும் தொழிற்பாட்டு மேற்பார்வையினை வழங்கல்.

### 5.2.4 இணைந்த சேவைகள் மொழி மற்றும் பயிற்சி நிறுவகம் தொடர்பிலான பிரதான செயற்பாடுகள்:-

இணைந்த சேவைகள் மொழிப் பயிற்சி நிறுவகத்தின் கல்வி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நிறுவகத்தின் நிர்வாக விடயங்கள் தொடர்பிலான வழிகாட்டல்கள் மற்றும் வசதியாக்கங்களை வழங்கல்.

மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் துளுடுவுஜ ஆல் நடாத்தப்படுகின்றன.

### 5.2.5 ஆட்கடத்தலுக்கு எதிரான தேசிய படையணி தொடர்பிலான பிரதான செயற்பாடுகள்

ஆட்கடத்தலுக்கெதிரான தேசிய படையணிக் கூட்டம்

தேசிய மனித உரிமைத் திட்டம் தொடர்பான செயற்பாடுகளை அமுல்படுத்தல்.

### 5.2.6 2014 இல் முப்படை மற்றும் பொலிஸ் ஆகியோர் தொடர்பான பாடசாலை அனுமதியுடன் தொடர்பிலான பிரதான செயற்பாடுகள்

பாடசாலைகளுக்கான தரம் 1 மாணவர் அனுமதி

முதலாம் தரத்திற்கான பாடசாலை அனுமதி தொடர்பிலான படையினரின் மனக்குறைகளை கையாளுதல்

### 5.2.7 2014 இல் அடையப்படாத இலக்குகளும் 2015 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட பணிகளும்

-  **சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்**

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் (முனுரு) சம்பந்தப்பட்ட சட்டங்களை வகுத்தல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளல

குபுளு நிர்மாணம்

2014 இல் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை 17 ஆகும்.

வழங்கப்பட்ட வீசாக்களின் எண்ணிக்கை

சீனர்களுக்கு -310

கடேட் அதிகாரிகளுக்கு -118

முனுரு பணியாளர்கள் -10

-  **பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி**

நிதிப் பற்றாக்குறை காரணமாக கட்டட நிர்மாணிப்புப் பணியானது 2015 இற்கு ஒத்திவைக்கப்பட்டது. இக்கருத்திட்டதிற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா. 20.4 மில்லியனாகும்.

2014 இல் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை 02 ஆகும்.

பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி – கொழும்பு.ஃ. குருணாகல்

2014 இல் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை 01 ஆகும்.

**2014 இல் முப்படை மற்றும் பொலிஸாரின் பிள்ளைகளுக்கு வழங்கிய பாடசாலை அனுமதிகள் பற்றிய விபரம்**

**அட்டவணை 5.1: 2014 பாடசாலை அனுமதி**

| அமைப்பு | எண்ணிக்கை |
|---|---|
| இராணுவப்படை | 5,477 |
| கடற்படை | 1,774 |
| விமானப்படை | 1,316 |
| பொலிஸ | 2,689 |
| மொத்தம் | **11,256** |

**ஆட்கடத்தலுக்கெதிரான தேசிய படையணிக் கூட்டம்:-**

-  2014 இல் இடம்பெற்ற ஆட்கடத்தலுக்கெதிரான தேசிய படையணிக் கூட்டங்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

## 5.3 பிரச்சினைகளும் சவால்களும்

-  முகாமைத்துவ உதவியாளர்கள் பற்றாக்குறை
-  பணியாட்தொகுதியினருக்கான பயிற்சி வாய்ப்புக்கள் (உள்நாட்டு.ஃ. வெளிநாட்டு)
-  தகவல் தொழில்நுட்ப வசதிகள்


# 06
# நிதிப் பிரிவு


## 6.1 மேலோட்டப் பார்வை

நிதிப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு,

- வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் குறைநிரப்பி மதிப்பீட்டினை தயாரித்தல்.
- வருடந்த முற்பண தேவைப்பாட்டினை திறைசேரிக்குச் சமா்ப்பித்தல். மற்றும் மாதாந்தம் திறைசேரியிலிருந்து முற்பணத்தைப் பெறுதல் மற்றும் அதனை கணக்குப் பிரிவுக்கு விடுவித்தல்.
- மாதாந்த பொழிப்பினை தயாரித்து திறைசேரிக்கு அனுப்புதல். அமைச்சின் கணக்குகளை திறைசேரிக் கணக்குகளுடன் ஒப்பீடு செய்தல்.
- ஒதுக்கீட்டுக் கணக்கினைத் தயாரித்தல்
- வெடிபொருள் மற்றும் ஆயுதங்களுக்கான உரிமம் பற்றிய வருமானக் கணக்கினைத் தயாரித்தல் (1003/07/05/தலைப்பு).
- அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் உத்தியோகபூா்வ வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், முடிவுறுத்தல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளல் ஆகியன தொடா்பில் வங்கியுடனும் திறைசேரியுடனும் தொடா்பாடலைப் பேணல்.
- மூலதனக் கொள்வனவுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளல்
- அமைச்சிலும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களிலும் ஏற்பாடுகளை விடுவித்தல், மேலதிக ஒதுக்கங்களைக் கோருதல், மற்றும் ஒதுக்கங்களை பரிமாறுதல்.
- தேசிய பாதுகாப்பு நிதி தொடா்பிலான பணிகளை கையாளுதல்.
- 2014 இல் பின்வரும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான நிதிசாா் முகாமைத்துவப் பணிகள் கையாளப்பட்டன.
    - பாரிய கொழும்பு நகர அபிவிருத்திக் கருத்திட்டம்.
    - பாரிய கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம்.
    - பாரிய கொழும்பு வெள்ளப்பெருக்கு பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் அபிவிருத்திக் கருத்திட்டம்.
    - பாதுகாப்பு தலைமைக் காரியாலயங்கள் நிா்மாணக் கருத்திட்டம்.

## 6.2 2014 இல் பெற்ற அடைவுகள்





அட்டவணை 6.1: 2014 இல் பாதுகாப்பு அமைச்சின் நிதிசார் முன்னேற்றம்

| | | | ரு. மில் |
|---|---|---|---|
| **செலவினம்** | **மதிப்பிடப்பட்டது** | **உண்மை** | **சதவீதம்** |
| **மூலதனம்** | 20,273.33 | 14,201.54 | 70 |
| **மீண்டெழக்கூடியவை** | 5,372.86 | 5,313.56 | 99 |
| **மொத்தம்** | 25,646.19 | 19,515.10 | 76 |

வரைபு 6.3: மீண்டெழல் மற்றும் மூலதனச் செலவினம்




அட்டவணை 6.2: 2014 இல் பாதுகாப்பு அமைச்சின் செலவின அறிக்கை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | சுள.“ஆெ | |
| கருத்திட்டம்/நிகழ்ச்சித் திட்டம் | 2014 இல் மதிப்பிடப்பட்டது | | உண்மைச் செலவினம் | | | |
| இயக்கப்பாடு சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் | மூலதனம் | மீண்டெழல் | மூலதனம் | மூ | மீண்டெழல் | மூ |
| 1. அமைச்சரின் அலுவலகம் | 1.00 | 6.68 | 0.08 | 8 | 3.43 | 51 |
| 2. நிர்வாக மற்றும் தாபபிப்புச் சேவைகள் | 3,270.40 | 3,092.76 | 3,232.66 | 99 | 3,060.43 | 99 |
| 3. அரச உளவுத்துறைச் சேவை | 113.95 | 948.14 | 56.03 | 49 | 938.21 | 99 |
| 4. தேசிய கடேட் படை | 53.92 | 259.14 | 29.63 | 55 | 252.94 | 98 |
| 5. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகான நிலையம் | 28.70 | 10.83 | 27 | 94 | 9.57 | 88 |
| 6. ஊடக நிலையம் | 5.58 | 13.20 | 3.18 | 57 | 11.04 | 84 |
| 7. இணைந்த நடவடிக்கை தலைமைக் காரியாலயம் | 7.64 | 97.92 | 6.86 | 90 | 94.66 | 97 |
| 9. உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 16,792.14 | 944.19 | 10,846.02 | 64 | 943.27 | 99 |
| மொத்தம் | **20,273.33** | **5,372.86** | **14,201.46** | **70** | **5,313.55** | **99** |

## அட்டவணை 6.3: ஒதுக்கீட்டுக் கணக்கு தொடர்பில் பணியாளர் ஊதியங்கள், ஏனைய மீண்டெழல் மற்றும் மூலதனம் ஆகிய தலைப்புக்களின் கீழான ஏற்பாடுகளுக்கு எதிரான செலவினம்

| | மீண்டெழும் செலவினம் | | | | | | | | மூலதனச் செலவினம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கருத்திட்ட | கருத்திட்டம்.·. நிகழ்ச்சித்திட்டம் | தனிநபர் ஊதியங்கள் | | ஏனையவை | | மொத்தம் | | மூலதனச் சொத்துக்கள் தொடர்பான புனருத்தாபனம் மற்றும் மேம்பாடுகள் | | நிலையான சொத்துக்களின் கையகப்படுத்துகை | | மனித வள அபிவிருத்தி | | ஏனையவை | | மொத்தம் | |
| | இயக்கப்பாடு சார்ந்த கருத்திட்டங்கள் | ஏற்பாடு | செலவினம் | ஏற்பாடு | செலவினம் | ஏற்பாடு | செலவினம் | ஏற்பாடு | செலவினம் | ஏற்பாடு | செலவினம் | ஏற்பாடு | செலவினம் | ஏற்பாடு | செலவினம் | ஏற்பாடு | செலவினம் |
| 1 | அமைச்சரின் அலுவலகம் | 2.4 | 1.92 | 4.28 | 1.51 | 6.68 | 3.43 | 0.70 | - | 0.30 | 0.08 | - | - | - | - | 1 | 0.08 |
| 2 | நிர்வாக மற்றும் தாபிப்புச் சேவைகள் | 176.2 | 172.04 | 2,916.56 | 2,888.40 | 3,092.76 | 3,060.43 | 15.35 | 9.09 | 13.05 | 9.74 | 2 | 1.56 | 3,240 | 3,212.27 | 3,270 | 3,232.66 |
| 3 | அரச உளவுத்துறைச் சேவை | 616.53 | 616.22 | 331.61 | 321.99 | 948.14 | 938.21 | 10.85 | 10.15 | 102.10 | 45.47 | 1 | 0.42 | - | - | 114 | 56.03 |
| 4 | தேசிய கடேட் படை | 101.76 | 101.60 | 157.38 | 151.33 | 259.14 | 252.94 | 21.13 | 18.24 | 32.79 | 11.39 | - | - | - | - | 54 | 29.63 |
| 5 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் | - | - | 10.83 | 9.57 | 10.83 | 9.57 | 1.60 | 1.39 | 16.10 | 15.39 | 1 | 0.78 | 10 | 9.51 | 29 | 27 |
| 6 | ஊடக நிலையம் | 1.7 | 0.70 | 11.50 | 10.34 | 13.20 | 11.04 | 4.75 | 2.46 | 0.80 | 0.69 | 0.03 | 0.03 | - | - | 6 | 3.18 |
| 7 | இணைந்த செயற்பாடுகள் தலைமை அலுவலகம் | - | - | 97.92 | 94.66 | 97.92 | 94.66 | 0.86 | 0.38 | 3.38 | 3.21 | 3.40 | 3.28 | - | - | 8 | 6.86 |
| 9 | உட்கட்டமைப்பு அபிவிருத்தி | - | - | 944.19 | 943.27 | 944.19 | 943.27 | 16,792.14 | 10,846.02 | - | - | - | - | - | - | 16,792.14 | 10,846.02 |
| | | | | | மொத்தம் | 5,372.86 | 5,313.56 | | | | | | | | மொத்தம் | 20,273.33 | 14,201.54 |
| | 2014 இல் குறைநிரப்பி ஒதுக்கீடுகள் மற்றும் குசு 66.·.69 பரிமாற்றங்களை உள்ளடக்கியுள்ளது. | | | | | | | | | | | | | | | | |

# 07
# உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

## 7.1 மேலோட்டப் பார்வை

இலங்கையின் இறைமை மற்றும் ஆட்புலம் தொடர்பிலான எல்லைகளில் சட்டம் மற்றும் கட்டளை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை முன்னெடுத்தல் தொடர்பிலான அத்தியவசிய உபாயங்களை வழங்கி அதனை அமுல்படுத்தல்.

## 7.2 2014 இல் பெற்ற அடைவுகள்

**அட்டவணை 7.1: 2014 ஆம் ஆண்டுக்காலத்தின் போதான உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகளை அமுல்படுத்தல**

| நிறுவகம்.்.கருத்திட்டம் | விடயப் பிரிவு | உள்ளகக் கணக்காய்வுக் கேள்விகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | வழங்கல் பிரிவு<br>வாக்குப் பேரேடுகள்<br>போக்குவரத்துப் பிரிவு<br>நிர்வாகப் பிரிவு<br>சம்பளங்கள் பிரிவு<br>கொடுப்பனவுப் பிரிவு<br>கொடுப்பனவு வவுச்சர் | 02<br>01<br>01<br>02<br>01<br>01<br>01 |
| பாரிய கொழும்பு நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | கொள்முதல்<br>கட்டுமானம் | 01<br>01 |
| தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாடுகளின் உபயோகம் | 01 |
| பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படைகளின் தலைமை அலுவலக நிர்மாணக் கருத்திட்டம் தேசிய கடேட் படை | பொருட்கொள்வனவு<br>இழப்புக்கள் | 02<br>01 |
| | ஊழல்கள் மற்றும் சீர்கேடுகள்.<br>பெருட்கொள்வனவு | 01<br>01 |
| பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி (கம்பனித்தெரு) | வருடாந்த கணக்கு | 01 |
| பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி (குருணாகல்) | கட்டுமானம் | 01 |
| சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | சம்பளங்கள் பிரிவு<br>கருத்திட்டம் | 01<br>01 |
| தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை | பொருட்கொள்வனவு, கணக்கீட்டுப் பரிவு, போக்குவரத்து மற்றும் நிர்வாகம் | 01 |
| ஆட்பதிவுத் திணைக்களம் | நு-ஜேஊ கருத்திட்டம் | 01 |
| இலங்கை இராணுவப்படை | வங்கி இணக்கக்கூற்று | 01 |
| இலங்கை விமானப்படை | களஞ்சியங்கள் சரிபார்க்கை | 01 |
| இலங்கை கடற்படை | சிவில் நலன்புரிச் சங்கத்தின் தவறான காசுப் பயன்பாடு (திருகோணமலை முகாம்) | 01 |
| முப்படைகள் மொழிப் பயிற்சி நிலையம் கொத்மலை | கட்டுமானம் மற்றும் பெருட்கொள்வனவு | 01 |

| | | |
|---|---|---|
| தேசிய கடேட் படை (ரன்தம்பை பயிற்சிப் பாடசாலை) | கட்டுமானம் மற்றும் பெருட்கொள்வனவு | 01 |
| ரக்னா ஆரக்'க லங்கா லிமிடட் | காசு மீதி சரிபார்க்கை | 03 |
| "சாந்த ஹிரு சாயா" நிர்மாணக் கருத்திட்டம் | - அனுமதிச்சீட்டு வழங்கல் நடைமுறை<br>- பொருட்கொள்வனவு மற்றும் செலவினம் | 01<br>01 |

2014 ஆம் ஆண்டுக்காலத்தின் போது பின்வருமாறான நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழக்கள் ஏற்பாடுசெய்யப்பட்டன:

- 0.02.2014 – கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (அமைச்சின் கருத்திட்டங்கள்)
- 20.05.2014 – கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்)
- 20.03.2014 – கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (அமைச்சின் கருத்திட்டங்கள்)
- 20.09.2014 - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (அமைச்சின் கருத்திட்டங்கள்)

**அட்டவணை 7.2: முப்படைகளிலுமுள்ள கலையத்தக்க (குறுங்கால) சபைகளின் பங்கேற்பு**

| நிறுவனம் | சபைகளின் எண்ணிக்கை |
|---|---|
| **இலங்கை இராணுவம்** | 14 |
| **இலங்கை விமானப்படை** | 06 |
| **இலங்கை கடற்படை** | 10 |

## 7.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு

முக்கியமான அனைத்து கணக்காய்வு அவதானிப்புகளும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் ஆகியவற்றின் சம்பந்தப்பட்ட தலைவர்களுக்கு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

## 7.4 பிரச்சினைகளும் சவால்களும்

சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெறுவதில் சிரமம் காணப்படுகிறது.

## 7.5 எதிர்கால வாய்ப்புக்கள்

நடுத்தர காலத்திற்காக நிறுவனத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் (2016-2018) :

- வினைத்திறனை அதிகரிக்கும் வகையில் கணக்காய்வு ஊழியர்களின் பயிற்சி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்
- புதிய கணக்காய்வு நியமங்கள், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நுட்பங்களை அறிமுகம் செய்தல்.
- கணக்காய்வு அவதானங்கள் தொடர்பில் ஒவ்வொரு கணக்காய்வின் பின்னரும் பணியாளர்களுடனான கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
- வீண் விரயம், தவறுகள் மற்றும் மோசடிகள் ஆகியவற்றைக் குறைக்கும் வகையிலான அறிவுறுத்தல்களை வழங்கல்.
- உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளல்

# 08
# ஆயுதப் படையினரின் நலன்புரிப் பிரிவு

## 8.1 மேலோட்டப் பார்வை

இலங்கையின் இறைமையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் நோக்கில் பெரும் எண்ணிக்கையிலான படைவீரர்கள் தனது உயிர்களைத் தியாகம் செய்துள்ளன அதேவேளை, இன்னும் சிலர் யுத்த நடவடிக்கையின் போது ஏற்பட்ட உபாய நிலை காரணமாக அங்கவீனர்களாகவும் மாறியுள்ளனர். தற்போதுள்ள சேவைகளின் உறுதித் தன்மையை தரமுயர்த்தும் நோக்கோடு, அங்கவீனமுற்ற படை வீரர்களினதும் இறந்த படை வீரர்களின் குடும்பத்தவர்களினதும் நலன்புரி தொடர்பான வசதிகளை உறுதிப்படுத்தும் வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த வேண்டியுள்ளது.

**இப்பிரிவின் குறிக்கோள்கள்:**

- தற்போது சேவையிலுள்ள மற்றும் யுத்தத்தில் மரணித்த படை வீரர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணிகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- யுத்த வீரர்களின் பிள்ளைகளின் உயர்கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்கும் வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.
- யுத்த வீரர்களின் குடும்பத்தினரின் மனக்குறைகளைக் களையும் வகையிலான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- யுத்த வீரர்களின் வாழ்க்கைத் துணையினரின் இடமாற்றத்தைப் பெறுவதற்கான வசதிகளை வழங்கல்
- யுத்த வீரர்களுக்கும் மற்றும் வீதி, மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் போன்ற அவர்களது காணிகள்.'. வீடுகள் தொடர்பிலான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.

## 8.2 2014 இல் பெற்ற அடைவுகள்

| நடவடிக்கைகள் | மொத்தச் செலவுகள் ரூ.மில் | நிதிசார் முன்னேற்றம் மூ | பௌதீக முன்னேற்றம் மூ |
|---|---|---|---|
| பிரதேச மட்டத்தில் யுத்த வீரார்களுக்கான காணிகளை வழங்கல் | 0.49 | 100 | 59 |
| ஹந்தால மற்றும் ஹெகித்த பிரதேசங்களில் ரணவிரு வள நிலையத்தை நிர்மாணித்தல் | 40 | 55 | 30 |
| குருணாகல், புத்தளம் மற்றும் கேகாலை பிரதேசங்களில் யுத்த வீரர்களுக்கான பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கல் | - | - | 100 |
| க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கல். | - | - | 100 |
| தேசிய சேமிப்பு வங்கி ஊடாக தனிப்பட்ட கடன் வசதிகளுக்கான ஏற்பாடுகுள் | - | - | 55 |

## 8.3 எதிர்கால வாய்ப்புக்கள்

- எதிர்வரும் ஆண்டில் 500 இற்கும் மேற்பட்ட யுத்த வீரர்களுக்கான காணிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- யுத்த வீரர்களுக்கான நலன்புரி வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- யுத்த வீரர்களுக்காக ளேஆ இடமிருந்தான குறைந்த வட்டியுடனான கடன் வசதியை உடனடியாக பெறும் வகையிலான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- யுத்த வீரர்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி புலமைப் பரிசில்களை வழங்கல்.

# 09
# செயலாற்றுகை அறிக்கை

## 9.1 மேலோட்டப் பார்வை

இலங்கைச் சனத்தொகையில் பெரும்பாலானோர் இன்னும் கிராமியப் பிரதேசங்களில் வசிப்பதோடு அந்த நிலைமை மிக வேகமாக மாறுபட்டு நகரமயமாக்கலுக்கு உட்பட்டு வருகின்றது. அவ்வாறான நிலையில் வெகு சீக்கிரத்தில் எமது சமூகம் நகர சமூகமொன்றாக முன்னிலைப்படுத்தப்படும். அது அதிகமான நாடுகளில் காணக்கூடிய நகரமயமாக்கலை உண்மையில் தவிர்க்க முடியாத ஒரு போக்காகும். தற்கால பொருளாதார அபிவிருத்திப் பொறிமுறை நகர மற்றும் நகர அபிவிருத்தியாகும். நகரமயமாக்கலின் போது சிறந்த முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் நகர மற்றும் நகரத்திலுள்ள நிரந்தர அபிவிருத்தியை உறுதி செய்வது தீர்க்கமான காரணியாக உள்ளது. 2020 ஆம் ஆண்டாகும் போது நாடுமுழுவதும் முறையாக திட்டமிடப்பட்டு, பொருளாதார ரீதியில் பயனுள்ள, உறுதியான சூழலுடன் நட்புடைய, அழகான கலாச்சாரத்துடன் கூடிய பாதுகாப்பான மற்றும் பெரிய சிறிய நகரங்களை இணைத்துக்கொண்ட வலயமைப்பையொன்றை இலக்காகக் கொள்வதற்கு திட்டமிட்டு கண்காணித்து உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொண்டு ஒழுங்கான வழிகாட்டலுக்கு தலைமைத்துவத்தை அளிக்கும் பாரிய செயற்பாட்டுக்கு நகர அபிவிருத்திப் பிரிவு தோள்கொடுத்து நிற்கின்றது. அதற்காக திட்டமிடப்பட்ட நகரத்தை உறுதி செய்யும் பொருட்டு, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், நகர அபிவிருத்திக்காக தேவையான தேவையான நிரந்தர காணிப் பயன்பாட்டினை உறுதி செய்வதற்காகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களை பாதுகாத்து அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்காகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவத்திற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

## 9.2 நகர அபிவிருத்திப் பிரிவின் முன்னேற்றம்

நகர அபிவிருத்தியின் முன்னோடியான நகரவ அபிவிருத்தி அதிகார சபையின் நகர அபிவிருத்திக்கு மேலதிகமாக நேரடியாக அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற முக்கியமான கருத்திட்டக் கண்காணிப்பு நகர அபிவிருத்தி பிரிவின் மூலம் வழங்கப்படும். இதுவரையிலும் ஒப்பீட்டளவில் முன்னேற்றத்தை அடையப்பெற்றுள்ளதோடு பின்வரும் கருத்திட்டங்களின் மூலம் உரிய முன்னேற்றம் சிறப்பாக காட்டுகின்றது.

## 9.3 நகர அபிவிருத்திப் பிரிவு

அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றான நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அது தொடர்பான காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம், நகர அபிவிருத்தி திட்டம், பல்வேறு அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக காணிகளை சுவீகரித்தல், நகர அதிகாரப் பிரதேசத்தினை அறிவித்தல், சட்டவிரோத நிர்மாணிப்புகள் போன்ற விடயங்களுக்குரிய சட்டங்களிலுள்ள ஒழுங்குவிதிமுறைகளுக்கேற்ப ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் நகர அபிவிருத்திப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான காணி வர்த்தகமயமான கருத்திட்டம், தொழிற்சாலைக் கருத்திட்டம், முதலீட்டுச் சபைக் கருத்திட்டம், நகர அபிவிருத்தி திட்டக் கருத்திட்டம், அரச நிறுவனங்கள், நியாதிக்க சபைகள் மற்றும் சமய, தர்மநிதி நிறுவனங்கள் மற்றும் சமூகசேவை நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடல், உரித்துடமையை வழங்கல் என்பவற்றுக்காக தேவையான சட்டரீதியான அங்கீகாரங்கள் அதிகாரசபையினால் பெற்றுக்கொடுக்கப்படும்.

அதற்கேற்ப 2014 ஆம் ஆண்டிற்காக காணிகளை ஒதுக்குதல் குத்தகைக்கு விடுவதற்கு ஏற்றதான 40 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே காணிகளை அகற்றுவதற்கு உரிய 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச்

சட்டத்தின் 18.1 ஆம் பிரிவின் கீழான 62 சான்றிதழ்களுக்காக விடயப் பொறுப்பிற்கான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு நகர அபிவிருத்தி கருத்திட்டங்கள் செயற்படுத்துகையில் சட்டவிரோதமான நிர்மாணங்கள் மற்றும் குடியேற்றங்கள் காரணமாக காணிகளின் உரிமையினை மீண்டும் அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்காக 1979 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க அரசாங்க காணிக் கட்டளைகள் சட்டத்தின் கீழ் காணி உரிமையினை திரும்பப் பெற்றுக்கொள்ளும் 14(2) பீ பிரிவின் கீழ் சான்றிதழ்களுக்காக விடயப் பொறுப்பிற்கான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்திக்கேற்ற 2014 ஆம் ஆண்டின் பெரிய தம்புள்ள அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் மடாடுகம, கலேவல, நாவுல, சீகிரியா(ஹபரன) தம்புள்ளயும் கல்முனை, மட்டக்களப்பு, இரத்தினபுரி மற்றும் பலாங்கொட போன்ற நகரம் தொடர்பான நகர அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்து வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வாறே 1978 ஆம் அண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்திச் சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கேற்ப பண்டாரவளை மற்றும் புஸ்ஸல்லாவ போன்ற பிரதேசங்கள் நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசமாக 2014 ஆம் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 9.4 காணிப் பிரிவு

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளை சுவீகரித்தல், கைப்பற்றல், திரும்பப் பெறல் மற்றும் அமைச்சரவையின் விஞ்ஞாபனம் சமர்ப்பித்தல் இப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. அதற்கேற்ப 2014 ஆம் ஆண்டினுள் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

காணிகளைப் கைப்பற்றிக்கொள்ளும் சட்டத்தின் கீழ் காணித் துண்டுகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய அடிப்படை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 40 ஆகும். காணிகளைக் கைப்பற்றிக் கொள்வதற்குரிய 2 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள் (அதிமேதகு ஜனாதிபதியின் சட்டம்) 21 உம் 38(அ) இடைக்காலக் கட்டளையின் கீழ் அதிகாரம் 32 உம் 15(1) ஆம் பிரிவின் கீழ் சுவீகரித்தல்கள் 35 உம் திரும்பப் பெறல் மற்றும் உரிமை இழப்புகள் 09 உம் 50 ஆம் பிரிவின் கீழ் கைவிடல் 03 உம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவையின் விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை 16 ஆகும்.

### 9.5 மதிப்பீடு மற்றும் செயற்பாட்டுப் பிரிவு

நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அது தொடர்பாக மதிப்பீடு மற்றும் செயற்பாட்டுப் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நகர அபிவிருத்தி செயற்பாடுகளை துரிதப்படுத்தல் இப்பிரிவின் பிரதான பொறுப்புக்களாகும்.

அதற்காக மேலுள்ள இரண்டு நிறுவனங்களின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களில் களப் பரிசோதனை மேற்கொள்ளல் அது தொடர்பாக முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தினை நடாத்தி இற்றைப்படுத்தப்பட்ட தகவலினைப் பெற்றுக்கொண்டு உரிய கருத்திட்டங்கள் பற்றி மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

அத்தோடு நகர புத்துயிர் கருத்திட்டம் மற்றும் 3k கருத்திட்டம் தொடர்பாக கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும், நகர அபிவிருத்தி செயற்பாட்டில் எழும் பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொண்டும், நகர அபிவிருத்தி பிரிவிற்குள் தகவல் தொழிநுட்ப விடயத்திற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளல் மற்றும் ஒருங்கிணைப்பதன் மூலம் வினைத்திறன் மற்றும் பயனுள்ள சேவைகளை வழங்கலும் மதிப்பீடு மற்றும் செயற்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

### 9.6 தொழிநுட்ப மற்றும் பொருட் கொள்வனவுப் பிரிவு

அமைச்சில் நகர அபிவிருத்திப் பிரிவின் கீழ் இருக்கின்ற நிறுவனங்களான UDA, SLLR&DC, SCDP, 3K போன்றவற்றின் மூலம் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வது இப் பிரிவின் பிரதான கடமையும் பொறுப்புமாகும்.

அதற்கேற்ப பொருட் கொள்வனவுக் குழுவினை நியமித்தல் உட்பட அது தொடர்பான அனைத்து கொள்வனவு நடவடிக்கைகளையும் மேற்கொண்டும், எட்டப்படுகின்ற கொள்வனவு தொடர்பான தீர்மானங்களை உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தி அவற்றினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தயார் செய்தலும், கொள்வனவு நடவடிக்கைகளுக்கு உரிய முன்னேற்ற மீளாய்வும் மேற்கொள்ளப்படும்.

மேலும் அலகிற்கான விலைகள் தொடர்பாக நிர்மாண, பொறியியல் சேவை, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் நிலைப்பாடு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்று, நகர அபிவிருத்தி அதிகார சபையின் சொத்துக்களைத் தவிர்ப்பதற்காக அமைச்சு நியமித்துள்ள விலைமனுக் குழுவின் நடவடிக்கைகளுக்காக ஒத்துழைப்பதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்படுகின்ற பொருட்கொள்வனவு மற்றும் தொழிநுட்ப நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரவையின் விஞ்ஞாபனம் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதும், நகர அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பாகும்.

## 9.7 நகர அபிவிருத்திப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களின் முன்னேற்றம்

### 9.7.1 வெளிப்புறச் சுற்றுவட்ட சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்




இக் கருத்திட்டத்தின் கீழ் கடுவெல மாநகர அதிகாரப் பிரதேசத்திற்குரிய வெலிவிட பாதை (3300*m*) மற்றும் சுஹத மாவத்தை *(610m)* நீர்க் குழாய் பொருத்துதல் மற்றும் பொது நிர்மாண நடவடிக்கை 54% பூரணப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 382 மில்லியன் ஆவதோடு கருத்திட்டம் 2014 டிசம்பர் மாதத்தில் நிறைவு செய்யவிருப்பதோடு காலநிலைத் தாக்கம் மற்றும் மீள் குடியேற்றச் செயற்பாடுகள் தாமதமானதாலும் 2015 மே மாதம் வரை நீடிக்கப்பட்டது. கொட்டாவ பன்னிப்பிட்டிய வீதி அபிவிருத்திக்காக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 263 மில்லியன் ஆவதோடு பாதிக்கப்பட்ட பகுதியின் அளவு 225 ஆகும். இந்த பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள மக்களின் காணிகளை கைப்பற்றிக்கொள்ளும் செயற்பாடு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு நஷ்டஈடு வழங்குவதற்காக மதிப்பீட்டு அறிக்கை கிடைக்க வேண்டியிருக்கின்றது. தெற்கு அதிவேகப் பாதை கொட்டாவ நுழைவாயிலுக்காக தேவையான வசதிகளை வழங்குவதை நோக்காகக் கொண்ட மாகும்புர நகர அபிவிருத்தி திட்டத்தின் பல்நோக்கு போக்குவரத்து முடிவிட நிர்மாணத்திற்காக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 845 மில்லியன் ஆவதோடு இதன் காணி அபிவிருத்தி நடவடிக்கை இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு அதில் 15% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### 9.7.2 மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம்

இலங்கையின் பிரதான நகரங்களைச் சார்ந்த பொருளாதார, சமுதாய மற்றும் சூழல் ரீதியாக மக்களின் வாழ்க்கையை நிலையாக கட்டியெழுப்புவதற்காக மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. இக் கருத்திட்டத்திற்காக உலக வங்கி 147 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இக் கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு 2019 ஆம் ஆண்டு நிறைவுபெறவுள்ளது. கண்டி மற்றும் காலி மாவட்டங்களிலுள்ள நகர அபிவிருத்தியினை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இக் கருத்திட்டம் செயற்படுத்தப்படுவதோடு, கண்டி நகர அபிவிருத்திக்காக போக்குவரத்து நெரிசல்களை குறைக்கும் கருத்திட்டத்தினை செயற்படுத்தல், குடிநீர் வழங்கலை மேம்படுத்தும் கருத்திட்டம், நகரத்தின் மழைநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் கருத்திட்டம் மற்றும் கருத்திட்டத் தரப்பினர்களின் நிறுவனக் கொள்ளவினை அதிகரிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். காலி மாவட்டத்தின் வெள்ளத்தினை கட்டுப்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்ட கால்வாய்களை புனரமைத்தல் மற்றும் காலி நகரத்தை மேம்படுத்தும் கருத்திட்டங்கள் இதன் கீழ் செயற்படுத்தப்படும்.

### 9.7.3 பத்தரமுல்ல தனிநபர் அடையாள செயலகம்

இக் கருத்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கை




MAP 1: Project Boundary for Galle City Urban Upgrading

2012 யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டதோடு ஒப்பந்த காலம் 36 மாதங்களாகும். 2014 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு கருத்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளின் பௌதிக முன்னேற்றம் *82%* ஆவதோடு நிதி முன்னேற்றம் *96%* ஆகும். இக் கருத்திட்டம் 2015 யூலை மாதம் நிறைவுபெறவுள்ளது.

### 9.7.4 நகர மீள் எழுச்சிக் கருத்திட்டம்




கொழும்பு நகர அபிவிருத்தி செய்கையில் உள்ள பிரதான தடையாக இருந்த குறைந்த வருமானமுடைய குடிசைக் குடியிருப்பாளர்கள் மற்றும் அவர்களின் வீட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வாக கொழும்பு நகரத்தினுள் உயர்ந்த பெறுமதியுடன் கூடிய குறை பயன்பாட்டுடைய காணிகளை தீர்த்து வைப்பதற்காக நகர மீள் எழுச்சிக் கருத்திட்டத்தின் மூலம் மிகவும் பயனுள்ள உத்தேச வீடமைப்புத் திட்டத்தினை செயற்படுத்துவதன் மூலம் குறைந்த வருமானமுடையோர்களுக்கு வசதிகளுடன் கூடிய வீடு உரிமையாதல் மற்றும் நகரை அழகுபடுத்தும் செயற்பாட்டினை மேற்கொள்ளல் இக் கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். இக் கருத்திட்டத்தின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளின் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.

| இல. | வீடமைப்புக் கருத்திட்டம் | இடம் | வீடுகளின் எண்ணிக்கை. | மக்களிடத்தில் கையளிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| 01 | லக்முது செவன | வெள்ளவத்த, மயூரா இடம் | 118 | 2014.10.07 |
| 02 | சிரிசந்த செவன | புளூமென்டல் | 366 | 2014.10.17 |
| 03 | சிரிசர உயன மற்றும் மெத்சர உயன | வனாதமுல்ல, பொரல்ல. | 1148 | 2014.10.27 |
| 04 | ரந்திய உயன | ஹேனமுல்ல, கொழும்பு 14. | 1137 | 2014.11.18 |
| 05 | சிரிமுது உயன | எதிரிசிங்கவத்த, கொழும்பு 14. | 546 | 2014.11.21 |
| 06 | லக்சந்த செவன | சாலமுல்ல, கொலன்னாவ. | 216 | 2014.12.01 |
| 07 | முவதொர உயன | பேர்கிசன் வீதி, கொழும்பு 14.. | 872 | 2014.12.08 |
| 08 | மிஹிதுசென்புர | தெமடகொட | 500 | 2014.11.18 |

# 10
# ஊடக நிலையம்

## 10.1 மேலோட்டப் பார்வை

பாதுகாப்பு அமைச்சின் ஊடக நிலையமானது, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலுமான மிகைப்படுத்தப்பட்ட அல்லது தவறாகச் சித்தரிக்கப்பட்ட ஊடகப் பிரச்சாரத்தை பொருத்தமான கண்ணோட்டத்தில் அவற்றை தெளிவுபடுத்தும் நோக்கில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்கு குறுகிய காலத்தினுள் துல்லியமானதும் நம்பகத்தன்மை மிக்கதுமான பாதுகாப்பு தொடர்பான செய்திகளை தொகுத்து வழங்குகின்றதொரு முன்னோடி ஊடகப் பிரிவாகத் திகழ்கின்றது.

## 10.2 2014 இல் பெற்ற அடைவுகள்

இப்பிரிவின் அர்ப்பணிப்புமிக்கதும் நிதானமிக்கதுமான சேவைகள் மூலம் 2014 இல் பின்வரும் அடைவுகளை எட்ட முடிந்துள்ளது:

- நாட்டின் பாதுகாப்பு குறித்தான செய்திகள் மற்றும் தகவல்களை விரைவாக பெறுவதற்கான வசதியளிக்கப்பட்டதோடு, ஊடகங்களுக்கும் செய்திகளை வினைத்திறன்மிக்க முறையில் வழங்கியமை.
- தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள் இனங்காணப்பட்டு அவை உரிய முறையில் தீர்த்துவைக்கப்பட்டன.
- பாதுகாப்பு அமைச்சின் ஏனைய சிறப்புப் பிரிவுகளின் ஒத்துழைப்போடு பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் ஊடுகப் பிரிவுடன் வினைத்திறன் மிக்க வகையிலான ஒருங்கிணைப்பை வழங்கியமை
- பாதுகாப்பு அமைச்சு, முப்படைச் சேவைகள், மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் பயனுறுதிமிக்க சமூக தொடர்புகளைக் கட்டியெழுப்பியமை.
- எந்தவொரு எதிர்கால அறிக்கையிடல் தொடர்பிலும் உசாவலைப் பெறும் வகையிலான தரவுத்தளத்தை மையமாகக் கொண்ட செய்திப் பத்திரிகை சுவடிகளை பேணியமை.
- பாதுகாப்பு அமைச்சு தாபித்த இலக்குகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு அவற்றை அடையும் வகையில் ஊடகப் பிரிவுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டமை.
- எழுத்து வடிவ மற்றும் வாய்மொழி மூலமான மறுப்புரைகள் தொடர்பில் தேவையான பொழுது ஒருங்கிணைப்புச் செய்தமை.


## 10.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு

2008 முதல் 2014 வரையான காலத்தின் போது ஊடக நிலையத்திற்கான நாணய மற்றும் மூலதனத் தேவைப்பாடுகள் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத் தலைப்பு 103-01-06 ஊடாக நேரடியாக பெறப்பட்டன. 2015 ஆம் ஆண்டுக்கான ஊடக நிலையத்தின் நிதிசார் வாக்கு பாதுகாப்பு அமைச்சின் வரவுசெலவுத்திட்ட தலைப்பில் நேரடியாக சேர்க்கப்பட்டுள்ளது.

ரூபா. 5000.00 சொற்ப பெறுமதியான முற்பணமானது சிறிய நிதிசார் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் வழங்கப்பட்டுள்ளதோடு, உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டியல்கள் மீள் அறவீட்டிற்காக பாதுகாப்ப அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஊடக நிலையத்தின் கட்டட புத்தாக்கப் பணியானது இலங்கை பொறியியலாளர் சேவை ரெஜிமன்ட் படையினர் மற்றும் முப்படையினரினதும் உதவியோடு, ரூபா. 3.849 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்டது.

அட்டவணை 8.1 : நிதிசார் முன்னேற்றம்




## 10.4 எதிர்கால வாய்ப்புக்கள்

- இலங்கைக்கு எதிரான தீய சக்திகள் தவறான செய்திகளைப் பரப்புவதற்கு எதிராக மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய மட்டத்தில் தொடர்ந்தும் முன்னெடுத்தல்.

- தேசிய மற்றும் சர்வதேச ஊடக வலையமைப்புடனான ஒத்துழைப்பினையும் தொடர்பினையும் மேம்படுத்தி அவற்றை விருத்திசெய்தல்.

- வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கிடையிலான பொதுவான தப்பபிப்பிராயங்களை களையும் நோக்கில் விசேடமாக தமிழில் செய்திகளையும் துண்டுப்பிரசுரங்களையும் வெளியிடல்.

- பாதுகாப்பு அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய மட்ட அபிவிருத்தி நோக்கிய ஊடக ஆதரவுச் செயற்பாட்டினை விரிவாக்கம் செய்தல்.

- வினைத்திறன் மிக்க ஊடக பிரச்சாரத்தை மேம்படுத்தும் வகையில் அனைத்து அச்சு, இலத்திரனியல் மற்றும் இணையத்தள அடிப்படையிலான ஊடக நிறுவனங்களுடனான தொடர்பினை மேம்படுத்தி விருத்திசெய்தல்.

- தேவைப்படும் போது, பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்று பத்திரிகையாளர் சந்திப்புக்களை நடத்தல்.

- பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டலுக்கமைய இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக அமைப்புக்களுடன் அனைத்து ஊடக அலைவரிசைகளையும் ஒருங்கிணைத்தல்.

# 11
# இராணுவத் தொடர்பு அலுவலகம்

## 11.1 மோலோட்டப் பார்வை

பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் பயனுறுதிமிக்க தொழிற்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில், இராணுவப் படையினருக்கும் மற்றும்.'. அல்லது ஏனைய முகவர்களுக்கும் இடையிலான பாதுகாப்பு அமைச்சர்.'. பாதுகாப்புச் செயலாளர் என்றவகையில் முன்னெடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் ஒருங்கிணைப்புச் செய்தலும் தொடர்பாடல் மேற்கொள்ளலுமே இப்பிரிவின் பிரதான வகிபாகமாகும்.

அரசாங்கத்தினாலும் பாதுகாப்பு அமைச்சினாலும் வழங்கப்படுகின்ற கொள்கை வழிகாட்டல்களை அமுல்படுத்துவதையும், மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள வளங்களைக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் இலக்குகளையும் நிறைவேற்றுவதையும் கண்காணித்தல்.

**பொறுப்புக்கள்**

- அரசின் சம்பிரதாயபூர்வ தேவைப்பாடுகளுக்கு உதவுதலும் ஒருங்கிணைத்தலும்.
- வெளிநாட்டு பிரமுகர்களின் வருகைகளுக்கு உதவுதலும் ஒருங்கிணைத்தலும்.
- முப்படைச் சேவைகள் குறித்தான தேவைப்பாடுகளுக்காக அரசாங்க அமைச்சுக்களுடனும் மற்றும் இதற்கு மறுதலையாகவும் தொடர்பினைப் பேணல்.
- முப்படைச் சேவைகளின் நிபுணத்துவம் மற்றும் வளங்களைக் கொண்டு தனியார்.'. வர்த்தக முகவர்களின் தேவைப்பாடுகளுக்கு உதவிசெய்து ஒருங்கிணைத்தல்.
- இராணுவ உதவிகள் மூலம் இராஜதந்திரிகளின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வசதியளிக்கும் நோக்கில் ஒருங்கிணைப்பினை வழங்கல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்கள் பார்வையிடுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களையும் இராணுவ தாபிப்புக்களையும் கண்காணித்து ஒருங்கிணைத்தல்.
- நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தல்.'. தடுத்தல்.
- பாதுகாப்பு அமைச்சில் இடம்பெறக்கூடிய அனைத்து இராணுவ மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை ஏற்பாடுசெய்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- வழமைக்கு மாற்றமான வான்வழி மற்றும் கடல்வழி நகர்வுகளை கண்காணித்த ஒருங்கிணைத்தல்.

**பிரதான விடயங்கள்**

- அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இராணுவ தாபிப்புகளுக்கு இராஜதந்திரிகள் மேற்கொள்ளும் சமூகமளிப்பினை ஒருங்கிணைத்தல்.
- கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கான இராஜதந்திர சான்றிதழ் வழங்கல் (இராணுவ மற்றும் வழமைக்கு மாற்றமான நகர்வுகள்)
- இராணுவ மற்றும் வழமைக்கு மாற்றமான நகர்வுகள்
- இராணுவ விமானங்களுக்கான விமானப்பாதை அங்கீகாரம்
- விமானங்கள், விமான உதிரிப்பாகங்கள், படகுகள், வெளி இயந்திரப் படகுகள் .'. உள் இயந்திரப் படகுகள் மற்றும் விசேட இராணுவத் தளபாடங்கள் மற்றும் இயந்திரங்களை இறக்குமதிசெய்தல்.'. ஏற்றுமதிசெய்தல்.'. பயன்படுத்தல்.'. கொண்டுசெல்லல் ஆகியவற்றுக்கான சான்றிதழை வழங்கல்.
- வரைபடங்கள் மற்றும் வான்வழிப் புகைப்படங்களுக்கான வசதியளித்தல்.
- உருமறைக்கப்பட்ட பொருட்கள்.'. சீருடைகளை இறக்குமதிசெய்தல்.'. ஏற்றுமதி செய்தல்.'. கொண்டுசெல்லலுக்கான சான்றிதழை வழங்கல்.
- முப்படைகள் மற்றும் பொலிஸ் சார்ந்த சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல்.
- வெளிநாட்டுப் பிரமுகர்கள், இராஜதந்திரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் ஆகியோரின் வருகைகளை ஒருங்கிணைத்து உதவுதல்.
- முப்படைச் சேவைகள் தொடர்பிலான தேவைப்பாடுகளை நாடுகின்ற அரசாங்க அமைச்சர்களுக்கு ஒத்துழைத்தல்.
- முப்படைச் சேவைகளின் நிபுணத்துவம் மற்றும் வளங்களைக் கொண்டு தனியார்.'. வர்த்தக முகவர்களின் தேவைப்பாடுகளுக்கு உதவிசெய்து ஒருங்கிணைத்தல்.
- இராஜதந்திரிகளின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பாதுகாப்பு இணைப்பு நிறுவனங்களின் மாதாந்தக் கூட்டங்களுக்கும் இராணுவ உதவிகளை வழங்கி ஒருங்கிணைத்தல்.
- ஆபாயகர சரக்குப் பொதிகளுக்கான சான்றிதழை வழங்கல்.

- ஓய்வுபெறும் இராணுவ வீரரை இலக்காகக் கொண்டு தொழிற்பயிற்சிகளை ஏற்பாடுசெய்தல்.
- பாதுகாப்பு அமைச்சின் ஏனைய கிளை அலுவகங்களுக்கு, அவாகளின் கோரிக்கையின் பேரிலான உதவிகளை வழங்கல்.
- அனுராதபுரம் - மகாமீயுநாஉயனவில் "சதஹிரு செய" இன் நிர்மாணப்பணிகளை ஒருங்கிணைத்தல்.
- முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசாங்க அமைச்சர்கள் ஆகியோரின் கடல் மார்க்க மற்றும் ஆகாய மார்க்க பயண ஒழுங்கிற்காக இலங்கை விமானப்படை மற்றும் இலங்கை கடற்படையினருடனான ஒருங்கிணைப்பு.
- மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ தளபாடங்களை வெளியாக்குவதற்கு இலங்கைச் சுங்கத்துடனான ஒருங்கிணைப்பைப் பேணல்.
- பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களிலுள்ள இராணுவத்தினரின் இணைப்பு தொடர்பிலான நிர்வாக மற்றும் ஒருங்கிணைப்பினைப் பேணல்.
- வெளிநாட்டு அரச தலைவர்களின் விஜயங்களுக்கான உதவிகளை பின்வருமாறு வழங்கல் (ஜனாதிபதியின் செயலகம் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் பூர்வாங்க கூட்டங்களையடுத்து வழங்கப்படும் வழிகாட்டலுக்கு அமைவாக).
- சம்பிரதாயபூர்வமான வரவேற்புக்களுக்கான 19∴21 துப்பாக்கி வேட்டுக்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- சம்பிரதாயபூர்வ மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டுநர்களை ஒருங்கிணைத்தல்.
- இராணுவம், கடற்படை, விமானப்படை, ஊளுனு மற்றும் பொலிஸ் ஆகியோரின் கலாசார செயலாற்றுகையினை ஒருங்கிணைத்தல்.
- சிறப்புக் காவலர்களை ஒருங்கிணைத்தல்
- பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் வந்திறங்கல் மற்றும் புறப்பாட்டுப் பிரதேசங்களில் பாதை வரியினை∴ சிறப்புக் காவலரை தயார்படுத்தல்.
- பாராளுமன்ற மைதானத்தில் அமைந்துள்ள யுத்த வீரர்களுக்கான நினைவுச்சின்னத்தில் மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல்.
- முக்கிய பிரமுகர்கள் தங்கியிருக்கும் காலம் வரை ஒரு மருத்துவக் குழவினை ஏற்பாடுசெய்தல்.
- முக்கிய பிரமுகர்களுக்கு தேவைக்கேற்றவாறு பொருத்தமான உள்ளக விமானப் பயணத்தினை ஒருங்கிணைத்தல்.
- விசேட நில விமானங்களுக்கான அனுமதியை வழங்குவதோடு, கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை விமானப்படைத் தளத்தில் விமானப் பாதுகாப்பு வசதியை ஏற்படுத்தல்.
- முக்கிய பிரமுகர்களின் விமானங்கள் வந்திறங்குவதற்கு முன்னதாக முற்பாதுகாப்புச் சோதனைக்கான ஏற்பாட்டினை ஒருங்கிணைத்தல்.
- முக்கிய பிரமுகர்களின் பொதிகள் கொண்டுசெல்கை மற்றும் அவற்றின் முகாமைத்துவத்தை ஒருங்கிணைத்தல்.
- அரச நிகழ்வுகளுக்காக காலி முகத்திடலைப் பெறுவதற்காக துறைமுக அதிகாரசபையுடன் ஒருங்கிணைந்து செயற்படல்
- தலைநகரிலுள்ள விசேட இடங்களில் தொலைக்காட்சி நாடகம், விளம்பரங்கள் மற்றும் ஏனைய திரைப்படங்களுக்கான காணொளி எடுப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கல்.
- காலி முகத்திடல் மற்றும் வெளிச்சவீடு ஆகியவற்றின் இயற்கைக் காட்சிமிகு புகைப்படங்களை எடுப்பதற்கான அங்கீகாரம் வழங்கல்.
- சம்பிரதாய நிகழ்வுகள் மற்றும் நிர்மாணப் பணிகளுக்கு இராணுவ வல்லுநர்களையும் ஊழியர்களையும் வழங்கல் (வருடாந்த புத்த ர்‘மி நிகழ்ச்சித்திட்டம், பொசன் பௌர்ணமி தின நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன).
- ரக்ண ஆரக்‘க லங்கா நிறுவகத்திற்கு உதவி வழங்கல்.
- வெளிநாட்டு இராணுவ பயிலுநர்களின் பிரமுகர்களின் சமுகமளிப்புக்களுக்கு வசதியளிக்கும் அதேவேளை, விமானப் போக்குவரத்து, கூட்டங்கள் மற்றும் ஏனைய அத்தியவசிய விடயங்களை ஒருங்கிணைத்தல்.
- பாதுகாப்பு இசைவுச் சான்றிதழை விநியோகித்தல்.
- நினைவுகூரல் நிகழ்வுகளுக்கான உதவியை வழங்கல்.
- பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பினை நிர்வகித்தல்.
- கொழும்பிலும் புறநகரிலுமுள்ள நடைப்பயிற்சிப் பாதைகள் தொடர்பிலான பராமரிப்புப் பணியினை ஒருங்கிணைத்தல்.
- சேவைக் கட்டளைத் தளபதிகள் சமூக சிவில் நிகழ்வுகளுக்காக கோரிக்கையின் பேரில் சமுகமளிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கல்.
- முப்படைகளினதும் வாத்தியக்குழச் சேவைகளை வழங்குவதன் மூலம் நிகழ்வுகளுக்கு வசதியேற்பாடளித்தல்.
- அரசின் சம்பிரதாயபூர்வமிக்க நிகழ்வுகளுக்கு உதவி அவற்றை ஒருங்கிணைத்தல்.

- தேவைக்கேற்ப படைகளை வழங்குதல்
- அழைப்பிதழ்களை தயாரித்தல், இருக்கை ஒழுங்கமைவு மற்றும் ஒருங்கிணைப்பு.

டி. ஜனாதிபதி.். பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரால் முன்வைக்கப்படுகின்ற ஏதேனும் ஏனைய இலக்குகள்.

## 11.2 2014 இல் பெற்ற அடைவுகள்

இந்த அலுவலகம் மூலம் முன்னெடுக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பொறுப்புக்களும் வினைத்திறன்மிக்க முறையில் பூர்த்தியடைந்துள்ளன.

இராணுவ தொடர்பு அலுவலகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட சந்தஹிறு ஸ்துபா நிர்மாணிப்பானது அதன் பூர்வாங்க நிலையிலிருந்து ஒரு வெற்றிகரமான முன்னேற்றத்தையே காட்டும் வகையில் நிமிர்ந்து காணப்பட்டது.

2014 இன்போது இராணுவத் தொடர்பு அலுவலகத்தினூடாக முப்படைகளினாலும் ஒருங்கிணைக்கப்பட்ட பாரிய கொழும்பு நகர அபிவிருத்தி, கால்வாய் துப்பரவாக்கம் மற்றும் நகர அபிவிருத்திக் கருத்திட்டம் ஆகியன பயனுறுதிமிக்க முறையில் நீடிக்கும் தன்மையோடு பேணப்பட்டன.

## 11.3 பகுப்பாய்வும் மதிப்பாய்வும்

இத்திணைக்களமானது அமைச்சு மற்றும் ஏனைய நிறுவகங்களுடன் முப்படைகளையும் ஒருங்கிணைக்கும் பணியையே மேற்கொள்வதனால், நிதிசார் முன்னேற்றம் பற்றிய அறிக்கையிடலானது இராணுவத் தொடர்பு அலுவலகத்திற்கு ஏற்புடையதல்ல. ஆகையால், மூலதன மற்றும் மீண்டெழும் செலவினமும் ஏற்புடையதல்ல.

**2014 ஆம் ஆண்டு முழுவதிலுமான செயலாற்றுகை**

- வெளிநாட்டு உயர் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிக்குழுவினர் நாட்டிற்குள் வருகை தரும் போது, இராணுவத் தொடர்பு அலுவலகமானது, கடமைகளும் பதிலளிப்புக்களும் என்பதன் கீழ் சுட்டிக்காட்டியவாறு 2014 இன் போது இலங்கை விமானப்படையின் உதவியோடு விமானப் பயணங்கள் தொடர்பில் ஏற்பாடு செய்து அவற்றை ஒருங்கிணைத்துள்ளது.

அவ்வாறே, அத்தகைய பிரதிநிதிகளுக்கான கடல் மார்க்கப் பயணங்களும் கடற்படையின் ஒத்துழைப்போடு ஒருங்கிணைக்கப்பட்டன. முன்னர் இடம்பெற்ற யுத்த முனைகளுக்கான வெளிநாட்டு பிரதிநிதிகளின் சமுகமளிப்புக்களும் இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்போடு ஒருங்கிணைக்கப்பட்டன. வெளிநாட்டு ஊடக அமைப்புக்களுக்கம் அவர்களின் பணியாளர்களுக்கும் அரசின் தேவைப்பாடுகளுக்கேற்ப சம உதவிகளே வழங்கப்பட்டன.

முன்னர் இடம்பெற்ற யுத்த முனைகளுக்கான வெளிநாட்டு பிரதிநிதிகளின் சமுகமளிப்புக்களும் இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்போடு ஒருங்கிணைக்கப்பட்டன. வெளிநாட்டு ஊடக அமைப்புக்களுக்கம் அவர்களின் பணியாளர்களுக்கும் அரசின் தேவைப்பாடுகளுக்கேற்ப சம உதவிகளே வழங்கப்பட்டன.

- இவை தவிர, இராணுவத் தொடர்பு அலுவலகமானது இராஜதந்திரக் குழக்களுக்கான வசதியளிப்புக்களை வழங்கிய அதேவேளை, அவர்களின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான இராணுவ உதவிகளையும் ஒருங்கிணைத்தது. இவற்றுள் ஒழுங்கமைக்கப்பட்ட பாதுகாப்பு இணைப்புக் கூட்டமானது ஒரு மாதத்திற்கு இரு முறை என்ற அடிப்படையில் இவ்வாண்டுக்காலத்தின் போது வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டன.

- 2014 ஆம் ஆண்டின் போது முப்படைகளினாலும் வேண்டப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் சுங்கத்திலிருந்தான வெளியாக்க மற்றும் ஒருங்கிணைப்பு உதவிகளும், இப்பொருட்கள் வந்திறங்கிய போது வழங்கப்பட்டன. இச்செயற்பாட்டின் போது, உருமறைக்கப்பட்ட சீருடைகள் தொடர்பான அபாயகரப் பொருள் வெளியக்கம், விமானம், விமான உதிரிப்பாகங்கள், படகுகள், படகின் வெளி இயந்திரம்.். உள் இயந்திரங்கள் மற்றும் விசேட கருவிகள் ஆகியன தொட்பிலும் ஒருங்கிணைப்புப் பணி வழங்கப்பட்டது.

- இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட கம்பனி மற்றும் கைத்தொழில், வாணிப அமைச்சு ஆகியவற்றின் பேரில், இராணுவத்தின் உருமறைப்புச் சீருடைகளை இறக்குமதிசெய்தல், உற்பத்தி செய்தல், மற்றும் அவற்றைக் கொண்டுசெல்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

- 2014 பெப்ரவரி 04 ஆம் திகதி தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கான படையினர்களை வழிநடாத்தி அது தொடர்பில் ஒருங்கிணைப்புச் செய்ததோடு, இது தொடர்பிலான அனைத்து நிகழ்வுகளும் வெற்றிகரமாக நிறைவுற்றன.

- சிவில் பாதுகாப்புப் படை மற்றும் முப்படையினர் ஆகியோர் அரசினால் வேண்டப்பட்டவாறு சந்தஹிரு ஸ்துபா நிர்மாணத் தளத்திற்கு வழியனுப்பப்பட்டதோடு, அனைத்து மத அனு்டானங்களும் வெற்றிகரமான ஒருங்கிணைக்கப்பட்டன.

| தேசிய இனம் | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|
| **அவுஸ்திரேலிய்** | 01 |
| **பங்காளதேசம்** | 04 |
| **சீனா** | 09 |
| **இந்தியா** | 01 |
| **இந்தோனேசியா** | 02 |
| **ஜப்பானியர்** | 10 |
| **கொரியா** | 04 |
| **ஓமான்** | 01 |
| **பாகிஸ்தான்** | 03 |
| **ர்'யா** | 11 |

- 2014 மே 19 ஆம் திகதி இடம்பெற்ற தேசிய யுத்த வெற்றி தின விழாவுக்காக வேண்டப்பட்ட படைகளை வழிப்படுத்தி ஒருங்கிணைத்ததோடு, அனைத்து நிகழ்வுகளும் வெற்றிகரமாக நிறைவுற்றன. அரச சம்பிரதாய நிகழ்வுகள் தவிர, முப்படையினர் கொண்டாட்ட நிகழ்வுகளும் இதற்கிணங்க ஒருங்கிணைக்கப்பட்டன.

- பாதுகாப்பு தொடர்பான விடயங்களுக்கு உதவும் வகையில், தேவையான போது சம்பந்தப்பட்ட நாடுகளின் தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிராலயங்களுடன் ஒருங்கிணைப்பு வழங்கப்பட்டது. இத்தகைய ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளும் நெருங்கிய தொடர்புகளும் உண்மையில் அத்தகைய நாடுகளுடனான பாதுகாப்புப் பிணைப்புக்களை வலுப்படுத்த உதவியுள்ளன.

- 2014 ஆம் ஆண்டுக்காலத்தின் போது, முன்னைய யுத்த முனைகளுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்கள் செல்வதற்கு கண்டிப்பாகவே மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதோடு, இத்தகைய முன்னெடுப்புக்களும் பாதுகாப்பு அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டன. இதனால், இத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட இடங்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்கள் விஜயம் செய்யும் போது இராணுவத் தொடர்பு அலுவலகமானது நேரடியாகவே ஈடுபட்டு இது தொடர்பில் கண்காணித்து ஒருங்கிணைப்புப் பணியையும் மேற்கொண்டது. அதேவேளை, இதுபோன்ற இராணுவ தாபிப்புக்களுக்கான விஜயங்களும் கண்காணிக்கப்பட்டன.

- 2014 ஆம் ஆண்டுக் காலத்தின் போது, நல்லெண்ண வருகை மற்றும் மீள்நிரப்பல் போன்றவற்றுக்காக கொழும்பு.˙. திருகோணமலை துறைமுகங்களுக்குள் நுழைவதற்காக கீழுள்ள வகைகளின் கீழான வெளிநாட்டுக் கப்பல்களுக்கான பிரமுகர்கள் இசைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

**அட்டவணை 11.1: வருகை தந்த வெளிநாட்டுக் கப்பல்களின் எண்ணிக்கை**

- 2014 இல் 245 வெளிநாட்டு இராணுவம்.˙. விமானப்படை விமானம் தரையிறங்குவதற்கான பிரமுகர் இசைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

- நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய பொருட்களையும் விடயங்களையும் இறக்குமதி செய்வதானது என்றும்போல் கடந்த ஆண்டும் இராணுவத் தொடர்பு அலுவலகத்தினால் கட்டுப்படுத்தப்பட்டது. இத்தகைய கட்டுப்பாட்டு மற்றும் தடுப்புச் செயற்பாடுகள் அவசியமெனக் கருதப்படக்கூடிய உரிய வேளைகளில் மேற்கொள்ளப்பட்டன.
- வழமைக்கு மாற்றமாக இலங்கையின் ஆட்புலப் பிரதேசத்தினுள் நடமாடுகின்ற கடல்மார்க்க மற்றும் ஆகாய மார்க்க அனைத்து நடமாட்டங்களையும் அவ்வப்போது நாம் கண்காணித்து வருகின்றோம். அவ்வாறே, தேவைப்பாட்டின் தன்மையினைக் கருத்திற்கொண்டு இராணுவ விமானங்கள் செல்வதற்கான விமான மார்க்கத்திற்கான அங்கீகாரங்களும் வழங்கப்பட்டன. இவை தவிர, தேவையான பொழுது வரைபடங்கள் மற்றும் விமானம் மூலமான புகைப்படங்கள் ஆகியவற்றுக்கான வசதியளிப்பினையும் நம் செய்துள்ளோம்.

- 2014 ஆம் ஆண்டுக் காலத்தினுள், பாதுகாப்பு அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற வெளி நிறுவனங்களின் அதிகாரிகளுடனான அனேக கூட்டங்கள் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றன. இதன்போது இத்தகைய மாநாடுகள் தொடர்பிலான அனைத்து ஏற்பாடுகளும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளும் இராணுவத் தொடர்பு அலுவலகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டன.

- 2014 ஆம் ஆண்டுக் காலத்தினுள், முப்படைகளின் தொடர்பாடல்கள் மற்றும் வெளியக நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள் தொடர்பில் வேண்டிநின்ற ஏனைய அதிகாரிகளின் கடப்பாடுகள் போன்றனவும் பயனுறுதிமிக்க வகையில் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன.

- 2014 ஆம் ஆண்டுக் காலத்தின் போது வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் இராஜதந்திரிகளினால் இராணுவத் தளங்களுக்கு விஜயம் மேற்கொள்வதற்காக வேண்டப்பட்ட கோரிக்கைகள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன.

- முப்படைகளினதும் அதிகாரிகள் மற்றும் வெளியக அரசாங்க நிறுவனங்களில் இணைந்துள்ள ஏனைய தர அதிகாரிகள் ஆகியோர் இராணுவத் தொடர்பு அலுவலகத்தினால் நிர்வகிக்கப்பட்டனர். இதற்கிணங்க, இவர்களின் இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் ஆகியனவும் உரிய கடமைகளுக்கு தடங்கல்கள் எதுவும் ஏற்படாவண்ணம் பயனுறுதிமிக்க முறையில் இவ்வாண்டுக்காலத்தின் போது ஒருங்கிணைக்கப்பட்டன.

- கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலத்தில் காலி முகத்திடலில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கான அங்கீகாரம் கொழும்பு துறைமுக அதிகாரசபையின் ஒருங்கிணைப்போடு வழங்கப்பட்டது.

- பாதுகாப்பு அமைச்சு என்றவகையில், முன்னைய அரசாங்கத்தின் கீழ் நகர அபிவிருத்தித் துறையினைக் கையாண்ட படியினால், சில அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் பாதுகாப்பு அமைச்சினால் நேரடியாகவே நிர்வகிக்கப்பட்டன. அதாவது, இத்தகைய பிரதேசங்களை புகைப்படங்களுக்கான பின்னணியாகவும், திரைப்படமெடுத்தல், பதிவுசெய்கை, மற்றும் காணொளியெடுத்தல் போன்றவற்றுக்காவும் பயன்படுத்துவதற்கான பொதுமக்களின் கோரிக்கைகளும் இவ்வாண்டுக் காலத்தின் போது ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன. உதாரணமாக, காலி முகத்திடல், கொழும்பு வெளிச்சவீடு போன்றன. மேலும், வான்வழிப் புகைப்படமெடுத்தலுக்கான அங்கீகாரமும் கோரிக்கையின் பேரில் வழங்கப்பட்டன.

- மேலும், சில மத ரீதியான, நினைவுகூர்கை மற்றும் ஜனாதிபதி கலந்துகொண்ட ஏனைய விசேட நிகழ்வுகளும் இராணுவத்தினரின் பங்களிப்போடு வசதியளிக்கப்பட்டன. உதாரணமாக, பொசன் கொண்டாட்டம், அரச மத நிகழ்வுகள் போன்றன.

- பாதுகாப்பு இசைவுச் சான்றிதழ் விநியோகமும் இவ்வாண்டுக்காலத்தின் போது கோரிக்கையின் பேரில் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன (டி லா றியு லங்கா கரன்சி அன் செக்கியுரிட்டி பிரின்ட் (பிறை) லிமிட்)

- வெளிநாட்டு "அரச தலைவர்கள்" இனால் திட்டமிடப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட அரச விஜயங்களின் போதான நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட பின்வரும் வசதியளிப்புக்கள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன. உதாரணமாக, சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதியால் 2014 செப்டம்பரில் மேற்கொள்ளப்பட்ட அரச விஜயம்.

ய. வரவேற்பதற்கான சம்பிரதாயபூர்வமான துப்பாக்கி வேட்டுக்கள் மூலமான வரவேற்பு.

ட. பிரதிநிதிகள் குழவின் பொதிகளைக் கையாண்டமை.

உ. சம்பிரதாய ரீதியான மோட்டார் அணிவகுப்பினை ஒருங்கிணைத்தமை.

ன. சம்பந்தப்பட்ட படையணியினரின் சம்பிரதாய மற்றும் கலாசார ரீதியான செயலாற்றுகைகள்.

ந. பிரதான நிகழ்வுகள் உட்பட, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வந்திறங்கல் மற்றும் வெளிச்செல்லல் பிரதேசங்களில் கௌரவ வரவேற்பு அணியினை ஏற்பாடு செய்தல்.

க. பாராளுமன்ற மைதானத்திலுள்ள யுத்த வீரர்களின் நினைவுச் சின்னத்தில் சம்பிரதாய நிகழ்வுகளை மேற்கொள்ளல் (நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பின்)

ப. வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் அப்புலான்ஸ் வண்டி போன்ற சேவைகளுடன் தொடர்பான ஏனைய வசதிகளை ஒருங்கிணைத்தல்.

ா. முக்கிய பிரமுகர்களுக்கான விமானம் மூலமான பயணங்களை ஒருங்கிணைத்தல்.

ை. முக்கிய பிரமுகர்களின் வருகைக்கு முன்னர் முற்பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

## 11.4 எதிர்கால வாய்ப்புக்கள்

பாதுகாப்பு அமைச்சின் நோக்கெல்லையின் கீழான விடயங்களிலான பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட தொலைநோக்கு நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் முன்னெடுப்புக்கள் ஆகியன எதிர்வரும் ஆண்டுகளின் போது அமைச்சின் முழுத் திறமையுடனும் உதவியளிக்கப்பட வேண்டியுள்ளன. விசேட கருத்திட்டங்கள் மற்றும் நாட்டின் தேவைப்பாடுகளுக்கேற்ப பாதுகாப்பு அமைச்சுக்குப் பொறுப்பாகவுள்ள இலக்குகள் ஆகியவற்றை பொறுப்பெடுத்தல்∴ ஒருங்கிணைப்புச் செய்தல். எதிர்வருகின்ற ஆண்டில் மேற்குறிப்பிட்ட இடைக்காலப் பணிகளை முழு அளவிலான தொழில்வாண்மையுடனான முப்படைகளினதும் வினைத்திறன் மிக்க ஒருங்கிணைப்பானது பேணப்பட வேண்டியுள்ளது. சந்தஹிரு ஸ்ரியுபாவின் தொடர்ச்சியான எழுச்சியானது முப்படைகள், சிவில் பாதுகாப்புப் படை, மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் ஒருங்கிணைப்போடு துரிதப்படுத்தப்படல் வேண்டும்.

# நிறுவனங்களின் செயலாற்றுகை

# கரையோரக் காவற்படைத் திணைக்களம்

## 12.1 மேலோட்டப் பார்வை

இலங்கையின் கரையோரக் காவற்படையானது கடல் சார்ந்த சுற்றுப்புறச் சூழலின் காவல், பாதுகாப்பு, மற்றும் அமைதி நிலைமை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் தாபிக்கப்பட்டதாகும். கடல்சார் பிரதேசங்களில் சட்ட அமுலாக்கல் முகவராகத் தொழிற்படுகின்ற இலங்கை கரையோரக் காவற்படையானது நாட்டிற்குச் சொந்தமான கடற்பிரதேசத்தைச் சூழ்ந்த தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கான பாரிய வகிபாகத்தைக் கொண்டு செயற்படுவதற்கான தேவைப்பாட்டைக் கொண்டுள்ளது. இலங்கையின் கடல்சார் வலயங்களிலும் நீர்நிலைகள் சார்ந்த ஆட்புலப் பிரதேசங்களிலும் இடம்பெறக்கூடிய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய கப்பல்கள், விமானங்கள் மற்றும் நபர்களைத் தேடிக் கைதுசெய்வதற்கான சட்ட அதிகாரத்தைக் கொண்டும் குற்றவாளிகளுக்கெதிரான சட்ட நடைமுறையினை தாபிப்பதைக் கொண்டும் வலுவூட்டப்பட்டுள்ளது.

இலங்கை கரையோரக் காவற்படையானது தற்போது 64 அலுவலர்களுடனும் 964 கப்பலோடிகளுடனும் செயற்படுகின்றது. இவர்கள் கீழே குறிப்பிடப்பட்ட கரையோர பாதுகாப்பு நிலையங்கள், உயிர் பாதுகாப்பு மையம், மற்றும் ரோந்துப் படகுகள் ஆகியவற்றில் பணியாற்றுகின்றனர்.




## 12.2 2014 ஆம் ஆண்டில் பெற்ற அடைவுகள்

### 12.2.1 செயற்பாடு சார்ந்தவை

2014 ஆம் ஆண்டின் போது இலங்கை கரையோரக் காவற்படையினால் அனேக செயற்பாடு சார்ந்த நடவடிக்கைகளும் இலக்குகளும்

ய. உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள்
டி. சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கான கரையோர கண்காணிப்பு
உ. சட்டவிரோத, கட்டுப்பாடு மீறிய, மற்றும் அறிவிக்கப்படாத மீன்பிடித்தல்களை கண்காணித்தல்.
ன. சமுதாய விழிப்பூட்டல் நடவடிக்கைகள்.
ந. தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள்.
க. சட்ட அமுலாக்க நடவடிக்கைகள்
ப. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

மேற்படி பிரதான செயற்பாடு சார்ந்த நடவடிக்கைகள் கிடைக்கத்தகு மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி வினைத்திறன்மிக்க முறையிலும் பயனுறுதிமிக்க முறையிலும் 2014 ஆம் ஆண்டுக் காலத்தின் போது இலங்கை கரையோரக் காவற்படையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


#### 12.2.1.1 உயிர் காப்பு நடவடிக்கைகள்

மேற்குறிப்பிட்ட உயிர் காப்பு மையங்களில் தகைமைவாய்ந்த உயிர் காப்பு வீரர்கள் நிலைகொண்டுள்ளனர்.

இலங்கை கரையோரக் காவற்படையானது 2014 ஆம் ஆண்டின் போது 52 வெளிநாட்டவர் உட்பட 127 பேர்களை உயிர் காப்பாற்றியுள்ளது.




**வரைபு 12.1: 2014 இல் காப்பாற்றப்பட்ட உயிர்கள்**



### 12.2.1.2 சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதற்கான கரையோரக் கண்காணிப்பு

இலங்கை கரையோரக் காவற்படையின் அனைத்து கப்பற்படை அலகுகளும் நாட்டிலுள்ள நீர்நிலை சார்ந்த ஆட்புலங்களில் இடம்பெறக்கூடிய சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து வேகமான ரோந்துப் படகுகளும் மற்றும் அனேக கரையோர ரோந்துப் படகுகளும் வட பகுதி கடற்பிரதேசத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு, எஞ்சிய கரையோர ரோந்துப் படகுகள் தெற்கு கரையோரப் பிரதேசத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட மீன்பிடித் துறைமுகங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, சில கரையோர ரோந்துப் படகுகள் உயிர் காப்பு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதோடு, கரையோரங்களில் திமிங்கிலங்கள் பற்றிய கண்காணிப்பிலும் ஈடுபட்டன. இலங்கை கரையோரக் காவற்படையின் கப்பற்படையினரின் ஈடுபடுத்துகை பற்றிய விபரமான தகவல்கள் பிற்சேர்க்கை ‘அ’ இல் தரப்பட்டுள்ளன.

### 12.2.1.3 சட்டவிரோத, கட்டுப்பாடு மீறிய, மற்றும் அனுமதி பெறப்படாத மீன்பிடித்தல்களை கண்காணித்தல்

சட்டவிரோத, கட்டுப்பாடு மீறிய, மற்றும் அனுமதி பெறப்படாத மீன்பிடித்தல் குறித்தான கண்காணிப்புப் பணிகள் இலங்கை கரையோரக் காவற்படையின் பணியாளர்களினால் நாட்டிலன் பின்வரும் மீன்பிடித் துறைமுகப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையின் கரையோரப் பாதுகாப்பு தொடர்பில் எதிர்காலத்தில் அனைத்து மீன்பிடித் துறைமுகங்களிலும் மேற்படி கண்காணிப்பினைத் தாபிப்பதற்கு திட்டமிடப்படுகிறது.




### 12.2.1.4 சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகள்

இவ்வாண்டுக் காலத்தில் கரையோரப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களுக்கு கிரம முறையிலான சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் இடம்பெற்றன.

ை. கடல் வாழ் உயிரினங்களின் பாதுகாப்பு
ைை. கடல் மாசுறுதலைத் தடுத்தல்
ைைை. கரையோரப் பாதுகாப்பு
ைஎ. உயிர் காப்பு
எ. கடற்கரைப் பிரதேச தூய்மையாக்கல் திட்டம்
எை. சட்டவிரோத மீன்பிடித்தலைத் தடுக்கும் பொருட்டு மீன்பிடிச் சமூகத்திற்கான விழிப்புணர்வுத் திட்டங்கள்

### 12.2.1.5 தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள்


கிடைக்கத்தகு வளங்களைப் பயன்படுத்தி கரையோரப்பிரதேசங்களில் தேடல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கான உதவிகள் இலங்கை கடற்படை மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 12.2.1.6 சட்ட அமுலாக்க நடவடிக்கைகள்

நீர்நிலை சார்ந்த ஆட்புலப் பிரதேசங்களில் சட்ட அமுலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, ஏனைய தேசிய சட்ட அமுலாக்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்க அதிகாரசபைகள் ஆகியன தத்தமது சம்பந்தப்பட்ட கடமைகளை மேற்கொள்ளும் வகையிலான அவசியமான உதவிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. உதாரணமாக, பொலிஸ் திணைக்களம், மீன்பிடித் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம்.

இலங்கை கரையோரக் காவற்படையின் கப்பற்படைப் பிரிவானது நாடு திரும்புவோர் தொடர்பிலான பல்வேறு நடவடிக்கைகளை, இலங்கை கடற்படை மற்றும் இந்திய கரையோக் காவல்படை ஆகியோரின் ஒத்துழைப்போடு நிறைவேற்றியுள்ளது.

**வரைபு 12.2: 2014 ஆம் ஆண்டின் போது நாட்டுக்குத் திரும்பிய மீனவர்கள் பற்றிய விபரம்**




- இந்திய கரையோரக் காவல் படையினால் நாட்டிற்குத் திருப்பியனுப்பப்பட்ட இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை-349
- இலங்கைக் கரையோரக் காவல் படையினால் நாட்டிற்குத் திருப்பியனுப்பப்பட்ட இந்திய மீனவர்களின் எண்ணிக்கை - 600

### 12.2.1.7 ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் கீழ், படகுப் போக்குவரத்துக் கண்காணிப்பு முறைமையின் பரீட்சார்த்த நடவடிக்கையொன்று இலங்கை கரையோரக் காவற்படையின் தலைமைச்

செயலகத்தில் நடவடிக்கை அறைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. இது கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிப் பீடத்தினால் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டதாகும். மேற்படி படகுப் போக்குவரத்துக் கண்காணிப்பு முறைமையானது இலங்கைக் கரையோரக் காவற்படையின் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளதோடு, இது இலங்கைக் கரையோரக் காவற்படையின் நடவடிக்கை வழிகாட்டலைக் கொண்டு இற்றைப்படுத்தப்பட்டது. தற்போது இம்முறைமையானது, இலங்கைக் கரையோரக் காவற்படைக்கான படகுப் போக்குவரத்துக் கண்காணிப்பு முறைமையினை உள்ளார்ந்த வகையில் சிறப்பாக திருத்தியமைக்கும் நோக்கில், அமுல்படுத்தவுள்ள மேம்பாடுகளை இனங்காணும் வகையில் இலங்கைக் கரையோரக் காவற்படையினர் கொண்டு பணிக்கமர்த்தப்படுகின்றது.

### 12.2.1.8 வெளிநாட்டு பிரதிநிதிகளுடனான இடைத்தொடர்புகள்

அவுஸ்திரேலிய எல்லையோரப் பாதுகாப்புச் சேவை, இந்திய கரையோரக் காவற்படை, ஜப்பான் கரையோரக் காவற்படை, மற்றும் ஐக்கிய அமெரிக்க கரையோரக் காவற்படை போன்ற உலகின் முன்னோடி கரையோரக் காவற்படைகள் மற்றும் கடல்மார்க்க முகவர்களுடனான சாத்தியமிக்க இடையீட்டுத் தொடர்புகளை இலங்கைக் கரையோரக் காவற்படை மேற்கொண்டுள்ளது. இவ் இடைத்தொடர்புகள் பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியிலான கடல்மார்க்க ஒத்துழைப்பினை பல வழிகளில் மேம்படுத்தும் வகையில் உதவியுள்ள அதேவேளை, இலங்கை கரையோரக் காவற்படையின் முன்னேற்றத்திலான தொழிற்பாட்டுத் திறன் மற்றும் திறமையினை மேம்படுத்தியுள்ளது.

வெளிநாட்டு கடல்மார்க்க அமைப்புகளுடனான, விசேடமாக வெளிநாட்டுக் கரையோரக் காவற்படைகளுடனான சாத்தியமிக்க இடைத்தொடர்பானது பிராந்திய ரீதியிலான ஒத்துழைப்பிற்கான வினைத்திறன் மிக்க இயக்கக் காரணியாகத் திகழ்கின்றது. மேலும், இம் முயற்சியானது நிச்சயமாக இலங்கை கரையோரக் காவல் படையானது பிராந்தியத்திலேயே ஒரு சிறந்த கரையோரக் காவல் படையாகத் திகழ்வதற்கு வழியமைக்கும் என்பதில் சந்தேமில்லை.

### 12.2.2 பயிற்சி நடவடிக்கைகள்

2014 இல் கரையோரக் காவல் தொடர்பிலான அனேக எண்ணிக்கையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கை கரையோரக் காவல் படையினால் நடத்தப்பட்டன. இது காவல் படையினரின் திறமை, தொழில்நுட்ப அறிவு மற்றும் சம்பந்தப்பட்ட துறையிலான நிபுணத்துவம் ஆகியவற்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் இடம்பெற்றது. மேலும், உயிர் காப்பு நுட்பம் குறித்தான விழிப்புணர்வினை சிவில் சமூகத்தின் மத்தியில் மேம்படுத்தும் வகையிலான அனேக உயிர் காப்பு பயிற்சிநெறிகளும் நடத்தப்பட்டன.

2014 இல், “வெள்ளிப் பதக்கம்” எனும் பெயரிலான உயிர் காப்ப பயிற்சிநெறி இலங்கை கரையோரக் காவல் படையினால் மிரிஸ்ஸ பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது. இது இலங்கை உயிர் காப்புச் சங்கம் மற்றும் அவுஸ்திரேலியாவின் உயிர் காக்கும் விக்டோரியா ஒன்றியம் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு இடம்பெற்றது.

அவுஸ்திரேலியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் இலங்கை கரையோரக் காவல் படையினருக்கும் அதன் அலுவலர்களுக்கும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கின. இவ் வெளிநாட்டுப் பயிற்சகள் பிரதானமாக நிபுணத்துவமிக்க கரையோரக் காவல் பயிற்சிநெறிகள், பயிற்சிகள் மற்றும் அதன் பிரயோகங்கள் தொடர்பிலேயே மைய அவதானத்தைக் கொண்டிருந்தன. இவை தவிர, பிராந்திய கூட்டிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு, தகவல், அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்தல், புதிய நட்புறவினை உருவாக்கல் போன்ற வெளிநாட்டுப் பயிற்சிகள் மூலம் இலங்கை கரையோரக் காவல் படையினர் அடைந்துகொண்ட பொதுவான பிரதானமிக்க அம்சங்களாகும்.

### 12.2.3 திறன் கட்டியெழுப்புகை நடவடிக்கைகள்

கரையோரப் பாதுகாப்புக் காவல் படையினரின் திறனை மேம்படுத்தும் நோக்கில், உள்நாட்டு ஈடுபாட்டாளர்கள் அதேபோல் வெளிநாட்டு கரையோரப் பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் கடற்படையினர் ஆகியோருடனான இணைந்த பயிற்சிகள் போன்ற திறன் கட்டியெழுப்பல் தொடர்பான நடவடிக்கைகளும் இவ்வாண்டுக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டன. மேலும், அனேக வெளிநாடுகளும் பயிற்சி உதவிகளை வழங்கியதோடு, ஜப்பான் கரையோரக் காவல் படையானது இலங்கை கரையோரக் காவல் படையினுள் “எண்ணெய் கசிவுக்கான பதிலளிப்புக் குழு” எனும் திறமைவாய்ந்ததும் பொருத்தமான கருவிகளைக் கொண்டதுமான குழுவை உருவாக்க உதவியது. இது எண்ணெய்க் கசிவு தொடர்பில் சிறந்த முறையில் பதிலளிக்கும் வகையில் முழு அளவில் செயற்படக்கூடிய தேசிய குழுவை உருவாக்குவதை இலக்காகக் கொண்டதாகும்.





### 12.2.4 2014 இல் இடம்பெற்ற நிர்மாணிப்பு/ தொழில்நுட்பம் சார்ந்த பிரதான நடவடிக்கைகள்

தொழில்நுட்ப மற்றும் நிர்மாணக் கிளையானது கடல் சார்ந்த பொறியியல், இலத்திரனியல் பொறியியல், சிவில் பொறியியல், மற்றும் மோட்டார் வாகனப் பொறியில் ஆகியன தொடர்பிலான திட்டங்கள் மற்றும் உபாயங்களை வகுப்பதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. 2014 இல் அமுல்படுத்தப்பட்ட பாரிய

கருத்திட்டமானது நாடளாவிய ரீதியில் உயிர் காப்பு மையங்களை நிர்மாணித்தலாகும். கிருந்தவில் மூழ்கல் மைய நிர்மாணிப்பு மற்றும் கட்டமைப்பு வலை அளவை முறைமையினை (சூரிய சக்தி) நிறுவுதல் ஆகியன கடந்த ஆண்டில் தொழில்நுட்பக் கிளை அடைந்த பாரிய சாதனைகளாகும்.

மேலும், இலங்கை கரையோரக் காவலின் தொழில்நுட்பப் பிரிவானது காற்றாலை மற்றும் சூரிய தகடுகளைப் (1 கி.வாட்) பயன்படுத்தி குறைந்த செலவிலான, சுற்றாடல் நேயமிக்க சக்தி உருவாக்கத்தினை மேற்கொள்ள எதிர்பார்க்கிறது.

**அட்டவணை 12.1: 2014 இல் பூர்த்தியடைந்த பாரிய நிர்மாணக் கருத்திட்டங்கள்**

| கருத்திட்டத்தின் பெயர் | முன்னேற்றம் |
|---|---|
| **தெஹிவளை, ஹிக்கடுவை ஆகிய இடங்களில் உயிர் காப்பு மையங்களை நிர்மாணித்தல் மற்றும் பெந்தோட்டையிலுள்ள தை புத்தாக்கம் செய்தல்.** | வெற்றிகரமாக பூர்த்தியடைந்தது |
| **கிரிந்த மூழ்கல் நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம்.** | வெற்றிகரமாக பூர்த்தியடைந்தது |
| **டிகோவிட்ட ஊபுளு இல் அலுவலர்களுக்கா வசிப்பிடம், பொது உணவகம், மற்றும் அலுவலகத் தொகுதி ஆகியவற்றின் நிர்மாணம்.** | வெற்றிகரமாக பூர்த்தியடைந்தது |
| **ஒலுவில் ளுடுஊபு இல் கப்பல் அதிகாரிகளின் அறை நிர்மாணிப்பு** | வெற்றிகரமாக பூர்த்தியடைந்தது |
| **டிகோவிட்ட ஊபுளு இல் கனிட்ட மாலுமிகளுக்கான விடுதிக் கட்டடங்களின் நிர்மாணிப்பு** | வெற்றிகரமாக பூர்த்தியடைந்தது |
| **சூரிய சக்தி ஆலைகள்** | கிரிந்தவிலுள்ள இலங்கை கரையோரக் காவல் நிலையத்தில் 21 கி.வாட் வலு கொண்ட சூரிய சக்தி ஆலை தாபிக்கப்பட்டதோடு, இது மின்சாரப் பட்டியலை குறைத்துள்ளது. |
| **மிரிஸ்ஸவில் ஏவுஆளு** | கொழும்பு பல்கலைக்கழகத்தின் உதவியோடு மிரிஸ்ஸ ஊபுர்ளு இல் படகுப் போக்குவரத்துக் கண்காணிப்பு முறைமை தாபிக்கப்பட்டது. |
| **கிரிந்த ளுடுஊபு இல் ராடர் நிலையம்** | கிரிந்த ஊபுளு இல் 12 முறு ராடர் நிறுவப்பட்டுள்ளது. இது இப்பிரதேசத்தில் இடம்பெறக்கூடிய சட்டவிரோத கடல் மார்க்க நடவடிக்கைகளை மிகவும் துல்லியமாக எடுத்துக்காட்டக்கூடியதாகும். |
| **பிரதான ளுடுஊபு தளத்தில் எச்.எவ். தொடர்பாடல் முறைமை** | றோஹானை ளுடுஊபு, வருண ளுடுஊபு, மற்றும் ஒலுவில் ஊபுளு ஆகியவற்றில் புதிய எச்.எவ். தொடர்பாடல் கருவிகள் நிறுவப்பட்டன. |
| **ஊபுசுர்ளு கப்பல் அதிகாரிகளின் அறையில் 3கட்ட மின் இணைப்பு** | வெற்றிகரமாக பூர்த்தியடைந்தது |
| **றொஹானை ளுடுஊபு இல் 30 ஏ 3கட்ட இணைப்பினை 60 ஏ 3கட்ட இணைப்பிற்கு தரமுயர்த்தல்.** | ளுடுஊபு இன் விரிவாக்கத்தோடு இம்மாற்றத்தின் மூலம் மிரிஸ்ஸ ஊபுர்ளு இற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. |
| **வெள்ளவத்தை உயிர் காப்பு மையத்தில் காற்றாலை மின்னுற்பத்தி** | வெற்றிகரமாக பூர்த்தியடைந்தது |




தெஹிவளையில் உயிர் காப்பு மையத்தை வைபவ ரீதியாக திறந்துவைத்தல்




ஒலுவில் ஊபுளு இல் கப்பல் அதிகாரிகளின் அறை

**அட்டவணை 12.2: அடையப்படாத இலக்குகளும் 2015 இற்க ஒத்தி வைக்கப்பட்ட பணிகளும்**

| கருத்திட்டத்தின் பெயர் | முன்னேற்றம் |
|---|---|
| உணவட்டுண மற்றும் மொரகொல்ல ஆகிய பிரதேசங்களில் உயிர் காப்பு மையங்களை நிர்மாணித்தல் | நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது |
| கப்பல் ஏற்றும் சிமியுலேட்டர் உள்பட இரண்டு மாடி கட்டடம் நிர்மாணிப்பு | மிரிஸ்ஸவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது |
| மிரிஸ்ஸ றொஹண ளுடுஊபு இல் சிரேட்ட அதிகாரிகளுக்கான புதிய குடிசைகளை நிர்மாணித்தல் | 95மூ பூர்த்தி. |
| ஒலுவில் ஊபுளு இல் அலுவலக கட்டடம் நிர்மாணித்தல். | 50மூ இற்கும் மேல் பூர்த்தி |

**ஏனையவை**

மேற்கூறப்பட்ட அடைவுகள் தவிர்ந்த பின்வரும் கூட்டுறவுச் சமூக பொறுப்புக்களும் 2014 ஆம் ஆண்டுக் காலத்தின் போது இலங்கை கரையோரக் காவல் பிரிவினால் அடையப்பட்டன.

- வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிஸ்ஸை, மற்றும் பலப்பிட்டி ஆகிய பிரதேச கடற்கரைப் பகுதிகளில் அழகுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
- கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் தனியார்த் துறையினர் ஆகியோரின் உதவியுடன் பம்பலப்பிட்டியிலிருந்து அங்கொட வரைக்குமாக தாவர நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
- அரசாங்க நிறுவனங்களின் இணைப்போடு டெங்கு தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
- கடற்றொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதோடு, இவை விசேடமாக இனப்பெருக்க காலத்தில் நண்டு அறுவடை மற்றும் கடல் பாதுகாப்பு போன்றன தொடர்பிலான சட்ட ரீதியான பரிசீலனை குறித்து வலியுறுத்தப்பட்டது
- உயிர் காப்பின் முக்கியத்துவம், உயிர் காப்பு முறை, பாடசால மாணவர்களும் பல சமூகக் குழக்களும் உயிர் காப்பு மிதவை உடை அணிவதன் முக்கியத்துவம் போன்றன குறித்தான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.
- சிவில் சமூகங்களின் உதவியோடு கரையோரப் பாதுகாப்புப் படையினரால் கடற்கரைப் பிரதேச துப்பரவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் (பம்பலப்பிட்டி முதல் கல்கிஸ்ஸை வரை) முன்னெடுக்கப்பட்டன.
- தெஹிவளை முதல் கல்கிஸ்ஸை வரையிலான கடற்கரையோரப் பிரதேசங்களை துப்பரவாக்கும் பணியில் இலங்கை கரையோரக் கவல் படையினருடன் ஜப்பான் நாட்டு கரையோரக் காவல் படையினர் 50 பேரும் மிகவும் முனைப்புடன் பங்கேற்றனர்.
- 2014 ஜனவரி 29 இல் இலங்கை கரையோரக் காவல் படையினால் நெடுந்தீவு மகா வித்தியாலயத்திற்கான புதியதொரு கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.
- 2014 ஜுன் 27 ஆம் திகதி வட மாகாண கடற்படைப் பிரதேசத்தில் உயிர் காப்பு பற்றிய விரிவுரைகள் நடத்தப்பட்டன.



## 12.3 பகுப்பாய்வு/ மதிப்பாய்வு

2014 ஆம் ஆண்டுக் காலத்தின் போதான மொத்த ஒதுக்கம் மற்றும் செலவினம் பற்றிய விபரம் பின்வருமாறு,

**அட்டவணை 12.3 செலவினம்**

| | ஒதுக்கம் | செலவினம் | மீதி |
|---|---|---|---|
| **மூலதனம்** | 32 | 31.11 | 0.88 |
| **மீண்டெழ ல்** | 32.66 | 28.40 | 4.25 |

2014 இன் நிறைவில் மீண்டெழும் செலவினத்தில் விட்டுவிடப்பட்ட ரூபா. 4.2 மில்லியன் எஞ்சிய தொகைக்கு பின்வரும் விடயங்களே காரணமாகும்.

- இலங்கை கரையோரக் காவல் படையினரின் ஊதியங்கள் இலங்கை கடற்படையிலிருந்தே நேரடியாக பெறப்படுவதனால் சம்பளங்களும் ஊதியங்களும் இலங்கை கரையோரக் காவற் படையினரால் பயன்படுத்தப்படவில்லை.
- இவ்வாண்டின் நிறைவின் போது சில சீருடைப் பொருட்கள் வழங்குநரிடமிருந்து பெறப்படவில்லை.

### 12.3.1 பாரிய கருத்திட்டங்கள்

2014 ஆம் ஆண்டுக் காலத்தின் போது முன்னெடுக்கப்பட்ட பாரிய கருத்திட்டங்கள் பின்வருமாறு:

- ஒலுவில் துறைமுகத்தில் கப்பல் அதிகாரிகளுக்கான அறை நிர்மாணித்தல் - கருத்திட்டச் செலவு கிட்டத்தட்ட ரூபா. 3.2 மில்லியனாகும்.
- டிகோவிட்ட துறைமுகத்தில் நிர்வாகக் கட்டடம் நிர்மாணித்தல் - கருத்திட்டச் செலவு கிட்டத்தட்ட ரூபா. 1.9 மில்லியனாகும்.
- பின்வரும் இடங்களில் உயிர் காப்பு மையங்களை நிர்மாணித்தல்,

  ஹிக்கடுவை- கிட்டத்தட்ட ரூபா. 2 மில்.
  தெஹிவளை- கிட்டத்தட்ட ரூபா. 2 மில்.

- றொஹுானை இலங்கை கரையோரக் காவல் நிலையத்தில் 3 மாடியிலான அலுவலர் தங்குமிடக் கட்டடம் நிர்மாணித்தல்

கட்டட வடிவமைப்பு மற்றும் கட்டடக் கலை சார்ந்த வரைபுகள் பூர்த்தியடைந்ததோடு, மணல் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

### 12.3.2 மதிப்பாய்வும் கற்றுக்கொண்ட விடயங்களும்

றொஹுான இலங்கை கரையோரக் காவல் நிலையத்தில் சிரேட்ட அதிகாரிகளுக்கான 6 குடிசைகளை நிர்மாணித்தல்

- பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தோடு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கட்டதோடு, இக்கருத்திட்டத்திற்கான மொத்த வரவுசெலவுத் திட்டத்தை எதிர்கொள்வதற்கு கட்டடம் மற்றும் கட்டமைப்பு வாக்கு இல. 325-01-01-2104 இன் கீழான ஒதுக்கம் போதாமையினால் வாக்கு இல. 325-01-01-2103 (பொறித்தொகுதி மற்றும் கருவிகள்) இலிருந்து நிதி பரிமாறப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சினூடாக திறைசேரியின் தொடக்க கேரிக்கை பெறப்பட்டது.
- எனினும், இலங்கை கரையோரக் காவல் பிரிவுக்கோ அல்லது பாதுகாப்பு அமைச்சுக்கோ அறிவிக்காமல் வாக்கு இல. 325-01-01-2103 (பொறித்தொகுதி மற்றும் கருவிகள்) இன் மீதியானது மீளப் பெறப்பட்டிருந்த காரணத்தினால் நிதி பரிமாற்றத்திற்கான திறைசேரியிடமிருந்தான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.
- மேலும், கட்டடத்தின் அவசரத் தேவை காரணமாக, உடன்படிக்கையின் பிரகாரம் முற்பணக் கட்டணத்தை மாத்திரம் செலுத்திவிட்டு, திட்டமிட்டவாறு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## 12.4 பிரச்சினைகளும் சவால்களும்

2014 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ளும் பொழுது, ஒருசில முக்கிய பிரச்சினைகளை இலங்கை கரையோரக் காவல் பிரிவு எதிர்கொண்டது. குறிப்பாக,

அ. மனித வளப் பற்றாக்குறை
ஆ. இயக்கப்பாடு சார்ந்த அடிப்படை இயந்திரம் மற்றும் கருவிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்பட்டமை
இ. வரவுசெலவுத் திட்ட ஒதுக்கம் மட்டுப்படுத்தப்பட்டமை.

இப்பிரச்சினைகள், அவற்றின் தன்மை காரணமாக இலங்கை கரையோரக் காவல் பிரிவினுள் அனைத்து மட்டங்களிலும் (தொழிற்பாட்டு மற்றும் நிறுவனம் சார்ந்த மட்டங்கள்) எழுந்துள்ளன. இலங்கைக் கரையோரக் காவல் படையினரின் திறமைகள், தொழில்நுட்ப வழிவகைகள், மற்றும் நிபுணத்துவம் ஆகியன, வெளிநாட்டு கரையோரக் காவல் படையினரால் வழங்கப்பட்ட நிபுணத்துவமிக்க பயிற்சிநெறிகளின் துணையோடு சிறந்த மட்டத்திற்கு முன்னேற்றகரமாக உயர்த்தப்பட்டுள்ளன. ஆனால், இயக்கப்பாட்டு அடிப்படைகள், கருவிகள் மற்றும் நிதியுதவிகள் போதுமானளவு இன்மையினால் இதன் நடைமுறை சார்ந்த பயன்பாடானது குறைந்தளவிலேயே இடம்பெற்றுள்ளது.

பொறுப்புவாய்ந்த விடயங்கள், வகிபாகம் மற்றும் இலக்கு ஆகியன 2014 இன் போது கடுமையாக அதிகரிக்கப்பட்டுள்ள அதேவேளை, இலங்கை கரையோரக் காவல் பிரிவன் அதே மனித வளமே பேணப்பட்டுள்ளது. இதன் விளைவாக அனேக இயக்கப்பாடு சார்ந்த மற்றும் நிர்வாகம் சார்ந்த பிரச்சினைகளும் கடினத்தன்மைகளும் இலங்கை கரையோரக் காவல் பிரிவு, உப நிலையங்கள்,

நிலையங்கள் ஆகியவற்றிலும் மற்றும் பிராந்திய மட்டத்திலும் ஏற்பட்டது.

மேற்படி பிரச்சினைகள் தொடர்ந்தும் காணப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட இலக்குகளை அடைவதில் அவை யதார்த்தமற்ற இலக்குகளாகவும் சவால்களாகவும் மாறிவிடும். எனவே, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை குறைக்கும் வகையில் மேற்படி பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்குச் சாதகமான தீர்வுகளைக் கண்டறிவது அவசியமென கருதப்படுகிறது.

## 12.5 எதிர்கால வாய்ப்புக்கள்

பின்வருவன இலங்கை கரையோரக் காவல் பிரிவின் நிறுவனம் சார்ந்த திறமைகளை மேம்படுத்தும் வகையில் நடுத்தர காலத்தில் (2016 – 2018) மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளாகும்.

- திட்டமிடப்பட்டவாறான எதிர்கால நிலைப்பாட்டினை நிறைவேற்றும் வகையில் இலங்கை கரையோரக் காவல் பிரிவின் ஆளணியினை 1,500 வரை மேம்படுத்தல்.
- இலங்கை கடற்படையிடமிருந்து கரைக்கு அண்மையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய புதிய படகுகளை (06) பெற்றுக்கொள்ளல்.
- ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து 02 ரோந்துப் படகுகளைப் பெறுதல்.
- மிரிஸ்ஸவில் முழு அளவிலானதொரு கடல் சார் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையத்தைத் தாபித்தல்.
- நாடளாவிய ரீதியில் அனேக பிரபல்யமிக்க கடற்கரைப் பிரதேச்களில் இலங்கை கரையோரக் காவல் பிரிவின் உயிர் காப்பு மையங்களை புதிதாக நிறுவுவதோடு, தற்போதுள்ள உயிர் காப்பு மையங்களை மேம்படுத்தல்.
- எஞ்சிய மீன்பிடித் துறைமுகங்களில் சட்டவிரோத மீன்பிடிக் கண்காணிப்பு நிலையங்களை புதிதாகத் தாபித்தல்.
- கிரிந்தவில் கரையோரக் காவல் பற்றிய பயிற்சிநெறியைத் தாபித்தல்
- மிரிஸ்ஸ மற்றும் பலப்பிட்டிய ஆகிய பிரதேசங்களிலுள்ள இலங்கை கரையோரக் காவல் பிரிவின் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிப்பு வசதிகளை மேம்படுத்தல்
- இலங்கை கரையோரக் காவல் பிரிவன் எண்ணெய்க் கசிவு பதிலளிப்புக்கு குழவின் திறன் மற்றும் கொள்திறனை மேம்படுத்தல்.
- ஏனைய கரையோரக் காவல் பிரிவுடனான கூட்டுறவை மேம்படுத்தல்.

# 13
# குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

## 13.1 மேலோட்டப் பார்வை

நபர்களின் உள்வரவு மற்றும் வெளிச்செல்கை ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி பிரஜாவுரிமைச் சேவைகளை வழங்கும் அதேவேளை, நாட்டின் பாதுகாப்பு மற்றும் சமூகத்தின் கட்டளையினைப் பாதுகாப்பதோடு பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதே குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான வகிபாகம்

### தொழிற்பாடுகள்

- குடிவரவு மற்றும் குடியகல்வு தொடர்பிலான சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் அமுல்படுத்தல்.
- வெளிநாட்டுப் பயணங்களுக்காக இலங்கையர்களுக்கு கடவுச்சீட்டுக்களை விநியோகித்தல்.
- இலங்கையினுள் உள்ள துறைமுகங்களில் குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல்.
- வெளிநாட்டில் பிறக்கும் இலங்கையருடைய பிள்ளைகளை இலங்கைப் பிரஜையாக பதிவுசெய்தல்.
- ஏனைய நாடுகளில் பிரஜாவுரிமையைக் கொண்டுள்ள இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமையை வழங்கல்.
- குடிவரவு மற்றும் குடியகல்வு தொடர்பிலான சட்டங்களை மீறி இலங்கையில் வசிக்கின்ற இலங்கைப் பிரஜையல்லாத நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.
- நாட்டின் பாதுகாப்பினைப் பேணி குறித்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டவர்களுக்கு விசாக்களை வழங்குதல் மற்றும் அதனை நீடித்தல்.

## 13.2 2014 இல் பெற்ற அடைவுகள்

கடவுச் சீட்டினை வழங்கி அதனோடு சம்பந்தப்பட்டவற்றை நிறைவேற்றல், வீசாவினை வழங்கி அதனோடு சம்பந்தப்பட்டவற்றை நிறைவேற்றல், ஏனைய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள புலம்பெயர்வாளர்களை வெளியாக்குதல், எல்லையோர முகாமைத்துவம், ஏனைய நாடுகளில் பிறக்கின்ற இலங்கையருடைய பிள்ளைப் பிறப்பினை பதிவுசெய்தல், இரட்டைக் குடியுரிமை பெறுதல் தொடர்பிலனா விடயங்களை கையாளுதல் மற்றும் இந்திய வம்சாவழியினரைப் பதிவுசெய்தல் போன்றன இத்திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளாகும்.

இத்தொழிற்பாடுகள் பிரதானமாக கடவுச்சீட்டுப் பிரிவு, எல்லையோர முகாமைத்துவம் மற்றும் வீசா பிரிவு, கணினிப் பிரிவு, பிரஜாவுரிமைப் பிரிவு மற்றும் இந்திய வம்சாவழியினரைப் பதிவுசெய்வதற்கான பிரிவு ஆகியவற்றினால் நிறைவேற்றப்படுகின்றன.

2014 இல் இலங்கைக்கு வெளிநாட்டவர்கள் பயணம் மேற்கொள்வதற்கான வீசாக்களை வெளிநாட்டவர்கள் பெற்றுக்கொள்வதை வசதிப்படுத்தி அதனை ஒழுங்குபடுத்தும் வகையில், இலத்திரனியல் பயண அனுமதிச் (நுவுயு) செயற்பாட்டின் கீழ் வெளிநாட்டவர்களுக்கு சுற்றுலா நுவுயு, வணிக நுவுயு, இடைத்தங்கல் நுவுயு, கட்டணமின்றிய நுவுயு, போன்றன வெற்றிகரமாக வழங்கப்பட்டதோடு, நுவுயு யின் எண்ணிக்கையினையும் அதன் சுமுகமான முன்னெடுப்பினையும் அதிகரிக்கும் வகையில் புதிய பிரயோகங்களும் செயற்பாடுகளும் அமுல்படுத்தப்பட்டன. 2014 இல், 1 610, 530 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

1948 இன் 18 ஆம் இலக்க இரட்டைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தில் சம்பந்தப்பட்ட தரவுகளை பதிவுசெய்வதானது 2014 இல் பூர்த்தி செய்யப்பட்ட முக்கிய பணியாகும். இதற்கிணங்க, இரட்டைக் குடியுரிமைச் சான்றிதழ் பிரதிகளை வழங்குவதானது 2014 இல் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், பிரஜாவுரிமை பற்றிய தரவுத்தளத்தோடு, ஏனைய தரவுத் தளங்களையும் ஒருங்கிணைக்கும் பூர்வாங்க நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

அனைத்து சர்வதேச விமானநிலையங்களிலும் துறைமுகங்களிலும் எல்லையோர முகாமைத்துவம் குறித்தானதொரு முன்னேற்றம் 2014 இல் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. இலங்கையில் அகதிகளாக தஞ்சம் புகுந்த 329 பாகிஸ்தானியர்களும் 88 ஆப்கானிஸ்தானியர்களும் தத்தமது தாய் நாட்டிற்கு மீள அனுப்பப்பட்டனர்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திய மரபணுப் பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் தற்போதைய கடவுச்சீட்டின் தரம், அதிகாரம், மற்றும் அதன் பாதுகாப்பினை மேம்படுத்தல் ஆகியவறின் அடிப்படையில் கடவுச்சீட்டுக்களை விநியோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது.

**அட்டவணை : 13.1 திறன் அபிவிருத்திச் செயற்பாடுகள்**

| செயலமர்வு.். நிகழ்ச்சித்திட்டம்.். கருத்தரங்கு | இலக்குடைய குழு | பயிலுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தூண்டுமுறைப் பயிற்சி | வருடாந்த இடமாற்றத்தின் பேரில் வந்த அலுவலர்கள் | 45 |
| துப்பரவேற்பாட்டுச் சேவை பற்றிய பயிற்சி | துப்பரவேற்பாட்டுச் சேவைப் பணியாளர்கள் | 25 |
| பாதுகாப்பு நடவடிக்கை பற்றிய பயிற்சி | பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் | 20 |
| அலுவலக முறைமைகள் குறித்தான பிரச்சினைகள் | மாகாண மட்ட அலுவலகத்தின் அனைத்துப் பணியாளர்கள் | |
| சட்ட அறிக்கை தயாரித்தல் | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 25 |
| கணினிப் பயிற்சி | முகாமைத்துவ உதவியாளர்கள் | 110 |
| தூண்டுமுறைப் பயிற்சி – மகரகம | அபிவிருத்தி மற்றும் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 110 |
| தூண்டுமுறைப் பயிற்சி – பொலிஸ் பயிற்சி நிலையம் – களுத்துறை | அபிவிருத்தி மற்றும் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 110 |
| தூண்டுமுறைப் பயிற்சி, வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், ரத்மலானை | அபிவிருத்தி மற்றும் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 110 |
| தூண்டுமுறைப் பயிற்சி – ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, மஹரகம | அபிவிருத்தி மற்றும் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 350<br>15 |
| முடிவுத் தூண்டல், சமுதாய கலை மையம், பெலவத்தை | அபிவிருத்தி மற்றும் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 350 |
| கணினிப் பயிற்சி | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 15 |
| கடவுச்சீட்டு வழங்கல் செயன்முறை | பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் | 30 |
| கணினிப் பயிற்சி | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 12 |
| கணினிப் பயிற்சி | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 12 |
| தனிச்சிறப்புமிக்க வாடிக்கையாளர் சேவை குறித்தான செயலமர்வு<br>தம்மிக கலுபுகே | அனைத்து பணியாட்தொகுதியினர் | 230 |
| 1962 இன் அறிமுகமும் அதன் வகிபாகமும் | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 16 |
| அலுவலக முறைமை குறித்தான நடைமுறைப் பிரச்சினை | பிரதேச செயலகங்களின் அனைத்துப் பணியாளர்கள் | 60 |
| புலனாய்வு குறித்தான விசேட பயிற்சி, பொலிஸ் பயிற்சி நிலையம், களுத்துறை | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 20 |
| உளவுத்துறை குறித்தான விசேட பயிற்சி, பொலிஸ் பயிற்சி நிலையம், களுத்துறை | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 20 |
| கடற்படை அதிகாரிகளுக்கான பயிற்சி | கடற்படை அதிகாரிகள் | 30 |
| மொபைல் பயண ஆவண கண்காணிப்புக் கருவிகள் மீதான பயிற்சி | அரச உளவுத்துறை அதிகாரிகள் | 30 |
| இரட்டைக் குடியுரிமை மற்றும் வீசா செயலாக்கம் பற்றிய பயிற்சி | நிறைவேற்றுத்தர அதிகாரிகள் | 52 |
| தனிநபர் அபிவிருத்தி மீதான பயிற்சி | சிரேஷ்ட அதிகாரிகள் | 24 |
| தமிழ் மொழித்தேர்ச்சிப் பாடநெறி கட்டம் iiii கட்டம் ஐஐ ழு.்டு | பதவிநிலை அதிகாரிகள்.். முகாமைத்துவ உதவியாளர்கள் .். துணைச் சேவைகள் | 115 |

## 13.2 பொருட்கொள்வனவு நடவடிக்கைகள்

பொருட்கொள்வனவுப் பிரிவானது ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் பொருட்கொள்வனவுக்கான புதிய திட்டத்தைத் தயாரிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டது. இதனையடுத்து பொருட்கொள்வனவுத் திட்டத்திற்கமைவாக பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. 2014 இல் இடம்பெற்ற முன்னேற்றம் குறித்தான விபரங்கள் பின்வருமாறு,

| அட்டவணை 13.2: 2014 இல் பொருட்கொள்வனவு நடவடிக்கைகள் | |
|---|---|
| **பொருட்கள்** | பெறுமானம் (ரூபா) |
| **அலுவலக உபகரணங்கள்** | 338,897.00 |
| **வளி சீராக்கி** | 2830,358.71 |
| **அச்சுப் பொறி, தொலைநகல் இயந்திரம், போட்டோப் பிரதி இயந்திரம்** | 835,600.00 |
| **வாகனங்கள்** | - |
| **மொத்தம்** | 4320800.71 |

**அட்டவணை 13.3: தலைமைச் செயலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் கடவுச்சீட்டு விநியோகம் பற்றிய விபரம்**

| எண். | சேவைகள் | தலைமை அலுவலகம் | கண்டி | மாத்தறை | வவுனியா |
|---|---|---|---|---|---|
| 1 | அனைத்து நாடுகள் | 234943 | 26601 | 12733 | 14245 |
| 2 | மத்திய கிழக்கு நாடுகள் | 198815 | 9748 | 2437 | 4990 |
| 3 | உத்தியோகபூர்வ விஜயம் | 1043 | 1 | 1 | - |
| 4 | அடையாளப்படுத்தும் சான்றிதழ் | 6 | - | - | - |
| 5 | இராஜதந்திரி | 309 | - | - | - |
| 6 | அவசர சான்றிதழ் | 14786 | 5052 | 1235 | 485 |
| **மொத்தம்** | | 449902 | 41402 | 16406 | 19720 |

**அட்டவணை 13.4: கடவுச்சீட்டுக்களைப் புதுப்பித்தல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளல்**

| எண். | சேவைகள் | மொத்தம் |
|---|---|---|
| 1 | புதுப்பித்தல் மற்றும் திருத்தம் | 87,486 |

**அட்டவணை 13.5: துறைமுகங்கள் ஊடாக இலங்கைக்கு வருகை தந்த மற்றும் வெளிச்சென்ற பயணிகள் பற்றிய விபரம்**

| துறைமுகத்தின் பெயர் | உள்வருகை | வெளிச்செல்லுகை |
|---|---|---|
| பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் | 28,40,257 | 28,84,765 |
| அம்பாந்தோட்டை துறைமுகம் | 122 | 173 |
| மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் | 4,052 | 3,256 |
| கொழும்புத் துறைமுகம் | 6,710 | 7,196 |
| காலித் துறைமுகம் | 22,658 | 20,143 |
| மன்னார் துறைமுகம் | - | 1 |
| திருகோணமலை துறைமுகம் | 398 | 384 |
| ரத்மலானை விமானநிலையம் | 12 | 19 |
| **மொத்தம்** | **28,74,209** | **29,15,937** |

**அட்டவணை 13.6: புலன் விசாரணைகள்**

| மாதம் | முகாமில் தடுத்து வைக்கப்பட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை | வெளிநாட்டுக் அனுப்பப்பட்ட மற்றும் விடுதலை செய்யப்பட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 31 | 13 |
| பெப்ரவரி | 18 | 20 |
| மார்ச் | 13 | 15 |

| | | |
|---|---|---|
| ஏப்ரல் | 18 | 9 |
| மே | 5 | 5 |
| ஜூன் | 6 | 17 |
| ஜூலை | 4 | 13 |
| ஆகஸ்ட் | 11 | 1 |
| செப்டம்பர் | 1 | 5 |
| ஒக்டோபர் | 3 | 6 |
| நவம்பர் | 9 | 8 |
| டிசம்பர் | 12 | 12 |
| மொத்தம் | **131** | **124** |

அட்டவணை 13.7: வழங்கப்பட்ட விசாக்கள் மற்றும் காலம் நீடிக்கப்பட்ட விசாக்களின் எண்ணிக்கை

| வகை | கால நீடிப்பு | விநியோகிக்கப்பட்டவை |
|---|---|---|
| முதலீட்டுச்சபைக் கருத்திட்டங்கள் | 4,015 | 2,464 |
| இலங்கைப் பெற்றோர்களின் பிள்ளைகள் | 141 | 175 |
| ஊஜஉ-5(2) | 0 | 1 |
| மதகுருமார் | 852 | 270 |
| நீதிமன்ற விவகாரம் | 83 | 18 |
| இராஜதந்திரிகள் | 13 | 9 |
| முன்னாள் இலங்கையர்கள் | 2106 | 1516 |
| மருத்துவம் | 284 | 290 |
| அரச சார்பற்ற அமைப்பு.'.சமூகப் பணியாளர்கள் | 460 | 260 |
| அலுவலர்கள் | 243 | 282 |
| தனியார்த் துறைகள் | 2,337 | 2,701 |
| பதிவுசெய்யப்பட்ட இந்தியர்கள் | 35 | 4 |
| மதம் சார்ந்த பணியாளர்கள் | 317 | 431 |
| குடியுரிமை விருந்தினர் திட்டம் | 19 | 13 |
| இலங்கைப் பிரஜையின் வாழ்க்கைத்துணை | 3343 | 1084 |
| ளுளுசுஏ | 132 | 65 |
| அரச துறை | 3,760 | 3,916 |
| மாணவர்கள்.'.புலமைப்பரிசில் உடையோர் | 3,868 | 3,686 |

அட்டவணை 13.8: 2014.01.01 முதல் 2014.12.31 வரை வழங்கப்பட்ட குடியுரிமை – வகை வாரியாக

| குடியுரிமை வகை | பெறப்பட்ட விண்ணப்பங்கள் | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் | அச்சுப்பெற்ற சான்றிதழ்கள் |
|---|---|---|---|
| பிரிவு 5(2) | 10128 | 11883 | 12955 |
| பிரிவு 8 | 6 | 0 | 9 |
| பிரிவு 11 | 54 | 0 | 51 |
| பிரிவு 12 | 13 | 0 | 13 |
| குடியுரிமை விருந்தினர் திட்டம் | 1 | 0 | 0 |
| பிரிவு 19 | 366 | 11 | 552 |
| நிராகரிப்பு | 59 | 1 | 83 |
| மொத்தம் | **10627** | **11895** | **13663** |

அட்டவணை 13.9: புதுப்பித்தல் பற்றிய சுருக்கம்


| விபரம் | மொத்தம் |
|---|---|
| மற்றுமொரு பயணம் | 473 |
| இரத்துச்செய்யப்பட்ட ஒற்றைப் பயணம் | 1151 |
| இரட்டைக் குடியுரிமையிலான மாற்றங்கள் | 11 |
| பிள்ளைகள் நீக்கம் | 2219 |
| அடையாள இலக்கம் உள்ளடக்கல் | 2070 |
| பிள்கைள் உள்ளடங்கல் | 1496 |
| திருணம் செய்வதற்கு முன்னர் பெயர் | 16 |
| பெயர் மாற்றம் | 3119 |
| திருமணத்தின் பின்னர் பெயர் | 2033 |
| ஏனைய திருத்தங்கள் (இலவசம்) | 81 |
| ஏனைய திருத்தங்கள் 01 | 28669 |
| ஏனைய திருத்தங்கள்02 | 913 |
| ஏனைய திருத்தங்கள் 03 | 17 |
| ஏனைய பெயர் திருத்தங்கள் | 3 |
| தொழில் மாற்றம் | 66922 |
| புதுப்பித்தல் | 2368 |
| பிள்ளைகள் பற்றி இற்றைப்படுத்தல் | 135 |

அட்டவணை 13.10: துறைமுகக் கிடையிலான வருமானம் பற்றிய அறிக்கை 2014 ரூபா. மில்

| மாதம் | பொண்ட் ஸ்ரிக்கர் வருமானம் | ீவு கூரியர் வருமானம் |
|---|---|---|
| ஜனவரி | 4.138 | 1.734 |
| பெப்ரவரி | 3.678 | 1.774 |
| மார்ச் | 3.753 | 2.223 |
| ஏப்ரல் | 3.931 | 2.055 |
| மே | 4.016 | 2.435 |
| ஜூன் | 3.319 | 2.841 |
| ஜூலை | 3.624 | 2.617 |
| ஆகஸ்ட் | 4.132 | 2.437 |
| செப்டம்பர் | 3.826 | 2.098 |
| ஒக்டோபர் | 3.771 | 2.144 |
| நவம்பர் | 3.588 | 2.114 |
| டிசம்பர் | 4.418 | 1.769 |
| **உப மொத்தம்** | **46.194** | **26.241** |
| **மொத்த வருமானம்** | | **72.435** |

**அட்டவணை 13.11: 2009 – 2014 வரையிலான காலத்தில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் பற்றிய செயலாற்றுகை (ரூபா. மில்)**

| செலவினம் | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் | 448.252 | 476.523 | 538.244 | 598.655 | 700.913 | 812.653 |
| மூலதனம் | 280.373 | 166.646 | 363.843 | 85.230 | 650.721 | 640.799 |
| **மொத்தம்** | **728.626** | **643.169** | **902.088** | **683.885** | **1,351.635** | **1,453.453** |



# 14
# ஆட்பதிவுத் திணைக்களம் (னுசீ)

## 14.1 மேலோட்டப் பார்வை


ஆட்பதிவுத் திணைக்களமானது இலங்கையிலுள்ள சட்ட ரீதியான குடியுரிமையுடைய 18 இற்கும் மேற்பட்ட வயதுடையோரைப் பதிவுசெய்வதற்காக 1972 இல் தாபிக்கப்பட்டுள்ளது. அனைத்து இலங்கையர்களையும் பதிவுசெய்தல் மற்றும் ஒரு பதிவேட்டினைப் பேணுதல், தகைமையுடைய பிரஜைக்கு தேசிய அடையாள அட்டையை வழங்குதல், தகவல்களை சரிபார்த்து சான்றுப்படுத்தல், மற்றும் அவற்றை தேசிய உளவுத்துறை மற்றும் பாதுகாப்புத்துறையினருடன் பகிர்ந்துகொள்ளல் போன்றன இத்திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளாகவுள்ளன. ஆட்பதிவுத் திணைக்களமானது தனது சேவையினை சிறப்பாகவும் வினைத்திறன் மிக்க முறையிலும் வழங்குவதை மேம்படுத்தும் நோக்கில் 2014 ஆம் ஆண்டுக்காலத்தில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தது.

ஆட்களைப் பதிவுசெய்வதற்காக பாதுகாப்பான, மையப்படுத்தப்பட்ட இலத்திரனியல் சேமிப்பகம், ஆட்கள் தொடர்பிலான தேசிய பதிவேடு, மற்றும் இலத்திரனியல் முறையிலான தேசிய அடையாள அட்டையை வழங்கல் ஆகியவற்றைத் தாபிப்பக்கும் வகையிலான இலத்திரனியல் அடையாள அட்டைகளை (ந-ஜேஊ ிசழதநஉவ) அறிமுகப்படுத்தும் கருத்திட்டமானது 2011 இல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இது 2014 இல் கணிசமானளவு முன்னேற்றத்தைக் காண்பித்துள்ளது.

## 14.2 மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடைவுகளும் பகுப்பாய்வும்

திணைக்களத்தின் மொத்தச் செலவினமானது 2008 இல் காணப்பட்ட ரூபா.257 மில்லியனிலிருந்து 2014 இல் ரூபா. 518 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. 2014 இல் ந-ஜேஊ கருத்திட்டத்திற்கான மொத்தச் செலவினம் ரூபா. 557 மில்லியனாகும்.


**உரு 14.1 : 2008 முதல் 2014 வரை ஆட்பதிவுத் திணைக்களத்தின் மொத்தச் செலவினம்**




வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளின் எண்ணிக்கையானது 2005 இன் 564,872 இலிருந்து 2014 இன் 881,721 இற்கு அதிகரித்துள்ளதோடு, 2014 இல் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூபா. 102 மில்லியனாகும். இது விண்ணப்பங்களை வழங்குவதில் 2005 இன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட 64 சதவீத அதிகரிப்பாகும்.

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தின் உதவியுடன், திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில்

**உரு 14.2: பெறப்பட்ட விண்ணப்பங்களுடன் ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் சதவீதம்**




அடையாள அட்டையை அச்செடுக்கும் பணியை தொடங்குவதற்கு முடியுமாகவிருந்தது.

2014 இல், திணைக்களத்தின் ஊழியர்களின் திறனை மேம்படுத்தும் நோக்கில் 33 திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**ந-ஜேஊ கருத்திட்டம்:** பிரதேச செயலக மட்டத்தில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் அலகுகளைத்த தாபித்தல், சூரியவெவயில் அனர்த்த மீட்பு மையத்தைத் தாபித்தல், ஐஊயுழு (……..) மென்பொருளைப் பெறுதல் மற்றும் தரவு சேகரிப்புச் செயலாக்கத்தை ஆரம்பித்தல் ஆகியன 2014 ஆம் ஆண்டுக்காலத்தில் இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகளாகும்.

## 14.1 அட்டவணை: 2014 இல் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

| செயற்பாடு | பௌதீக முன்னேற்றம் | நிதி சார் முன்னேற்றம் மூ |
|---|---|---|
| **கிளை அலுவலகங்களைத் தாபித்தல்** | பிரதேச செயலக மட்டத்திலான 331 ஆட்பதிவுத் திணைக்கள அலகுகள் தாபிக்கப்பட்டன.<br> <br>*வெலிகாமம் தெற்கு பி.செ. மட்ட ஆ.ப.தி. அலகுகள், யாழ்ப்பாணம் மாரிட்டம்ப ற்று பி.செ., முல்லைத் தீவு* | 30.4 |
| **திணைக்கள வளாக புத்தாக்கம் மற்றும் புதிய இரண்டு மாடிக் கட்டட நிர்மாணம்** | ஆ.ப.திணைக்களக் கட்டடத்தின் புத்தாக்கப் பணிகள் பூர்த்தியடைந்ததோடு, புதிய இரண்டு மாடிக் கட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.<br>  | 95.9 |
| **அனர்த்த மீட்பு நிலைய நிர்மாணிப்பு** | வடிவமைப்பு மற்றும் கட்டட அடித்தளம் ஆகியன தொர்பில் மத்திய பொறியில் ஆலொசனைப் பணிப்பகத்திடம் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதோடு, ஆ.ப.திணைக்களத்தின் வடிவமைப்புப் பணி பூர்த்தியடைந்துள்ளது.<br><br>2014 டிசம்பர் 11 இல் அத்திவாரக் கல் இடப்படும் நிகழ்வு | 36.8 |
| **அட்பதிவுச் சட்டத் திருத்தம்** | குறித்த சட்டத்திற்கான வரைவுத் திருத்தமானது அமைச்சரவை உப குழு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரின் பரிந்துரைகளுடன் அமைச்சரவைக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, பாராளுமன்றத்தின் சம்மதத்தைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | - |
| **கைமுறை தரவு பெறுகை தொடர்பிலான ஐநுஊ தயாரிப்பு** | தரவு பெறுகை பற்றிய 15,500 கையேடுகள் அச்செடுக்கப்பட்டு அனைத்து கிராம சேவகர் பிரிவுகளுக்கும் விநியோகிக்கப்பட்டன.<br>மும்மொழிகளிலுமான 3 வகையான சுவரொட்டிகள் மற்றும் விழிப்பூட்டல் முறைகள் அச்செடுக்கப்பட்டு அவை அனைத்து கிராம சேவகர் பிரிவுகளுக்கும் விநியோகிக்கப்பட்டன.<br>கைரேகைகளை எடுப்பதற்கான | 84.2 |

| | | |
|---|---|---|
| | சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச செயலக மட்டத்திலுள்ள அனைத்து ஆ.ப.திணைக்கள அலகுகளுக்கும் விநியோகிக்கப்பட்டன.<br>தரவு பெறுகைப் பிரயோகம், கைரேகைத் தாள்கள், அறிவுறுத்தல் கையேடு, தொகுதிக் கட்டுப்பாட்டு அறிக்கைகள் ஆகியன அச்செடுக்கப்பட்டுள்ளதோடு, அவை பிரதேச செயலக மட்டத்திலுள்ள அனைத்து ஆ.ப.திணைக்கள அலகுகளுக்கும் விநியோகிக்கப்பட்டன. ஞுஈ ஸ்டிக்கர்கள் அச்செடுக்கப்பட்டுள்ளன. | |
| **கைமுறை தரவு பெறுகை குறித்து ஈடுபாட்டாளர்களுக்கு பயிற்சியளித்தல்** | தரவு பெறுகை தொடர்பில் அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி 331 பயிலுநர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.<br><br>பொலிஸ் திணைக்களத்தின் 70 ளுழுஊழு கள் மற்றும் கைரேகை பெறுதல் தொடர்பில் கிராம சேவகர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தின் 25 அதிகாரிகள் ஆகியோருக்கு திறன் அபிவிருத்தி செய்யப்பட்டது.<br><br>அனைத்து கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி, கைரேகை பெறுதல் மற்றும் தரவு பெறுதல் ஆகியன குறித்தான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.<br><br>கைமுஜற தரவு பெறுகை நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 771 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் திறன் அபிவிருத்தி செய்யப்பட்டது.<br>ஐஊயுழு நியம புகைப்படமெடுத்தல் குறித்து தென்மாகாணத்தில் 273 புகைப்படப் பிடிப்பாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். | |
| **தேசிய ஆட்கள் பதிவேட்டினை விருத்திசெய்தல் மற்றும் பிரஜைகள் பற்றிய தரவினை சேகரித்தல் மற்றும் இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகம் போன்றன தொடர்பில் அசாங்க அலுவல்களுக்கும் அரசியல் அதிகாரங்களுக்கும் இடையில் விழிப்புணர்வினை உருவாக்குதல்.** | 14 மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுகள் ஊடாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. | - |
| **தரவு சேகரிப்புச் செயன்முறையினை ஆரம்பித்தல்** | 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி தென் மாகாணத்தின் 27 பிரதேச செயலகங்களில் தரவு பெறுகை ஆரம்பிக்கப்பட்டது. | |
| **ஐஊயுழு மென்பொருளைப் பெறுதல்** | மொரட்டுவை பல்கலைக்கழகமானது ஐஊயுழு மென்பாகத்தை இலவசமாக வழங்கியது. தென்மாகாணத்திலுள்ள பயிற்றப்பட்ட 273 புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு ஐஊயுழு நியம புகைப்படமெடுத்தல் மென்பாகம் வழங்கப்பட்டது. | |

| | | |
|---|---|---|
| **தரவை எண்ம முறையாக்குவதற்கான வழங்குனரை தெரிவுசெய்தல்.** | தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர்களுக்கு கேள்விமனு வழங்கப்பட்டது. | |
| **தகல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை விருத்திசெய்வதற்காக வழங்குனர் ஒருவரைத் தெரிவுசெய்தல்** | 3 ஏலக்காரர்களின் நிதிசார் பிரேரணைகள் பெறப்பட்டதோடு, இது தொடர்பிலான மதிப்பாய்வு இடம்பெற்றுவருகின்றது. | |

## 14.3 பிரச்சினைகளும் சவால்களும்

பணியாளர்கள் பற்றாக்குறையானது கடமையினை வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதிமிக்க முறையிலும் மேற்கொள்வதிலுள்ள பிரதான பிரச்சினைகளாகும். தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 1363 ஆகுமென்பதோடு, உண்மையான ஆளணியினர் 114 ஆகும்.

தற்போதுள்ள சட்டத்தை திருத்துவதில் சட்டத் தடைகள் மற்றும் நேரம் எடுத்துக்கொள்ளும் நடைமுறைகள் காணப்படுகின்றன.

பணியாளர்களுக்கான வசதியளிப்பதற்கு இடப்பற்றாக்குறையும் காணப்படுகின்றது,

## 14.4 எதிர்கால வாய்ப்புக்கள்

பெறப்படுகின்ற 100 சதவீத விண்ணப்பங்களுக்கும் அடையாள அட்டையை விநியோகிக்கும் வகையில் விநியோகிக்கின்ற அடையாள அட்டையின் எண்ணிக்கையினை அதிகரித்தல்.

ஆட்பதிவுத் திணைக்களத்திற்கான புதிய கட்டடத்தின் நிர்மாணிப்பு பூர்த்தி.

# 15
# சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

## 15.1 மேலோட்டப் பார்வை

சிவில் பாதுகாப்புத் திணைக்களமானது நாட்டினை அபிவிருத்தி செய்வதற்கான பல்வேறு வழிவகைகளில் பங்களிப்புச் செய்கிறது. எதிர்பார்க்கப்படுகின்ற விளைவுகளை அடைவதற்கு திணைக்களத்தை வழிநடாத்துகின்ற 05 பயிற்சிப் பாடசாலைகள், மற்றும் 22 கட்டளையிடல் துறைகள் காணப்படுகின்றன. விவசாயக் கருத்திட்டங்கள், விலங்குகள் கருத்திட்டங்கள், செங்கல் கருத்திட்டங்கள், கைவினைக் கருத்திட்டங்கள், நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் புத்தாக்க கருத்திட்டங்கள் ஆகியன இத்திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களுள் சிலவாகும்.

## 15.2 2014 இல் பெற்ற அடைவுகள்

- பிரதான செயற்பாடுகளும் அவற்றின் முன்னேற்றமும்

**அட்டவணை 15.1 : முன்னெடுக்கப்பட்ட கருத்திட்டங்களும் அவற்றின் வருமானங்களும்**

| கருத்திட்டம் | வருமானம் (ரூ.மில்) |
|---|---|
| விவசாயம் | 259.72 |
| விலங்கு | 17.82 |
| செங்கல் கருத்திட்டம் | 45.38 |
| ஏனைய கருத்திட்டங்கள் | 48.60 |

**வுயடிடந 15.2: ஏனைய செய்பாடுகள்**

| செயற்பாடுகள் | முன்னேற்றம் ரூபா.மில் |
|---|---|
| சுவ வசிய நிதியம் - சுவ வசிய நிதியத்தின் கீளுள்ள உறுப்பினர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் (இறப்புகள், வைத்தியசாலை அனுமதிப்புகள், சுகவீனங்கள் போன்றன) | 97.15 |
| நட்டஈட்டுப் பிரிவு - இறந்த மற்றும் அங்கவீனமுற்ற சிவில் பாதுகாப்பு வீரர்களுக்கான நட்டஈடுகளாகும். | 0.70 |
| யஹசதக பிரிவு - யஹசதக நிதியத்தின் கீழுள்ள உறுப்பினர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் (இறப்புகள், பணி ஓய்வுகள், சுகவீனம் போன்றன) | 152.56 |
| சேமலாப நிதியப் பிரிவு சேமலாப நிதியப் பிரிவின் கீழுள்ள உறுப்பினர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் (இறப்புகள், நட்டஈடுகள் போன்றவற்றுக்கானவை) | 59.33 |
| ஜனசக்தி காப்புறுதிப் பிரிவு – இறந்த உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள். | 3.81 |
| செனவிதாயக்க நிதியம் - அலுவலக எழுதுகருவிகள் மற்றும் கட்டளையிடல் பிரிவுகள் மற்றும் பயிற்சி முகாம்களின் ஏனைய செலவுகளுக்கான கொடுப்பனவுகள் | 4.17 |

- **சேவா வனிதா பிரிவு**
- சிவில் பாதுகாப்பு வீரர்களுக்கான 271 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.
- சிவில் பாதுகாப்பு வீரர்களின் பாடசாலை செல்கின்ற பிள்ளைகளுக்கு 30,940 ரூபா பெறுதியான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.
- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா.த) பரீட்சை ஆகியவற்றில் மிகச்சிறப்பாக பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன (ரூபா. 885,000.00)
- க.பொ.த (உ.த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற 14 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் கொடுக்கப்பட்டன.
- **அடையப்படாத இலக்குகள்**

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கான ஓய்வூதியத் திட்டத்தை 2013 இல் தொடக்கிவைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதொரு இலக்கா இருந்த போதிலும், அதனை நிறைவேற்ற முடியாமலும் போனது. தற்போது அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, குறித்த ஓய்வூதியத் திட்டமானது மிக விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

- **திறன் அபிவிருத்தி**
- பகலாலந்த.ஃ கற்பிட்டி.ஃ கல்கிரியகம பாடசாலைகளில் 3,321 சிவில் பாதுகாப்பு

வீரர்களுக்கான 20 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

-  42 சிவில் பாதுகாப்பு வீரர்களுக்கு சமையல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

-  78 அதிகாரிகளுக்கு பயிற்றுவிப்பாளர் பயிற்சிகள் குறித்தான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.













## 15.3 2014 இல் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய பகுப்பாய்வு∴ மதிப்பாய்வு

**அட்டவணை 15.3: 2008 முதல் 2014 வரையான நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரம்**

| ஆண்டு | மீண்டெழும் (ரூ.மில்) | | மூலதனம் (ரூ.மில்) | |
|---|---|---|---|---|
| | ஏற்பாடு | செலவினம் | ஏற்பாடு | செலவினம் |
| 2008 | 7,066 | 6,991 | 466 | 320 |
| 2009 | 8,558 | 8,341 | 336 | 335 |
| 2010 | 8,456 | 8,454 | 254 | 253 |
| 2011 | 8,871 | 8,813 | 110 | 110 |
| 2012 | 9,258 | 9,245 | 59 | 53 |
| 2013 | 10,757 | 10,683 | 67 | 67 |
| 2014 | 12,030 | 12,029 | 120 | 120 |




## 15.4 பிரச்சினைகளும் சவால்களும்

-  இத்திணைக்களத்தின் கீழ் 22 கட்டளையிடல் பிரிவுகளும் 05 பயிற்சிப் பாடசாலைகளும் காணப்படுகின்றன. கோப்பு முறைமைகளை பேணுவதற்காக 12 முகாமைத்துவ உதவியாளர்கள் மாத்திரமே பயிற்றப்பட்ட பணியாட்தொகுதியினராக பணியாற்றுகின்றனர். அனேகமான இடங்களில், பயிற்றப்பட்ட பணியாளர்கள் இன்மையினால் பயிற்றப்படாத சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாலேயே கோப்புகள் பேணப்பட்டுவருகின்றன. எனவே, தாபனக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கமைய அலுவலக முறைமையினை சரியாக பேணுவது மிகவும் கடினமான விடயமாகவுள்ளது. அலுவலக பணிக்காக இணைக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கு அலுவலக முறைமை மற்றும் கோப்பு கையாளுகை ஆகியன மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை

ஏற்பாடுசெய்வதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

- சிவில் பாதுகாப்புப் படையினரை ஒரு ஊழியர் படையாகவும் கருதுவதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் இவர்கள் இணைக்கப்படவுள்ளதோடு அதற்கிணங்க அவர்களுக்கு பயிற்சியும் வழங்கப்படவுள்ளது..

## 15.5 எதிர்கால வாய்ப்புக்கள்

**கருத்திட்டங்கள்**

2007 இல் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தை தாபித்த பின்னர், இது விவசாயம், விலங்கு சார்ந்தவை உள்ளிட்ட பல்வேறு கருத்திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்து வருகின்றது. நடுத்தர கால திட்டம் தொடர்பானதொரு பிரதான நடவடிக்கையாக இக்கருத்திட்டங்களை விரிவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக, பொருத்தமான காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன. இதனையடுத்து இக்கருத்திட்டத்தை வழிநடாத்துகின்ற அதிகாரிகளுக்கு கருத்திட்டம் பற்றிய திட்டமிடுகை, கருத்திட்ட அமுலாக்கம், கருத்திட்ட அறிக்கை தயாரிப்பு போன்றன குறித்து ளஉடுஜனுயு வின் ஒத்துழைப்போடு பயிற்சியளிக்கப்படுவர். மேலும் இதன் விளைவினை அதிகரிக்கும் வகையிலான புதிய முறைமையில்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆகியனவும் அறிமுகம் செய்யப்படும்.

- **திறன் அபிவிருத்தி**

  சிவில் பாதுகாப்பு பணியாளர்களுக்கு அவர்கள் இணைக்கப்பட்டுள்ள விடயப் பகுதி மீதான பயிற்சியளிப்பு.

- **நிதி சார்ந்தது**

  திணைக்களத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வகையில் மேலும் நிதிகள் பெறப்படும்.

  சிவில் பாதுகாப்பு பணியாளர்களுக்கு புதிய சம்பளக் கொடுப்பனவு முறையினை அறிமுகம் செய்தல்.

- **நிர்வாகம்**

  தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்பல் மற்றும் வெற்றிடங்களை அதிகரிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெறுதல்

## 16.1 மேலோட்டப் பார்வை

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிலையமானது நாட்டிலுள்ள ஆயுதப்படைகளுக்கு தொழில்நுட்பவியல் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான பணிகளை பிரதான இலக்காக் கொண்டு பாதுகாப்பு அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் 2006 ஜூலை 30 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. அன்றிலிருந்து இந்நிலையமானது, தேசிய பாதுகாப்புத் தேவைப்பாடுகள் தொடர்பிலான எதிர்கால பிரயத்தனங்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய கருத்திட்டங்கள் மற்றும் குறித்த துறைகளிலிருந்து எழக்கூடிய பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிக்கும் நோக்கிலான பல்வேறு துறைகளிலான அனேக கருத்திட்டங்களை பொறுப்பெடுத்து நிறைவேற்றியுள்ளது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருததிக்கான நிலையமானது புத்திஜீவிகள், தொழில்வாண்மையாளர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவகங்களின் உதவிகள் போன்றவற்றின் ஒத்துழைப்போடு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தலைமை அலுவலக கட்டட பணிகள் பூர்த்தியடைவதோடு, இது ஹோமாகாம, பிட்டிபென்னா, மஹனவத்தையில் தாபிக்கப்பட்டுள்ளது. இதற்கருகில் இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகமும் அமைந்துள்ளது. மேலும் இது தொடர்பான மேலதிக நிர்மாணப்பணிகளும் இடம்பெற்று வருகிறது.

## 16.2 2014 இல் பெற்ற அடைவுகள்

குறிப்பிடத்தக்களவிலான கருத்திட்ட அபிவிருத்திப் பணிகள் பின்வரும் சம்பந்தப்பட்ட நிபுணத்துவக் குழுக்களினால் கடந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன.

### தகவல் தொழில்நுட்பப் பிரிவு

**ஹை ரெக் சோல்ஜர்:** இக்கருத்திட்டத்தின் நோக்கம் யாதெனில், ஆயுதப்படையினர் மற்றும் பொலிஸாரால் பயன்படுத்தப்படுகின்ற துல்லியமன நடவடிக்கைத் திட்டமிடல் மற்றும் தீர்மானமெடுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் வகையிலான இணைய தீர்வொன்றை அறிமுகப்படுத்துவதாகும். இது படையினர் நேரடிக் கண்காணிப்பினை மேற்கொள்ள வழிவகுத்துள்ளது.

**நிகழ்வு அறிக்கையிடல் முறைமை** : இது பாதுகாப்பான நிகழ்வு அறிக்கையிடல் முறைமையினை மேம்படுத்துவதற்கானதொரு மொபைல் பிரயோக விருத்தியாக்கமாகும். இது எவ்வேளையிலும் எவ்விடத்திலும் அறிக்கையிடலுக்காக வழங்கப்பட்டுள்ள முறைமையினைப் பயன்படுத்தி தரவு பதிவுசெய்கையின் வேகத்தையும் அதன் துல்லியத்தன்மையையும் அதிகரிப்பதோடு, பயனர் கூகிள் வரைபடத்தில் குறிப்பிட்ட தகவல்களைப் பார்வையிடவோ அதில் பதிவுசெய்யவோ முடிகிறது. இது இராணுவ னுஆஐ மற்றும் ளுவுகு ஆகியோருக்கான பிரயோகக் கட்டத்திலுள்ளது.

**புகையிரத கண்காணிப்பு முறைமை** : இக்கருத்திட்டத்தை விருத்தி செய்தமைக்கான காரணம் யாதெனில், புகையிரதங்களுக்கும் கட்டுப்பாட் நிலையத்திற்கும் இடையிலான உண்மை நேர கண்காணிப்புத் தகவலை வழங்குவதன் மூலம் புகையிரதச் சேவையின் தரத்தை மேம்படுத்துவதாகும். இதேவேளை, குறித்த அதே நேரம் முனை நிலையங்கள் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்புறச்செய்யப்படுவதோடு, பொதுமக்கள் உண்மை நேரத்தில் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### வானூர்திப் பிரிவு

**குறுகிய தூர ஆளில்லா விமானம் (ளுசுருயுஏ)**

தன்னியல்பாக பறக்கும் திறனுடைய கையால் இயக்கப்படத்தக்க இலத்திரனியல் ஆளில்லா விமானம் கள மட்டத்தில் ஈடுபடுத்தும் நோக்கத்தோடு விருத்திசெய்யப்பட்டது. இச்சிறிய ஆளில்லா விமானமானது ஆகாயத்தில் பறக்கத்தக்க மிகவும் உறுதியான சட்டகத்தைக் கொண்டுள்ளதோ, கிட்டத்தட்ட 60 நிமிடங்கள் வரை இயங்கும் அதேவேளை, அண்ணளவாக 1 கிலோ கிராம் எடையினைச் சுமக்கும் திறனையும் கொண்டுள்ளது. இரண்டு நபர்களைக் கொண்டதொரு குழவினால் இயக்கப்படும் வகையில் வடிவமைக்கப்பட்ட இது எளிதில் எடுத்துச்செல்லத்தக்கதும் 15 நிமிடங்களினுள் விடுவிக்கப்படக்கூடியதுமாகும். இந்த இலத்திரனியல் ஆளில்லா விமானத்தின் பிரதான பண்புகள் கீழே வழங்கப்படுகிறது. இக்கருத்திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான முன்னெடுப்புகள் இடம்பெற்றுவருகின்றன.

### கடல் சார்ந்த பிரிவு

**சிறியரக கையால் சுடத்தக்க சிமியுலேட்டர்**

இது பணத்தைச் சேமிக்கும் வகையில் உண்மைச் சுடுதல்கள் இன்றி, சுடதல் குறித்தான பயிற்சியெடுப்பதற்கு உதவக்கூடிய ஒற்றை, மூன்று மற்றும் ஐந்து ஆயதங்களைக் கொண்டு சிறிய சுடதலுக்கான சிமியுலேட்டர் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கானதொரு கருத்திட்டமாகும். இது ஆயுதச் சேவைக்கான தயாரிப்பு நிலையிலுள்ளது.

முன்னைய ஆண்டிலும் மற்றும் 2014 இலும் இருந்து தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற தற்போதைய கருத்திட்டங்கள்:

1

 தகவல் தொழில்நுட்ப பிரிவு

**கள பீரங்கி சிமியுலேட்டர் முறைமை (குயுளுளு)**

பீரங்கி வேட்டுக்கான சிமியுலேட்டரானது முன்னோக்கிய கண்காணிப்பு அதிகாரிகளின் தற்போதுள்ள பயிற்சி மொடியுளின் தரத்தை மேம்படுத்துவதையும் பயிற்சிக்கான செலவைக் குறைப்பதையுமே பிரதான இலக்காகக் கொண்டதாகும். இக்கருத்திட்டமானது பீரங்கி வெடிபொருள் செலவினம் மீதான மட்டுப்பாடுகள், பயிற்சிக்கான பிரதேசங்களைப் பயன்படுத்துவதிலுள்ள மட்டுப்பாடு, மற்றும் பீரங்கி வேட்டுக்கள் பற்றிய பயிற்சியில் நேரடி நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான வாய்ப்பினைத் தடுக்கின்ற சமூக, பொருளாதார காரணிகளிலான மட்டுப்பாடு போன்ற குறித்தான பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குகிறது. இக் கருத்திட்டமானது பின்னூட்டல் செயன்முறையிலுள்ளது.

 **கடல் சார் பிரிவு**

**நீருக்கடியில் ஒலி உணர் சாதனம்**

இக்கருத்திட்டமானது நீர்மூழ்கிக் கப்பல்கள் அல்லது நீரின் கீழான கப்பல்களின் அசைவினை கண்காணித்தல் மற்றும் அவற்றைக் கண்டுபிடித்தல் ஆகியவற்றுக்காக நீருக்கடியில் ஒலி உணரும் முறைமையொன்றை விருத்திசெய்வதையே பிரதானமாக மையப்படுத்தியதாகும்.

## 16.3 னுழுக கொண்ட சிமியுலேடட் தளத்தின் வடிவமைப்பும் உருவாக்கமும்

3னுழுக தளமானது வழங்கப்படும் கட்டுப்பாட்டு சமிக்ஞைக்கு இணங்க, காட்டிசியன் முறைமையின் ஓஇ லு மற்றும் னு ஆகிய அச்சுக்களில் சுயமாக நகரக்கூடிய திறமையைக் கொண்டுள்ளது. இத்தளமானது படகுகள் மற்றும் கப்பல்கள் போன்ற பல்வேறு தளங்களின் நகர்வினை பின்பற்றுவதற்குப் பயன்படுத்தக்கூடியதென்பதோடு, வானூர்தி மற்றும் நில வாகனங்கள் போன்ற வேறுபட்ட தளங்களையும் வழங்கக்கூடியதாகும்.

**வானூர்திப் பிரிவு**

**நடுத்தர ஆளில்லா விமானம் (ஆசுருயுஏ).**

இலங்கை விமானப்படையின் விமானப் பொறியில் பிரிவானது கட்டுநாயக்கா இலங்கை விமானப்படைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அதன் பொறியில் வசதியாக்க அமைவிடத்தில் 2009 மார்ச் 29 ஆம் திகதி இந்த நடுத்தர ஆளில்லா விமானத்தை விருத்தி செய்யும் பணியை ஆரம்பித்தது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2009 இல் ஆரம்பிக்கப்பட்டு அனேக முக்கிய மைல்கற்களையும் கடந்துள்ளது. இது தொடர்பில் மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் விமானத் தொழில்நுட்பத்திலுள்ள உள்நாட்டு ஆற்றல்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்படுகிறது.

**இலங்கை விமானப்படை விமானத்திற்கான துப்பாக்கி வடு சட்டகத்தின் உருவாக்கம்**

துப்பாக்கி வடுச் சட்டகங்கள் இலங்கை விமானப்படை விமானங்களுக்கென்றே, குறிப்பாக பெல் ஹெலிகப்டர், லு-12இ ஊ-130இ பீச் கிராப்ட் போன்றவற்றில் உபயோகிக்கப்படுகின்றன. இக்கருத்திட்டமானது பிரதானமாக இரண்டு விதமான கட்டங்களைக் கொண்டுள்ளது.

**கட்டம் ஐ.**


துப்பாக்கி வடுச் சட்டகங்களை உருவாக்குவதற்கான முறையியலை அபிவிருத்தி செய்தல்.

**கட்டம் ஐஐ**


உருவாக்கப்பட்ட சட்டகங்கள் தொடர்பான சுமை பற்றிய பகுப்பாய்வை மேற்கொள்வதற்கான முறைமையினை அபிவிருத்தி செய்தல்.

## 16.3 2014 இல் முன்னெடுக்கப்பட்ட பகுப்பாய்வு/ மதிப்பாய்வு நடவடிக்கைகள்

**அட்டவணை 16.1: 2008 – 2014 இற்கான மீண்டெழும் செலவினம் பற்றிய இணக்கக்கூற்று**




**அட்டவணை 16.2: 2008 – 2014 இற்கான மூலதனச் செலவினம் பற்றிய இணக்கக்கூற்று**



## அட்டவணை 16.1 மூலதனக் கருத்திட்டங்கள் தொடர்பிலான பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றங்கள்

கருத்திட்டத்தின் பெயர்: ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டம்

தலைப்பு : 103 – பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

வாக்கு : 103-01-05-2502 | 15 மில்

கடன் இல.∴ அன்பளிப்பு : இலங்கை அரசாங்கம்

| இல | கருத்திட்ட நடவடிக்கைகள் | கருத்திட்டக் காலம் | மொத்த மதிப்பீட்டுச் செலவு (ரூ.மில்) | 2013.12.31 இல் மொத்தச் செலவினம் (ரூ. மில்) | 2013.12.31 இல் மொத்தச் பௌதீக முன்னேற்றம் (மு) | 2014 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு (ரூ.மில்) | 2014 இல் தேவையான ஒதுக்கீடு (ரூ.மில்) | பௌதீக இலக்கு (PT-மு) மற்றும் நிதிசார் இலக்கு (FT-ரூ.மில்) 2014 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | ஞ1 | ஞ2 | ஞ3 | ஞ4 | மொத்தம் |
| 1 | நீருக்கடியிலான கண்காணிப்பு முறைமை | 18 மாதங்கள் | 5.5 | 0.70 | 15% | 1.70 | 1.70 | PT | 15% | 15% | 15% | 15% | 60% |
| | | | | | | | | FT | 0.70 | | 1.00 | | 1.70 |
| 2 | சிமியுலேட்டருக்கான நகர்வுத் தளம் | 12 மாதங்கள் | 3.60 | - | 33% | 3.60 | 3.60 | PT | 25% | 25% | 25% | 25% | 100% |
| | | | | | | | | FT | - | - | 1 | 2 | 3 |
| | | | | | | | | FT | | | 1.00 | 2.60 | 3.60 |
| 3 | சிறைச்சாலை நெருக்க கருத்திட்டம் | 18 மாதங்கள் | 9.80 | 8.60 | 98% | 1.20 | 1.20 | PT | | | 2% | | 2% |
| | | | | | | | | FT | | | 1.20 | | 1.20 |
| 4 | பாரிய கருத்திட்டம் (ரேடியோ அமைப்பு) | 15 மாதங்கள் | 2.40 | 1.00 | 50% | 1.40 | 1.40 | PT | | | 25% | 25% | 50% |
| | | | | | | | | FT | | | 0.70 | 0.70 | 1.40 |
| 5 | சிறிய ரக ஆயத சிமியுலேட்டர் | 3 மாதங்கள் | 1 | 0.80 | 65% | 0.20 | 0.20 | PT | 25% | 10% | | | 35% |
| | | | | | | | | FT | 0.10 | 0.10 | | | 0.20 |
| 6 | ஆளில்லா விமானக் கருத்திட்டம் | | 15.57 | 15.50 | 98% | 0.04 | 0.04 | PT | | | 2% | | 2% |
| | | | | | | | | FT | 0.02 | | 0.02 | | 0.04 |
| 7 | கே 8 விமான சிமியுலேட்டர் முறைமை | 6 மாதங்கள் | 3.30 | 1.40 | 80% | 1.90 | 1.90 | PT | | | 10% | 10% | 20% |
| | | | | | | | | FT | | | 0.95 | 0.95 | 1.90 |
| 8 | இ.வி.படையின் விமானக் கருத்திட்டத்திற்கான துப்பாக்கி வடுச் சட்டக உருவாக்கம் | 18 மாதங்கள் | 9.00 | 1.80 | 10% | 0.74 | 0.74 | PT | | | 25% | 25% | 50% |
| | | | | | | | | FT | | | 0.37 | 0.37 | 0.74 |
| 9 | கள பீராங்கி சிமியுலேட்டர் முறைமை | 15 மாதங்கள் | 26.00 | 2.40 | 47% | 4.00 | 4.00 | PT | | | | 30% | 30% |
| | | | | | | | | FT | 2.60 | 0.40 | | 1.00 | 4.00 |
| 10 | புகையிரத தடய கண்காணிப்பு முறைமை | 06 மாதங்கள் | 7.90 | 0.04 | 40% | | | PT | | | | 20% | 20% |
| | | | | | | | | FT | | | | | |
| 11 | நிகழ்வு கண்காணிப்பு முறைமை | 03 மாதங்கள் | 0.24 | 0.02 | 20% | 0.22 | 0.22 | PT | | | 40% | 40% | 80% |
| | | | | | | | | FT | | | 0.22 | | 0.22 |

## 16.4 பிரச்சினைகளும் சவால்களும்

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பங்களிலான துரித வளர்ச்சியானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளின் தரத்தில் வெகுவாகன தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கற்றல், தொழில்நுட்ப உலகை அவதானித்தல், புதுமைகளை அனுபவித்தல், மற்றும் ஏனையவற்றுடன் இடைத்தொடர்பாடல் மேற்கொள்ளல் போன்றன பற்றிய புதிய வழிமுறைகளுடன் ஈடுகொடுத்துச் செல்வது தலையாய கடமையாகும். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிலையத்தின் ஆய்வுப்பணிகள் அனேக பாதுகாப்புத் தொடர்பான மற்றும் ஏனைய விஞ்ஞான அபிவிருத்தி பற்றிய பரந்த விடயங்களை உள்ளடக்குகின்றது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் கடந்தகால ஈடுபாடுகள் கீழே எடுத்துக்காட்டக்கூடிய கடினமான சில பிரச்சினைகள் மற்றும் சவால்களை நியாயப்படுத்தியது.

- மக்களின் அனுபவமிக்க அறிவு மற்றும் திறன்கள் குறைந்தபட்ச உட்பாய்ச்சலையே கொண்டுள்ளமை.
- உட்கட்டமைப்பு மற்றும் வசதியேற்பாட்டு அபிவிருத்தி மற்றும் சிறந்த தொழில்நுட்ப ஆராயச்சி ஆய்வுகூட வசதிகள் ஆகியவற்றுக்குப் போதிய நிதியின்மை.

## 16.5 எதிர்கால வாய்ப்புக்கள்

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிலையமானது நாட்டின் தேசிய பாதுகாப்பு சார்ந்த நலன்களை நிறைவேற்றும் வகையில் ஆரம்பிக்கப்பட்டதொரு தனியான துணிகரமிக்க முயற்சியாகுமென்பதோடு, நாட்டினுள்ளும் நாட்டிற்கு வெளியேயும் தீயசக்திகளுக்கெதிராக தொழில்நுட்ப அம்சங்களைப் பெற்று, எதிர்பார்க்கப்படும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையிலான உபாய ரீதியான சிந்தனையிலான அவசியமானதொரு மாற்றமாகும். குறைந்த செலவில் பணி ரீதியான கடினமிக்க பாதுகாப்பு பிரயோகங்களுக்கு ஆதரவளிக்கும் வகையிலான பொருத்தமான தொழில்நுட்பத்தை வழங்குவதே இந்த அர்ப்பணிப்பு மிக்க நிறுவனத்திற்கான சவாலாகும். இதன் நீண்டகாலப் பணியின் மூலம் நாட்டின் அபிவிருத்தி முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிக்கின்ற உறுதியான பொருளாதார அடிப்படையின் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு அங்கமாக நாட்டின் பாதுகாப்புத் துறையை உறுதிப்படுத்துவதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதோடு, இதனால் ஸ்திரமிக்க நிலைமையொன்றினூடாக நல்லாட்சிக்கான வசதியும் வழங்கப்படல் வேண்டும். மேலும், தற்போது இடம்பெற்று வருகின்ற கருத்திட்டங்களின் வெற்றியுடன் இந்நிலையமானது நாட்டின் பாதுகாப்புத் துறையிலான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையில் புதிய திருப்பத்தை வழங்கக்கூடியதாகவிருக்கும் என இங்கு சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்க தொரு விடயமாகும்.

## 17
## அரச உளவுத்துறைச் சேவை (ஞஜஞ)

### 17.1 மேலோட்டப் பார்வை

நாட்டின் பாதுகாப்பு, அரசியல், பொருளாதரம் மற்றும் சமூகம் சார்ந்த ஸ்த்திரத்தன்மை மீதான உள்ளக மற்றும் வெளியக அச்சுறுத்தல்களைக் கண்காணித்து, எதிர்கொண்டு மற்றும் அவற்றை முன்கூட்டியே தவிர்க்கும் நோக்கில் உளவுத்தகவலைப் பெற்று, பகுப்பாய்வு செய்து அவை தொடர்பில் பரப்புவதற்கான முன்னோடி நிறுவனமாகச் செயற்படுவதே அரச உளவுத்துறைச் சேவையின் பணிநோக்காகும்.

### 17.2 2014 இல் பெற்ற அடைவுகள்

**உட்கட்டமைப்பு வசதிகள்** - உயர் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்திசெய்து, நிர்மாணித்து, பராமரிப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**தகைமைவாய்ந்த நிபுணத்துவம்** - இச்சேவையில் உயர் பதவியைக் கொண்ட மிகவும் தகைமை வாய்ந்த உளவுத்துறை சார்ந்த நிணத்துவர்களை அரச உளவுத்துறைச் சேவையினால் விருத்தி செய்ய முடிந்துள்ளது. இது உளவுத்துறை, புலனாய்வுத்துறை, தகவல் தொழில்நுட்பம், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தல் பகுப்பாய்வு போன்ற ஒவ்வொரு துறைகளிலும் சம்பந்தப்பட்ட நிபுணத்துவக் குழக்களை கொண்டுள்ளது. இவர்களில் அனேகமானவர்கள் உலகில் பிரபல்யமிக்க உளவுத்துறை அமைப்பினால் பயிற்சி பெற்றவர்களாவர்.

**தகவல் தொழில்நுட்ப அறிவு** – அரச உளவுத்துறைச் சேவையானது உளவுத்துறை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகளை விருத்திசெய்வதற்கான பணிகளில் தனது திறமைகளைப் பயன்படுத்தி அதில் வல்லமை பெற்ற மிகவும் தகைமைவாய்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டுள்ளது. இப்பிரிவானது இணையம் மற்றும் உள்ளக இணைய வலையமைப்புச் சேவைகளை சிறப்பாக விருத்திசெய்து பெற்றுள்ளது.

**வெளிநாட்டு உளவுத்துறை முகவர்களுடனான தொடர்புகள்** - அரச உளவுத்துறைச் சேவைப் பிரிவானது அனைத்துப் பிரதான வெளிநாட்டு உளவுத்துறை முகவர்களுடனும் காலத்திற்கேற்ற தொடர்பினை கொண்டுள்ளது. இத்தொடர்புகள் மூலம் நாடு அவசியமான காலப்பொழுதில் பாரிய அனுகூலங்களை அடைந்துள்ளது.


**திறமையானதும் ஒழுக்கநெறியுடையதுமான பணியாட்தொகுதியினர்** - அரச உளவுத்துறைச் சேவைப் பிரிவானது ஒரு சிறந்த தகைமைவாய்ந்த பணியாட்தொகுதியைக் கொண்டுள்ளது. இதன் அனேக பணியாளர்கள் பொலிஸில் கடமையாற்றிய அனுபவத்தையும் நிபுணத்துவமிக்க பயிற்சி மற்றும் உளவுத்துறை தொடர்பில் சிறந்த அனுபவத்தையும் கொண்டவர்கவுள்ளனர். இவர்கள் நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்திகள் தொடர்பிலான சிக்கல்மிகு சவால்களையும் சிறப்பாக கையாளத்தக்க நிலையிலுள்ளனர்.

**உளவுத்துறை வலையமைப்பு** - அரச உளவுத்துறைச் சேவைப் பிரிவானது முழு உலகையும் உள்ளடக்கும் வண்ணம், வெளிநாடுகளின் மண் பற்றிய தகலைக் கூட அறிந்தவர்களாக பரந்தளவு உளவுத்துறை நலையமைப்பொன்றைக் கொண்டுள்ளது.

**ஒலி தரவுத்தளம்** - அரச புலனாய்வுத்துறைச் சேவையானது நிறுவனத்தின் தொடக்கம் முதற் கொண்டு சேகரிக்கப்பட்ட ஒலிப் பதிவுகளைக் கொண்டதொரு தரவுத்தளத்தைக் கொண்டுள்ளது. இத்தரவுகளைக் கொண்டு ஆட்கள், நிறுவனங்கள், பொருட்கள் மற்றும் நிகழ்வுகளைக் கண்டறிவதற்கு பயன்படுத்தப்படுவதனால் இத்தரவுத்தளமானது மிகவும் இன்றியமையாததாகும்.

### 17.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு

**அட்டவணை 17.1: 2008 – 2014 வரை நிதிசார் முன்னேற்றம்**




### 17.4 பிரச்சினைகளும் சவால்களும்

**தொழில் பாதுகாப்பு** – ஏனைய பாதுகாப்பு வழங்கும் முகவர்களைப் போலல்லாது, தொழில்கள் இங்கு மிகவும் சிறப்பாக பாதுகாக்கப்படுகின்றன.

**உளவுபார்த்தல்** - உளவுபார்ப்பதிலிருந்தான அச்சுறுத்தலானது எப்போது ஒரு மதிப்பிடப்பட்ட அச்சுறுத்தலைக் கொண்டுள்ளது. இது அரச உளவுத்துறைச் சேவையினால் பேணப்பட்டு வருகிறது.

**மனித உரிமைகள்** - பாதுகாப்பு விடயங்களில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் தலையிடு மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் சட்ட அமுலாக்க அதிகாரங்களினதும்

நீதித்துறையினதும் நகர்வு ஆகியன ஒரு அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளன. இருப்பினும், அரச உளவுத்துறைச் சேவையின் அதிகாரிகள் எந்தவொரு வன்முறைக் குற்றச்சாட்டிற்கும் உட்பட்டதில்லை.

**ஊடுருவல்கள்** - இரட்டை முகவர்கள் மற்றும் உளவாளிகள் ஆகியோரின் ஊடுருவல் குறித்தான அச்சுறுத்தலானது நிறுவனத்தின் மிகவும் முன்னுரிமை பெற்றதொரு பிரச்சினையாக தொடர்ந்தும் காணப்படுகிறது.

## 17.5 எதிர்கால வாய்ப்புக்கள்

- சன்சீ பிறை. லிமிடட்டுனான முறைமைத் தன்னியக்கக் கருத்திட்டமானது 2015 ஆம் ஆண்டிலிருந்து 2016 இற்கு தரமுயர்த்தப்படவுள்ளது.
- நிறுவனத்திற்கான தொழில் வல்லுநர்களை ஆட்சேர்த்தல்.

**அட்டவணை 17.1: முன்னெடுக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| இல | பாடநெறியின் பெயர் | இடம் | நிறுவனம் | பங்கேற்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | அடிப்படை பாடநெறி | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | அரச உளவுத்துறைச் சேவையின் | 36 |
| 2 | அடிப்படை பாடநெறி | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | அரச உளவுத்துறைச் சேவையின் | 33 |
| 3 | அடிப்படை பாடநெறி | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | அரச உளவுத்துறைச் சேவையின் | 30 |
| 4 | அடிப்படை பாடநெறி | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | அரச உளவுத்துறைச் சேவையின் | 28 |
| 5 | புத்தாக்கப் பயிற்சிநெறி | பொம்புரல்ல பயிற்சி நிலையம் | அரச உளவுத்துறைச் சேவையின் | 25 |
| 6 | புத்தாக்கப் பயிற்சிநெறி | பொம்புரல்ல பயிற்சி நிலையம் | அரச உளவுத்துறைச் சேவையின் | 29 |
| 7 | புத்தாக்கப் பயிற்சிநெறி | பொம்புரல்ல பயிற்சி நிலையம் | அரச உளவுத்துறைச் சேவையின் | 26 |
| 8 | புத்தாக்கப் பயிற்சிநெறி | பொம்புரல்ல பயிற்சி நிலையம் | அரச உளவுத்துறைச் சேவையின் | 29 |
| 9 | புத்தாக்கப் பயிற்சிநெறி | பொம்புரல்ல பயிற்சி நிலையம் | அரச உளவுத்துறைச் சேவையின் | 18 |
| 10 | புத்தாக்கப் பயிற்சிநெறி | பொம்புரல்ல பயிற்சி நிலையம் | அரச உளவுத்துறைச் சேவையின் | 16 |
| 11 | புகைப்படமெடுத்தல் மற்றும் ஒலிப்பதிவு பயிற்சிநெறி | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | அரச உளவுத்துறைச் சேவையின் | 23 |
| 12 | புகைப்படமெடுத்தல் மற்றும் ஒலிப்பதிவு பயிற்சிநெறி | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | அரச உளவுத்துறைச் சேவையின் | 23 |
| 13 | புகைப்படமெடுத்தல் மற்றும் ஒலிப்பதிவு பயிற்சிநெறி | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | அரச உளவுத்துறைச் சேவையின் | 14 |
| 14 | புகைப்படமெடுத்தல் மற்றும் ஒலிப்பதிவு பயிற்சிநெறி | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி | அரச உளவுத்துறைச் | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அலகு | சேவையின் | |
| 15 | பதிவேட்டு நடவடிக்கை மற்றும் கணினி அறிவு | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | அரச உளவுத்துறைச் சேவையின் | 17 |
| 16 | பதிவேட்டு நடவடிக்கை மற்றும் கணினி அறிவு | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | அரச உளவுத்துறைச் சேவையின் | 19 |
| 17 | மைக்ரோசாப்ட் ஒபிஸ் பிரயோகப் பொதி | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | சஞ்சயா லங்கா கணினிப் பயிற்சி நிலையம் | 40 |
| 18 | இராஜதந்திரி முறை மற்றும் உலக விவகாரங்களில் டிப்ளோமா பாடநெறி | டீஆஐஊர் | | 4 |
| 19 | அடிப்படைக் கணினிப் பாடநெறி | விலசித்த நிவச | பொலிஸ் | 40 |
| 20 | சான்றிதழ் பாடநெறி | ளுடுனுயு கொழும்பு | ளுடுஐனுயு | 4 |
| 21 | ஆங்கிலப் பாடநெறி | குண்டசாலை "வுளு | பொலிஸ் | 2 |
| 22 | தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவப் பாடநெறி | தேசிய பொலிஸ் கல்வி நிறுவகம் - கட்டானை | பொலிஸ் | 2 |
| 23 | தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | களனி பல்கலைக்கழகம் | 31 |
| 24 | உளவளத்துணை டிப்ளோமா | இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | | 4 |
| 25 | முகவர் ஆட்சேர்ப்பு மற்றும் முகாமைத்துவ வல்லுநர்கள் | கொழும்பு ஹில்டன் ஹோட்டல் | அவுஸ்திரேலிய பங்களிப்பு | 4 |
| 26 | பயங்கரவாத தடுப்பு உளவுத்துறைக் குழு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | ஐக்கிய அமெரிக்க பங்களிப்பு | 6 |
| 27 | பகுப்பாய்வுகளும் பயிற்றுநர் பாடநெறிப் பயிற்சியும் | ஹோட்டல் சினமன் கிராண்ட் | அவுஸ்திரேலிய பங்களிப்பு | 4 |
| 28 | உளவறிதல் நடவடிக்கை முகாமைத்துவ பாடநெறி | தாஜ் சமுத்திரா ஹோட்டல் | அவுஸ்திரேலிய பங்களிப்பு | 2 |
| 29 | உளவறிதல் நடவடிக்கை முகாமைத்துவ பாடநெறி | தாஜ் சமுத்திரா ஹோட்டல் | அவுஸ்திரேலிய பங்களிப்பு | 2 |
| 30 | சர்வதேச நிகழ்வுக் கட்டளை கட்டுப்பாடு மற்றும் ஒருங்கிணைப்புப் பயிற்சி | ழுணுழு ஹோட்டல் | அவுஸ்திரேலிய மத்திய பொலிஸ் | 6 |
| 31 | உளவறிதல் பாதுகாப்பு ருேர்ஊசு ஆணை மற்றும் அரசாங்க அலுவலர்களுக்கான நடைமுறை | தாஜ் சமுத்திரா ஹோட்டல் | அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் (ருேர்ஊசு) | 5 |
| 32 | னுயேு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | அரச உளவுத்துறைச் சேவையின் பயிற்சி அலகு | ஐக்கிய அமெரிக்க பங்களிப்பு | 9 |
| 33 | இஸ்லாமிய அடிப்படைவாதம் மீதான பயிற்சி | இந்தியா | | 12 |
| 34 | உளவறிதல் தடுப்பு பற்றிய பாடநெறி | பாகிஸ்தான் | | 1 |
| 35 | பயங்கரவாத தடுப்பு மற்றும் முகவர் ஆட்சேர்ப்பு ஆற்றல்கள் | தென் கொரியா | | 6 |

## 18.1 மேலோட்டப் பார்வை

தேசிய கடேட் படையானது அதன் படையணியினருக்கு அல்லது அலுவலர்களுக்கு பயிற்சியளிப்பதனையே எப்போதும் பிரதானமாகக் கொண்டுள்ளது. கடேட் படையென்பது பாடசாலைக்குச் செல்கின்ற 14 முதல் 20 வயதுக்குட்பட்ட மாணவர்களும் அதன் அலுவலர்களாக பாடசாலையின் நிரந்தர ஆசிரியர்களுமாகக் காணப்படுவர். பயிற்சியே இங்கு அடிப்படை அம்சமாகக் காணப்படுவதோடு, இதன் அடிப்படையிலேயே திறமையான தலைவர்கள் கட்டியெழுப்பப்படுகின்றனர். எனவே, தேசிய கடேட் படையணியானது சிறப்பாக திட்டமிடப்பட்ட முகாம்கள், பாடநெறிகள் மற்றும் பல்வேறு செயற்பாடுகளையும் இவ்வாண்டுக்காலத்தில் முன்னெடுத்தது. இச் செயற்பாடுகளின் வெற்றியானது அவசியமான நிர்வாக, பயிற்சி மற்றும் பயன்படுத்தப்பட்ட காப்பு நடவடிக்கைகள் போன்றவற்றிலேயே தங்கியுள்ளது. கடேட் படைப்பிரிவானது இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் வாத்திய இசைக்குழு எனவும் விரிவாக்கப்பட்டுள்ளது.

## 18.2 2014 இல் பெறப்பட்ட சாதனைகள்

### 18.2.1 கடேட் பயிற்சி

**பாடசாலையில் அடிப்படை கடேட் பயிற்சி**

ஒரு பாடசாலை மாணவனை ஒரு கடேட் ஆக மாற்றுகின்ற அடிப்படைப் பயிற்சியானது முடிந்தளவு அக்கறையுடன் மேற்கொள்ளப்படுதல் கட்டாயமானதென்பதோடு, அப்பயிற்சியின் தரம் தொடர்பில் அவதானமும் செலுத்தப்படல் வேண்டும். கடேட் குறித்தான அடிப்படைப் பயிற்சியானது பாடசாலையில் ஆரம்பிப்பதோடு, இம்மாணவர்களுக்கு அடிப்படை இராணுவப் பயிற்சியொன்றும் வழங்கப்படுகிறது. இது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்ற கடேட் அலுவலர்களின் நோக்கெல்லையின் கீழ் தேசிய கடேட் படையின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இடம்பெறும். இந்த பாடசாலை மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது நிரந்தர பணியாட்தொகுதியின் பயிற்றுவிப்பாளர்களினால் முன்னெடுக்கப்படும்.

**பட்டாலியன் மதிப்பீட்டு முகாம்**

தேசிய கடேட் படையானது 34 ஓ பெட்டாலியன்களை நாடளாவிய ரீதியில் கொண்டுள்ளதோடு, இப்படையின் இவை லெப்டினட் கேணல் மற்றும் சிரேஷ்ட பிரதானிகளினால் கட்டளையிடப்பட்டு வழிநடாத்தப்படுகிறது. கடேட் படையானது தனது சம்பந்தப்பட்ட மதிப்பாய்வு முகாம்களை 9 முதல் 10








நாட்கள் வரையானதொரு காலப்பகுதியில் நடத்துகிறது. இதன் கடற்படை மற்றும் விமானப்படைக்குரிய மதிப்பாய்வு முகாம்களும் முறையே திருகோணமலையிலுள்ள கடற்படை மற்றும் கடல்சார் கல்வி நிறுவகம் மற்றும் தியத்தலாவையிலுள்ள விமானப்படை பயிற்சிப் பாடசாலை ஆகியவற்றில் முன்னெடுக்கப்படுகின்றன. அதேவேளை, ஏனைய அனைத்து மதிப்பாய்வு முகாம்கள், பாடநெறிகள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியன ரன்தம்பேயிலுள்ள பயிற்சி நிலையத்தில் நடத்தப்படுகின்றன.

இராணுவ மதிப்பாய்வு முகாம் - பெண்கள் மற்றும் ஆண்கள் - பயிற்சி நிலையம் - ரண்தம்பே

பொலிஸ் மதிப்பாய்வு முகாம் - ஆண்கள் - பயிற்சி நிலையம் - ரண்தம்

இசை வாத்திய மதிப்பாய்வு முகாம் (கிழக்கு மற்றும் மேற்கு)- ஆண்கள் - பயிற்சி நிலையம் - ரண்தம்பே

கடற்படை மதிப்பாய்வு முகாம் - பெண்கள் மற்றும் ஆண்கள்- கடற்படை மற்றும் கடல்சாாந்த கல்வி நிறுவனம், திருகோணமலை



விமானப்படைப் பிரிவு மதிப்பாய்வு முகாம் - பெண்கள் மற்றும் ஆண்கள் - விமானப்படை பயிற்சி நிலையம், தியத்தலாவை




**மதிப்பாய்வு முகாம்களுக்கான கடேட் படையினரின் பங்கேற்பு**


**அட்டவணை 18.1: 2014 இல் ஆண் கடேட் படையினரின் பங்கேற்பு**

| | வீரர்களின் எண்ணிக்கை | கடேட் படையினரின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| இராணுவம் | 590 | 14750 |
| கடற்படை | 74 | 1850 |
| விமானப் படை | 60 | 1500 |
| பொலிஸ் | 25 | 625 |
| இசை வாத்தியக்குழு | 70 | 1750 |
| மொத்தம் | 819 | 20475 |

**வரைபு 18.1: வருடாந்த ஆண் கடேட் படையின் பங்கேற்பு**





**வரைபு 18.2: மொத்த ஆண் வீரர்களின் எண்ணிக்கை**




**அட்டவணை 18.2: 2014 இல் பெண் கடேட் படையினரின் பங்கேற்பு**

| | வீரர்களின் எண்ணிக்கை | கடேட் படையினரின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| இராணுவம் | 88 | 2,200 |
| கடற்படை | 30 | 750 |
| விமானப் படை | 55 | 1,375 |
| பொலிஸ் | 30 | 750 |
| இசை வாத்தியக்குழு | 25 | 625 |
| மொத்தம் | | **5,700** |

**வரைபு 18.3: பெண் படையினரின் மொத்த எண்ணிக்கை**




கடேட் படையின் இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் பிரிவில் சிறப்புத் தகைமை பெற்றமைக்காக மதிப்பாய்வு முகாம்களின் வீரர்கள் "ஹேர்மன் லூஸ் மற்றும் த சொயிசா சம்பியன் கிண்ணப் போட்டி முகாம்" இற்காக தெரிவுசெய்யப்படுவர்.

- **ஹோர்மன் லூஸ் மற்றும் த சொயிசா சம்பியன் கிண்ணப் போட்டி முகாம்**

“ஹோர்மன் லூஸ் மற்றும் த சொயிசா சம்பியன் கிண்ணப் போட்டி முகாம்” ஆனது வருடாந்தம் ஒக்டேபர் மாதத்தில் ரன்தம்பை பயிற்சி நிலையத்தில் இடம்பெறுகின்ற தேசிய கடேட் படையின் பாரியதொரு நிகழ்வாகும்.

இதில் வெற்றிபெறும் ஆண் வீரருக்கு ஹோர்மன் லூஸ் சம்பியன் கிண்ணத்திற்கான விருது வழங்கப்படுவதோடு, பெண் வீராங்கனைக்கு த சொய்சா சம்பியன் கிண்ணத்திற்கான விருதும் வழங்கப்படும். இவ்விரு வெற்றியாளர்களும் “இவ்வாண்டுக்கான ஜனாதிபதியின் படை வீரர்” எனும் பதவி நாமம் சூட்டப்படுகிறது.

த சொய்சா சம்பியன் கிண்ணம






ஹோர்மன் லூஸ் சம்பியன் கிண்ணம

- **வெளிநாட்டுப் பிரதிநிதிகள்**

தேசிய கடேட் படையின் தலைமைச் செயலகம் மற்றும் பாதுகாப்ப அமைச்சு ஆகியவற்றின் அழைப்பின் பேரில் சாக் நாடுகளின் கடேட் படை மற்றும் அதன் அதிகாரிகள் ஆகியோர் வருடாந்தம் இடம்பெறுகின்ற ஹோர்மன் லூஸ் மற்றும் த சொய்சா சம்பியன் கிண்ண போட்டியினை பார்வையிடுவதற்கு பங்கேற்கின்றனர்.

**அட்டவணை 18.3: ஹோர்மன் லூஸ் மற்றுு த சொய்சா முகாமை பார்வையிட பங்கேற்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பற்றிய விபரம் -2014**

| நாடு | பணிப்பாளர் | ஏழு வழு னுபு | | அதிகாரிகள் | | கடேட் படையினர் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பணிப்பாளர் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| பங்களாதேஷ் | 1 | 1 | - | 1 | 1 | 5 | 5 | 14 |
| இந்தியா | - | - | - | 1 | 1 | 6 | 6 | 14 |
| மாலைதீவு | 1 | - | - | 1 | 1 | 5 | 5 | 13 |
| நேபாளம் | 1 | 1 | 1 | - | 1 | 3 | 3 | 10 |
| பாகிஸ்தான் | - | - | - | 3 | - | 15 | - | 18 |
| சிங்கப்பூர் | 1 | 1 | - | 1 | 2 | 5 | 1 | 11 |
| மொத்தம் | 4 | 3 | 1 | 7 | 6 | 3 | 20 | 80 |




**கடேட் படைக்கு வழங்கப்பட்ட பாடநெறிகள்**

**ஆங்கில மொழிப் பாடநெறி**

2014 இல் ரண்தம்பே பயிற்சி நிலையத்தில் இரண்டு ஆங்கில மொழிப் பாடநெறிகள் நடாத்தப்பட்டன. இது ஒரு 30 நாட்கள் மற்றும் 15 நாட்களைக் கொண்ட பாடநெறிகளாகவிருந்தன.



**கணினி பாடநெறிகள்**

கணினி பற்றிய அறிவை மேம்படுத்தும் நோக்கோடு, ரண்தம்பே பயிற்சி நிலையத்தில் இரண்டு கணினி பாடநெறிகள் நடாத்தப்பட்டன.



**இசை வாத்தியம், ட்ரம் எக்காளம் இசைத்தல் பற்றிய பாடநெறி**

கடேட் படையின் வாத்திய இசைக்குழுவின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் எத்தாளம் இசைப்பவர் மற்றும் ட்ரம் இசைப்பவருக்கான விசேடமாக வடிவமைக்கப்பட்டதொரு பாடநெறியானது அறிமுகம் செய்யப்பட்டது.

**கடேட் படையினருக்கான கனீட தலைமைத்துவப் பயிற்சி**

துணிகரமிக்க சாதனை என்பது ஒவ்வொரு இளைஞனதும் உயிர் நாடியாகும். கடேட் படை உறுப்பினரின் சிற்றலுவலர் பதவிக்கான கேள்விக்கு தீர்வளிக்கும் வகையில் மேற்படி பாடநெறி அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு படைக் குழுவிலிருந்துமான 2 ஒ உறுப்பினர்கள், விசேடமாக ஒவ்வொரு குழவிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட கனீட படை உறுப்பினர்கள் இப்பாடநெறியில் பங்கேற்றனர். இது 8 நாட்களைக் கொண்டதொரு தலைமைத்துவ மற்றும் சாத்தியமிக்க மனோபாவ விருத்திக்குரிய பாடநெறியாகும்.

**கடேட் படையினருக்கான உயர்நிலைப் பாடநெறி**

வளம் மிக்க, பதிலளிப்பு மிக்க, தாக்குப்பிடிக்கக்கூடிய, நேர்மையான தலைவர்களையும் குழச் செயற்பாட்டாளர்களையும் விருத்திசெய்யும் நோக்கிலான கடேட்டின் பணிநோக்கின் ஒரு அங்கமாக, தேசிய கடேட் படையானது பரந்தளவிலான சாகசம் மிக்கதும் பரீட்சார்த்தமிக்கதுமான நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்பாடுகளையும் வழங்குகிறது.










**இராணுவ தின அணிவகுப்பு – நேபாளம்**

**பாகிஸ்தானுக்கான உத்தியோகபூர்வ விஜயம்**

மேற்படி உயர்நிலை பாடநெறியானது, விசேடமாக சிரேஷ்ட கடேட் உறுப்பினர்களுக்காக வடிவமைக்கப்பட்டதாகும். இது இவர்களின் தன்னம்பிக்கை அனுபவத்தைக் கட்டியெழுப்புவதில் அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு தலைமைத்துவத் தரத்தை விருத்திசெய்யும் நோக்கினைக் கொண்டுள்ளதோடு, இப்பாடநெறியானது ஏனைய பாடநெறிகளிலிருந்து வேறுபட்டதாகத் திகழ்கின்ற அதேவேளை, இப்பாடநெறியில் கிட்டத்தட்ட 1,540 கடேட் உறுப்பினர்கள் முனைப்பாகவும் ஆர்வத்தோடும் பங்கேற்கக்கூடியதாகவிருந்தனர்.

**அட்டவணை 18.4: பாடநெறிகளுக்கான கடேட் படையின் பங்கேற்பு - 2014**

| பாடநெறி | பங்குபற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|
| **ஆங்கில மொழிப் பாடநெறி** | 380 |
| **கணினி பாடநெறி** | 180 |
| **இசை வாத்தியம், ட்ரம் மற்றும் எக்காளம் இசைத்தல் பற்றிய பாடநெறி** | 280 |
| **கடேட் படையினருக்கான கனீட தலைமைத்துவப் பயிற்சி** | 700 |
| **கடேட் படையினருக்கான உயர்நிலைப் பாடநெறி** | 850 |
| **மொத்தம்** | **2,390** |

## 18.2.2 வெளிநாட்டுப் பயணங்கள்

சர்வதேச ரீதியிலான புரிந்துணர்வுகள் மற்றும் உயர்ந்தளவு விழிப்புணர்வுகள் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில், தேசிய கடேட் படையானது இரண்டு சாக் நாடுகளின் தேசிய கடேட் படைகளுடனான இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தை 2005 இல் நடாத்தியது. குறித்த இலக்கினை அடையும் வகையில், இந்நிகழ்ச்சித்திட்டமானது அனைத்து சாக் நாடுகளுக்கும் மற்றும் ஆசிய நாடுகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதன் விளைவாக இலங்கையின் தேசிய கடேட் படையானது வருடாந்தம் ஏறு விஜயங்களை மேற்கொள்வதற்கான சிறப்புரிமையைக் கொண்டுள்ளது.

**அட்டவணை 18.5: 2014 இல் வெளிநாட்டுப் பயணங்களுக்கான இலங்கை கடேட் மற்றும் அதிகாரிகளின் பங்கேற்பு**

| நாடு | நிகழ்வு | பணிப்பாளர் | அதிகாரிகள் | கடேட் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **இந்தியா** | ஷிவாஜி ரெய்ல் ட்ரக் முகாம் | - | 1 | 6 | 7 |
| **இந்தியா** | குடியரசு தினக் கொண்டாட்டம் | 1 | 2 | 12 | 15 |
| **பங்களாதே'** | வெற்றி தினக் கொண்டாட்ட அணிவகுப்பு | 1 | 2 | 10 | 13 |
| **நேபாளம்** | இராணுவ தின அணிவகுப்பு | 1 | 1 | 4 | 6 |
| **பாகிஸ்தான்** | அலுவலக ரீதியான விஜயம் | 1 | 2 | 12 | 15 |
| **மொத்தம்** | | 1 | 8 | 44 | 52 |

- குடியரசு தினக் கொண்டாட்ட முகாம் - இந்தியா



## 18.2.3 அலுவலருக்கான பயிற்சி

**பொதுவானது**

தேசிய கடேட் படையானது சிறுவர்களை அதன் முதலான சொத்தாகக் கருதுவதோடு, இப்பொறுப்பு மிக்க விடயங்களை அர்ப்பணிப்போடு மேற்கொள்வதற்காக தனது அலுவலர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. எமது தாய் நாட்டினை ஒரே கொடியின் கீழ் நிலைநிறுத்தி தேசத்திற்காக சேவையாற்றும் நோக்கில், உள்ளக சேவை ஆசிரியர்கள் எப்போதும் இனம், சமூகம் மற்றும் சாதி வேறுபாடுகளின்றி தேசிய கடேட் படைக்கு உள்வாங்கப்படுகின்றனர். தேசிய கடேட் படையினை தரமுயர்த்தும் நோக்கோடு பல்வேறு பாடநெறிகள் (இராணுவ மற்றும் சிவில் சார்ந்த பாடநெறிகள்) திட்டமிடப்பட்டன.

**தகுதிகாண் அலுவலர் பாடநெறி**

கடேட் படைக்கான அலுவலர்களாக ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான அடிப்படைப் பாடநெறியே தகைமைகாண் அலுவலர் பாடநெறியாகும்.

**படைப்பிரிவின் தங்குமிட திருத்தம்**
**திருத்தம் மொ.செலவு**
**-ரூ. 13,519,896.55**

**அலுவலர் உணவகம்**
**மொ.செலவு-**
**ரூ. 3,948,216.80**



**மரியாதை மேடை நிர்மாணிப்பு**
**மொ.செலவு -ரூ. 3,749,475.00**



**கடேட் படை உணவகம் திருத்தம்**
**மொ.செலவு -ரூ. 5,387,481.50**



**நீர்த்தாங்கி திருத்தம்**
**உயிர் வாயு முறைமை திருத்தம்**
**மொ.செலவு -ரூ. 485,111.00**



**மொ.செலவு -ரூ. - சுஎ. 49,145.00**



**உள்ளக வீதி காபட் இடல்**
**மொ.செலவு -ரூ. 1,854,542.00**



**காட்சி அரங்கம் திருத்தம்**

**புதிய பேக்கரி அவண்**
**மொ.செலவு -ரூ. 131,774.00**

**யானை காப்பு வேலி**
**மொ.செலவு -ரூ. 578,465.72**









**தடங்கல் பிரதேச புத்தாக்கம்**
**மொ.செலவு -ரூ. 300,090.00**

## 18.3 பிரச்சினைகளும் சவால்களும்

தற்போதுள்ள சாரதிகள் மற்றும் வாகன வசதிகள் தலைமை அலுவலகம், படைப்பிரிவுகள், மற்றும் பயிற்சி நிலையம் போன்றவற்றின் அனைத்து செயற்பாடுகளையும் நிறைவுசெய்வதற்குப் போதுமானதாக இல்லை.

இவ்வாண்டுக் காலத்தில் பாடசலை மட்டத்திலான கடேட் பயிற்சிகள் படைப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. படைப்பிரிவில் நிலவுகின்ற ீஏஜ களின் பற்றாக்குறையானது அனைத்து பயிற்சி விடயங்களிலும் ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

தனியார்த்துறையினருக்குச் செலுத்தப்படவேண்டிய நிலுவையிலுள்ள கொடுப்பனவுகள் அவர்களின் சேவையினை தொடர்ந்தும் பெறுவதில் பிரச்சினையை தோற்றுவித்துள்ளது. பயிற்சி தொடர்பான விவகாரங்களை சுமுகமாக கொண்டு செல்வதற்காக நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அமைச்சு எதிர்பார்க்கிறது.

## 18.4 எதிர்கால வாய்ப்புக்கள்

கடற்படை மற்றும் விமானப்படையினரின் மதிப்பாய்வு முகாம்கள் கடற்படை மற்றும் விமானப்படையினரின் வளாகத்தினுள் இடம்பெறுகின்றன. எதிர்காலத்தில் இம் மதிப்பாய்வு முகாம்களை ரண்தம்பையிலுள்ள

பயிற்சி நிலையத்தில் நடத்துவதே தேசிய கடேட் படையின் எதிர்பார்ப்பாகும். இருப்பினும், மேலும் மஹாவலி அதிகாரசபையினால் கையளிக்கப்பட்ட சேதமடைந்த கட்டடத்தை, கடேட் படையினருக்கான இடவசதியளிப்பதற்கும் ஏனைய பயிற்சி விடயங்களை நடத்தும் நோக்கில், புதுப்பித்தல் அவசியமாகவுள்ளது.

ரண்தம்பையிலுள்ள பயிற்சி நிலையத்தில் 9 நாட்களைக் கொண்டதொரு மதிப்பாய்வு முகாமில் கிட்டத்தட்ட 1000 கடேட் வீரர்கள் பங்கேற்பதோடு, அண்ணளவாக 18 ஒ மதிப்பாய்வு முகாம்கள் வருடாந்தம் இடம்பெறவுள்ளன. எனவே, ரண்தம்பையிலுள்ள பயிற்சி நிலையத்தில் கழிவறை மற்றும் படைப்பிரிவினரின் தங்குமிடம் ஆகியவற்றை உடனடியாக திருத்தியமைக்க வேண்டிய தேவையும் காணப்படுகிறது.


# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (முனுரு)

## 19.1 மேலோட்டப் பார்வை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகமானது 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதோடு, இதனையடுத்த பல்வேறு திருத்தங்கள் மூலம் இதன் தொழிற்பாட்டு பணியெல்லைகள் மேம்படுத்தப்பட்டன. இது 1988 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டதோடு, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகமென, 2007 இன் 50 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரகாரம் பெயர் மாற்றப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டமானது இலங்கை பல்கலைகழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதென்பதோடு, இது பொதுநலவாய பல்கலைக்கழகங்கள் சங்கம் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகச் சங்கம் ஆகியவற்றில் அங்கத்துவத்தையும் கொண்டுள்ளது.

இப்பல்கலைக்கழகமானது பாதுகாப்பு அமைச்சின் கீழான முகாமைத்துவச் சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற சுயாதீன நிறுவனமாகச் செயற்படுகின்றதொரு அரச பல்கலைக்கழகமாகும். மேலும் இது முச் சேவை ஊழியர்கள், நாட்டிலுள்ள தகைமைவாய்ந்த இளைஞர்கள், வெளிநாட்டு மாணவர்கள், தனியார் மற்றும் அரச துறை ஊழியர்கள் ஆகியோருக்கான உயர் கல்வி வாய்ப்புக்களை, இளங்கலை மற்றும் முதுகலைப் பட்ட மட்டங்களில் வழங்குகின்றது.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகமானது கடந்த 5 வருட காலத்தில் அதன் வலிமையில் உறுதியான வளர்ச்சியைக் காண்பித்துள்ளதோடு, அதன் அனைத்துச் செயற்பாடுகளிலும் கணிசமான வளர்ச்சியையும் காண்பித்துள்ள அதேவேளை, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அடைவதற்கு திட்டமிடப்பட்ட அனேக இலக்குகளையும் அடைந்தது. அனேக இலக்குகள் அவை தொடர்பான முகாமைத்துவ எண்ணக்கருக்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டிருந்த காரணத்தினால் உரிய காலத்திற்கு முன்னமே அவற்றை பல்கலைக்கழகத்தினால் அடையக்கூடியதாகவிருந்தது. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகமானது அதன் நோக்கெல்லை, பணியெல்லை, மற்றும் குறிக்கோள் ஆகியவற்றுக்கிணங்க தனது இலக்குகளை வடிவமைத்து அவற்றை அடைய எதிர்பார்க்கின்றது.




## 19.2 யுஉ_ாறைநளநஅநவெள ைை 2014

**வரைபடம் 19.1 : கடேட் அலுவலர்கள்.'. மாணவர்களை படையில் சேர்த்தல்**

**அட்டவணை 19.1 : பணியாளர்களை ஆட்சேர்த்தல்**

| வகை | நியமனங்கள் | ஓய்வுபெறுதி | இராஜினாம | பதவி வெற்றிடம் | முடிவுறுத்த | பதவியுயர்வு | ஒப்பந்த முடிவு |
|---|---|---|---|---|---|---|---|
| **கல்வி சார்ந்தது** | 61 | 00 | 10 | 00 | 00 | 00 | 06 |
| **நிர்வாகப் பணியாளர்கள்** | 09 | 00 | 03 | 00 | 01 | 00 | 00 |
| **கல்வி சார் பணியாளர்கள்** | 25 | 00 | 19 | 00 | 00 | 00 | 00 |
| **எழுதுநர் மற்றும் அது சார்ந்த பணியாளர்கள்** | 26 | 00 | 10 | 00 | 00 | 03 | 00 |
| **சிற்றூழியர்கள்** | 27 | 01 | 05 | 09 | 00 | 00 | 00 |
| **மொத்தம்** | 148 | 01 | 47 | 09 | 01 | 03 | 06 |

### 19.2.1 பல்கலைக்கழக வைத்தியசாலையின் தாபிப்பு

பல்கலைக்கழக வைத்தியாசலை நிர்மாணிப்புப் பணிகள் துரித கதியில் இடம்பெறுவதோடு, இது ரூபா. 162 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியில் வெளிநாட்டு ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்படுகிறது. 2014 இன் நிறைவில் 50 சதவீதமான நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்திருந்தன.

### 19.2.2 இணைந்த சுகாதார விஞ்ஞானப் பீடத்தை வெரஹரவிற்கு இடமாற்றல்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானப் பீடமானது வெரஹரவில் பல்கலைக்கழக வைத்தியாசலைக் கட்டடத் தொகுதிக்கு அருகிலமைந்துள்ள புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது. இதன் உத்தியோகபூர்வ திறப்பு விழா 2014 நவம்பர் 19 இல் இடம்பெற்றது.



### 19.2.3 சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்களத்தின் தென் பிராந்தி வளாகத்தைத் தாபித்தல்



சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் தென்பிராந்திய வளாகத்திற்கான அத்திவாரக் கல்லானது சூரியவெவயில் 20014 பெப்ரவரி 06 ஆம் திகதி நாட்டப்பட்டது. இதனை 2015 மே 5 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்துவைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### 19.2.4 பட்டப் படிப்பிற்கான பீடத்தின் கட்டட நிர்மாணிப்பு





இதன் நிர்மாணப் பணிகளில் 80 சதவீதமான பௌதீக முன்னேற்றம் பூர்தியடைந்துள்ளன.

### 19.2.5 பல்கலைக்கழக அச்சகத்தைத் தாபித்தல்

சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் அச்சகத்துக்கான அத்திவாரக் கல் 2014 செப்டம்பர் 04 இல் நாட்டப்பட்டது. இவ் அச்சகமானது பல்கலைக்கழகத்தின் அச்சுத் தேவைப்பாடுகளை நிறைவேற்றி வைப்பதற்கானதாகும். இதன் மொத்தக் கருத்திட்டத்தையும் பல்கலைக்கழகத்தின் சுய நிதி நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டதொரு கடனைக் கொண்டு மேற்கொள்வதற்கு திட்டமிடப்படுகிறது.



### 19.2.6 கடேட் அலுவலர்களின் 20 குடியிருப்புக்களுக்கான வதிவிட வசதியை மேம்படுத்தல்

சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகமானது கல்வி சார் பணியாட்தொகுதியினருக்கானதொரு 6 மாடியிலமைந்த 20 குடியிருப்புக்களையும் வதிவிட வசதி தேவையான மாணவர்களுக்காக 6 மாடிகளிலமைந்த கட்டடத் தொதியையும் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்து வருகிறது. இக்கருத்திட்டமானது 2014 – 2016 காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

### 19.2.7 24 x 7 அளவுடைய விஞ்ஞானத் துறையினருக்கான திறந்த வழிக் கொள்கையின் பேரிலான ஆராய்ச்சி ஆய்வுகூடம்

இலங்கையிலுள்ள விஞ்ஞானத்துறையினர் தமது ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக நவீனத்துவமிக்கதும் புத்தாக்கமிக்கதுமான வசதிகளை வழங்கும் நோக்கில், பல்கலைக்கழகத்தின் 24 ஒ 7 அளவிலான திறந்த வழிக் கொள்கை சார்ந்த ஆராய்ச்சி ஆய்வுகூடமானது 2014 ஆகஸ்ட் 20 ஆம் திகதி தாபிக்கப்பட்டது.

### 19.2.8 பொறியியல் பீட கட்டட நிர்மாணம்



பொறியில் பீடத்திற்கான இக்கட்டடத்தின் செலவினம் ரூபா. 500 மில்லியனாகும். இது இலங்கையில் தாபிக்கப்படுகின்ற முதலாவது சுற்றாடல் நேயமிக்கதொரு கட்டடமாகும். 2014.12.31 இலுள்ளவாறு நிர்மாணப் பணிகளுக்கான செலவினம் ரூபா. 136 மில்லியனாகக் காணப்பட்டது. 2014.12.31 இலுள்ளவாறு இதன்

பௌதீக முன்னேற்றம் 35 சதவீதமெனக் காணப்பட்டது. இக்கட்டடத்தின் கட்டம் 1 ஆனது 2015 மார்ச் இல் பூர்த்தி செய்யப்பட்டது.

## 19.2.9 கந்தவள ஏரியின் புத்தாக்கம்

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் கந்தவள ஏரியின் புத்தாக்கப் பணிகள் ஒரு ஊஎஸ்ஆர கருத்திட்டமாக 2014 மே 22 இல் பூர்த்திசெய்யப்பட்டன.

பல்கலைக்கழகமானது அதன் பணியாளர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் வசதிகள், சிவில் பணியாளர்களுக்கு சலுகை வட்டியுடனான நலன்புரிக் கடன்கள், உப வேந்தரின் நலன்புரி நிதியத்தின் மூலம் சிவில் பணியாளர்களுக்கான உடனடிக் கடன் வசதிகள், பல்கலைக்கழகத்தின் பணியாளர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கல், வருடாந்த மெய்வல்லுனர் போட்டியை நடாத்தல், வருடாந்த சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டினை 2014 ஆகஸ்ட் 21, 22 திகதிகளில் நடத்தியமை பல்கலைக்கழகத்தின் 2014 இற்கான பட்டமளிப்பு விழாவை நடத்தியமை போன்றவற்றை மேற்கொள்கிறது.

## 19.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு


**நிதி சார் முன்னேற்றம்**

பொதுத் திறைசேரியானது தேசி வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்திற்கான மூலதன மற்றும் மீண்டெழும் தேவைப்பாடுகளை ஒதுக்குகிறது.

**அட்டவணை 19.2: 2008 முதல் 2014 வரை பெறப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கங்களின் சுருக்கமும் 2015 இற்கு ஒதுக்கப்பட்ட தொகையும்**

| ஆண்டு | அரசாங்கத்தின் பங்களிப்பு ரூ.மில் | | |
|---|---|---|---|
| | மீண்டெழுகின்றவை | மூலதனம் | மொத்தம் |
| 2008 | 186.49 | 10.60 | 197.09 |
| 2009 | 208.11 | 33.40 | 241.51 |
| 2010 | 222.42 | 136.17 | 358.59 |
| 2011 | 309.93 | 387.11 | 697.05 |
| 2012 | 341.99 | 421.33 | 763.33 |
| 2013 | 377.47 | 450.51 | 827.99 |
| 2014 | 649.44 | 519.45 | 1,168.89 |
| 2015 | 676.00 | 550.00 | 1,226.00 |

மேற்படி காலப்பகுதிக்கான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கங்கள் பின்வரும் வரைபடத்தில் தரப்படுகிறது.




மேலும், பல்கலைக்கழகத்தின் வைத்தியசாலைக்கான நிர்மாணப்பணியானது 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது. வைத்தியசாலைக் கருத்திட்டத்தின் நிர்மாணிப்புச் செலவினத்திற்கான தவணைக் கடன் வசதிகள் தேசிய சேமிப்பு வங்கியினால் வழங்கப்பட்டது.

எனினும், 2014 மற்றும் 2015 இலான தவணை வட்டிகளைச் செலுத்துவதற்கு வரவுசெலவுத் திட்ட ஒதுக்கங்கள் வழங்கப்பட்டன. அவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

**அட்டவணை 19.3: வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு**

| ஆண்டு | அரசாங்கத்தின் பங்களிப்பு ரூ.மில் |
|---|---|
| 2014 | 940 |
| 2015 | 2,300 |

சுற்றுச்சூழல் மற்றும் இடம் சார்ந்த விஞ்ஞான பீடம் மற்றும் கணினி பீடம் ஆகியவற்றைத் தாபிப்பதற்கான தென் பிராந்திய வளாகத்தின் நிர்மாணப் பணிகள் 2014 இன் ஆரம்ப காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் முதலாவது கட்டத்திற்கு ரூபா. 1,000 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு, இந்நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்காக விசேட அபிவிருத்தி முன்னெடுப்புகள் நிதியத்திடமிருந்து ரூபா. 600 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

கட்டடங்களின் நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியன இலங்கை கடற்படையினால் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, உள்ளக வீதி வலையமைப்பானது இலங்கை இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கிணங்க, கல்வி சார் நடவடிக்கைகள் 2015 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்டன.

**பிரதான மூலதனக் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்**

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட 4 கருத்திட்டங்கள் பிரதான மூலதனக் கருத்திட்டங்களாக இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன,

- ஐ. மருத்துவ பீடக் கட்டட நிர்மாணம்.
- ஐை. பொறியியல் பீடக் கட்டட நிர்மாணம்.
- ஐைை. பல்கலைக்கழக வைத்தியசாலை நிர்மாணம்.
- ஐஎ. சூரியவெவயில் தென் பிராந்திய வளாகத்தை தாபித்தல்.

**ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் முற்பணக் கணக்கு போன்றன தொடர்பிலானவை**

(ஐ) தனி நபர் ஊதியம், மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள்

(ஐை) எதிர்வுகூறப்பட்டதற்கு எதிராக இடம்பெற்றவை -2014

(மை) விபரிக்கப்பட்ட எல்லைகளுக்கு எதிராக இடம்பெற்றவை

## 19.4 பிரச்சினைகளும் சவால்களும்

**பிரச்சினைகள்**

பல்வேறு உள்நோக்க அமர்வுகளின் பின்னர் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வானது பல்கலைக்கழகத்தின் இலக்குகளை அடையும் போது எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகளை இனங்காட்டியிருந்தது.

- கந்தவள தோட்டத்திலுள்ள காணியின் அளவானது தேவையான உட்கட்டமைப்பு அபிவிருத்திக்குப் போதுமானதல்ல.
- பல்கலைக்கழகத்தின் அமைவிடமானது இரத்மலானை விமானநிலையத்திற்கு அருகிலிருப்பதனால் கட்டடங்களின் உயரத்தை ஆறு மாடிகளுக்கு மேல் கட்ட முடியாமை.
- தங்குமிட வசதி அனைத்து மாணவாகளுக்கும் போதுமானதல்ல.
- பல்கலைக்கழகத்துடன் பிணைப்பத்திரம் ஒன்றில் கைச்சாத்திட வேண்டுமென்பதால் கடேட் அதிகாரி வகைக்கான சில விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்துடன் இணைந்துகொள்வதற்கு தயக்கம் காட்டுகின்றமை.

**சவால்கள்**

- ஏனைய பல்கலைக்கழகங்களில் பிணைப்பத்திர செயன்முறை இன்மையினால் அத்தகைய பல்கலைக்கழகங்களினால் மாணவர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்படுகின்றமை.
- பல்கலைக்கழகம் தொடர்பிலான இராணுவக் கண்ணோட்டம் காரணமாக சிறந்த ணு புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் ஏனைய பல்கலைக்கழகங்களில் இணைந்துகொள்கின்றனர்.

## 19.5 எதிர்கால வாய்ப்புக்கள்

**நிறுவனத்தை மேம்படுத்துவதற்காக நடுத்தர காலமொன்றில் (2016 - 2018) மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்**

- கல்விசார் துறைகளில் விரிவாக்கத்தினை மேற்கொள்ளல்.
- வட மாகாணத்தில் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வளாகமொன்றைத் தாபித்தல்.
- பல்கலைக்கழகத்தில் சட்ட உதவி மற்றும் சட்ட ஆலோசனை மையம் ஒன்றைத் தாபித்தல்.
- புவியியல் தகவல்நுட்ப பொறியியல் திணைக்களம் ஒன்றைத் தாபித்தல்
- பொறியில் ஆலோசனைச் சேவைகள் மையமொன்றைத் தாபித்தல்.
- குழுநு இல் கைத்தொழில் பயிற்சி அலகொன்றைத் தாபித்தல்.
- சுகாதார சேவைகளிலான பட்டப் பின்படிப்பு நிறுவகம் ஒன்றைத் தாபித்தல்.
- சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினைத் தொடரும் வகையில் க.பொ.த (உ.த) பரீட்சையில் உயர் தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்.
- பல்கலைக்கழகத்தின் ஆளணியினை மீளாய்வு செய்தல்.
- டுடுடீ பகுதிநேர பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல்.
- மருத்துவ பீடத்தில் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை ஆரம்பித்தல்.
- வைத்தியசாலை முகாமைத்துவத்தில் டிப்ளோமா அல்லது உயர் டிப்ளோமா பாடநெறிகளை ஆரம்பித்தல்.
- பாதுகாப்பு மற்றும் உபாய மார்க்க கல்வியில் ஆளுஉ பட்டப்படிப்பினை ஆரம்பித்தல்.
- மொழிகளிலான டீயு பட்டப்படிப்பு மற்றும் ஆங்கில மொழிப் பயிற்சி ஆகியவற்றை ஆரம்பித்தல்.
- தமிழில் ஒரு குறுகிய பாடநெறியை ஆரம்பித்தல்
- தகவல் தொழில்நுட்பம் சார்ந்த டிப்ளோமா பாடநெறியை ஆரம்பித்தல்.
- ஊலக பிரபல்யமிக்க பல்கலைக்கழகங்களுன் கல்விசார் கூட்டிணைப்புக்களை தொடர்தும் மேற்கொள்ளல்.

- பல்கலைக்கழக இணையத்தின் தர வரிசைப்படுத்தல் போட்டியில் முன்னேறும் வகையிலான தேவையான நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளல்.
- சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சர்வதேச தர அளவுகோல்களைப் பிரயோகித்தல்.
- ஆடீயு.'. டீளுஉ பொருள் வழங்கல் முகாமைத்துவ பட்டப்படிப்பு ஆகியவற்றுக்கு ஐக்கிய இராச்சியத்தின் பொருள் வழங்கல் மற்றும் போக்குவரத்துக்கான பட்டய நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்போடு, இணைந்த சுகாதார விஞ்ஞானத்திலா பட்டப்பின் படிப்பினை ஆரம்பித்தல்.
- பிரபல்யமிக்க வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் பணியாளர்.'. மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல்.
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்போடு வைத்தியசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள "மருத்துவ ஆலோசகர்" இற்கான பயிற்சியினை ஆரம்பித்தல்.
- ஐஆழு இனால் மீளாய்வு செய்யப்பட்ட கடல்சார்ந்த பொறியில் பட்டப்படிப்பு பாடத்திட்டத்தைப் பெறுதல்.
- வாசிங்டன் உடன்பாட்டு அங்கீகாரத்தை அடையும் வகையில் பொறியில் துறையின் தரத்தை மேம்படுத்தல்.
- பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் ஞயுயு ஊடாக பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களி தர நிர்ணயத்தை உறுதிப்படுத்தல்.
- பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் ஞயுயு மூலம் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தன் அங்கீகாரச் செயன்முறையினைத் தொடர்தல்.
- மொழி ஆய்வுகூடங்களை இற்றைப்படுத்தல்.
- கல்வித்துறைக் கட்டடங்களை புத்தாக்கம் செய்தல் மற்றும் வகுப்பறை வசதிகளை மாற்றியமமைத்தல்.
- தொழில்வாண்மை நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் ஊஊயுே ஆய்வுகூடத்தை ஆரம்பித்தல்.
- பல்கலைக்கழகத்தினுள் தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப வசதிகளை தரமுயர்த்தல்.
- சர்வதேச தர ஆராய்ச்சிக்காக இலங்கை மற்றும் வெளிநாடுகளிலிருந்தான இளம் விஞ்ஞானிகளின் நம்பிக்கையூட்டும் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளல்.
- மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு அலகுகள்.'. கருத்திட்டங்களை தாபித்தல்.
- பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டு முழு அளவிலான பல்கலைக்கழக-பராமரிப்பு வசதியை இயங்கச் செய்தல்.
- குயர்ளு இல் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்காக உடற்பயிற்சிக் கூடத்தை தாபித்தல்.
- நடை மற்றும் அசைவு பற்றிய பகுப்பாய்வு ஆய்வுகூடமொன்றைத் தாபித்தல்.
- "முழுப் பணியுடைய இயந்திர அறை சிமியுலேட்டர்" ஒன்றை கொள்வனவு செய்தல்.
- உலோக வார்ப்பக சாலையொன்றை நிர்மாணித்தல்.
- ஏனைய உயர் கல்வி நிறுவகங்களிலுள்ள கலவி நிகழ்ச்சித்திட்டங்களை உறுதிப்படுத்தல் மற்றும் அவற்றை செல்லுபடியாக்குதல்.
- உயர் கல்வியில் ஆசிரியர் சான்றிதழுக்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழவின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- காட்சியரங்கம் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் பல்கலைக்கழக மைதானங்களில் 400 மீற்றர் செய்றகைப் பாதைகளை அமைத்தல்.
- பல்கலைக்கழக காணியினுள் நினைவுச் சின்னமொன்றை நிர்மாணித்தல்.

## 20.1 மேலோட்டப் பார்வை

பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியானது முச்சேவைகளிலுமுள்ள நடுத்தர இராணுவ அதிகாரிகளுக்கான உள்ளக பயிற்சியினை வழங்குகின்றதொரு நிறுவகமாகும். பயிற்சிநெறிகளின் பாடவிதானமானது இராணுவ, உபாயமுறை மற்றும் சர்வதேச் கல்விகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் ஆளுஉ படிப்பை மாணவர்கள் பெறுவதற்கான இயலச்செய்கின்ற ஆராய்ச்சிப் பணியினையும் உள்ளடக்குகின்றது. னுளுஊஊளுஊ ஆனது 4 பிரிவுகளாக ஒழுங்குபடுத்தப்படுகிறது, இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியன பாடநெறிக்கான போதனைகளை வழங்குவதோடு, ஒருங்கிணைப்புப் பிரிவானது பயிற்சி உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

## 20.2 2014 இல் பெற்ற அடைவுகள்

### 20.2.1 பிரதான நடவடிக்கைகள்

#### 20.2.1.1 பயிற்சிகள்

கல்லூரியானது கற்பித்தல் தொடர்பில் பயிற்சிகளை வழங்குவதற்கு படைகளின்றிய பயிற்சி முறைகளைப் பயன்படுத்துகின்றது. 2014 ஆம் ஆண்டுக் காலத்தின் போது முன்னெடுக்கப்பட்ட சில பிரதான பயிற்சிகள் பின்வருமாறு:

**இராணுவம்**

- பிராஸ் ட்ரக்ஸ் பயிற்சி
- அப்பேர் கட் பயிற்சி
- காங்கிரிட் ஜங்கிள் பயிற்சி
- கோல்டன் ீல்ட் பயிற்சி



பிராஸ் பயிற்சி



அப்பேர் பயிற்சி



காங்கிரிட் பயிற்சி



கோல்டன் பயிற்சி

**கடற்படை**

- ஒக்டோபஸ் பயிற்சி
- கொன்டிக்கி பயிற்சி
- ரைடன் பயிற்சி
- ஸ்ரீ – ருடுலுளுளுநுளுளு பயிற்சி



ஒக்டோபஸ் பயிற்சி



கொண்டிக்கி பயிற்சி



ரைடன்ட் பயிற்சி



ஸ்ரீ – ருடுலுளுளுநுளுளு பயிற்சி

**விமானப்படை**

- சுதாஸி பயிற்சி
- தண்டர் ஸ்ரைக் பயிற்சி
- குவான் பிரஹர பயிற்சி
- ஒக்டோபஸ் பயிற்சி



சுதாஸி பயிற்சி



தண்டர் ஸ்ரைக் பயிற்சி



குவான் பிரஹர பயிற்சி



ஒக்டோபஸ் பயிற்சி

### 20.2.1.2 விஜயங்கள்

மாணவ அலுவலர்களுக்கு முக்கியமான அரசாங்க மற்றும் தனியார்த்துறை சார்ந்த இராணுவத் தாபிப்புக்களுக்கு விஜயம் செய்வதன் மூலம் அவர்களை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. மேலும் சீனா, இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், துருக்கி, தாய்லாந்து மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகளிலுள்ள இராணுவத் தாபிப்புக்களை பார்வையிடுவதற்கான 10 நாட்களைக் கொண்டதொரு வெளிநாட்டுக் கற்கை தொடர்பிலான பயணமும் ஏற்பாடு செய்யப்பட்டது.


சீனா


மலேசியா


துருக்கி


பிலிபைன்ஸ்


இந்தோனேசியா


ஐக்கிய அரபு

## 20.2.2 விசேட நிகழ்வுகள்

### 20.2.2.1 வெளிநாட்டுப் பிரமுகர்களின் விஜயங்கள்

2014 ஆம் ஆண்டுக்காலத்தில் பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரிக்கு பின்வரும் வெளிநாட்டு பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர்:

- உகண்டா குடியரசின் அரச பாதுகாப்பு அமைச்சர் கௌரவ ஜெனரல் ஒ.டீ. ஒடொங்கோ ஜெஜே அவர்களின் விஜயம் - 2014 ஜனவரி29



- இராணுவப் பணியாட்தொகுதியின் பிரதானி – நேபாளம், ஜெனரல் கவுராவ் ‘ம்’ர ஜங் பஹாது ரணா 2014 பெப்ரவரி 03 இல் விஜயம் செய்தமை



- ஓமான் நாட்டிலிருந்தான இராணுவ பிரதிநிதியின் விஜயம் 2014 ஏப்ரல் 01



- பணியாளர் குழுவின் இணைப் பிரதானிகளின் தவிசாளர் - பாகிஸ்தான், ஜெனரல் ர’ாட் மஹ்மூத் 2014 ஏப்ரல் 09 இல் விஜயம் செய்தமை



- இஸ்ரேலின் உள்நாட்டு அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் நாயகமும் பீரங்கி கட்டளைத் தளபதியுமான ஜெனரல் எய்ரீ மிஸ்ராஜி 204 ஜூலை 24 இல் விஜயம் மேற்கொண்டமை



- பங்களாதேஷின் தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் பிரதிநிதியின் விஜயம் 2014 ஆகஸ்ட் 22 முதல் 31 வரை



- பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் விமானப் படைப் பணியாட்தொகுதியின் பிரதான தளபதி தாஹிர் ரபீக் 2014 ஆகஸ்ட் 29 இல் மேற்கொண்ட விஜயம்



**சிரே‘ட இராணுவ அதிகாரிகளின் விஜயங்கள்**

2014 ஆம் ஆண்டுக் காலத்தின் போது பின்வரும் சிரே‘ட இராணுவ அதிகாரிகள் பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூக்கு விஜயம் செய்தனர்:

- இராணுவ கட்டளை அதிகாரி – லெப்டினல் ஜெனரல் ஆர்.எம்.டீ. ரத்னாயக்கா றுறுஏ சுறீ சுளீ ருளீ னெர ிளஉ 2014 டிசம்பரில் விஜயம் செய்தமை



- கடற்படையின் கட்டளைத் தலைவர்கள் - துணைக் கடற்படைத் தளபடி எஸ்.ஏ.எம்.ஜே. பெரேரா சுறீ ஏளுஏ ருளீ னெர ிளஉ 2014 டிசம்பர் 10 ஆம் திகதி விஜயம் செய்தமை.



- விமானப்படைக் கட்டளைத் தளபதி – எயார் மா'ல் கே.ஏ. குணதிலக 2014 டிசம்பர் 10 இல் விஜயம் செய்தமை.



- பாதுகாப்புப் பணியாட்தொகுதியின் பிரதானி – ஜெனரல் ஜே. ஜயசூரிய சுறீ ஏளுஏ ருளீ னெர ிளஉ 2014 டிசம்பர் 12 இல் விஜயம் செய்தமை.



### 20.2.3 கல்வி சார் நிகழ்ச்சித்திட்டடங்கள்

பின்வரும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டுக் காலத்தில் பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியில் இடம்பெற்றன:

- பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியினால் 2014 ஆகஸ்ட் 25 முதல் 28 வரை யுத்த கூட்டுப் பயிற்சி பற்றிய செயலமர்வு இடம்பெற்றது.



- சர்வதேச மனித நேயச் சட்டம் மீதான ஐஊஊசுஊ இன் செயலமர்வு 2014 செப்டம்பர் 1 முதல் 3 வரையான காலப்பகுதியில் ஐஊஊசுஊ பிரதிநிதிகளால் நடாத்தப்பட்டது.



### 20.2.4 பட்டமளிப்பு விழா



கல்லூரியின் பாடநெறி இல.8 இற்கான பட்டமளிப்பு விழா 2014 டிசம்பர் 17 இல் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

**அட்டவணை 20.2 : கல்லூரியின் பாடநெறி இல. 8 இன் பெறுபேறுகள்**

| | இறுதியான குழுவிலுள்ள மாணவ அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை | 'டீ.ளுஉ' | | ஆளுஉ பட்டம் பெறுவதற்குத் தகுதியானோர் |
|---|---|---|---|---|
| | | பட்டம் வழங்கப்பட்டது | பாடநெறியை பின்பற்றியோர் | |
| இராணுவம் | 71(10*) | 68(09*) | 3(01*) | **20(07*)** |
| கடற்படை | 25(04*) | 24(04*) | 1 | **18(03*)** |
| விமானப்படை | 22(02*) | 22(02*) | - | **18(01*)** |
| மொத்தம் | **118(16*)** | **114(15*)** | **4(01*)** | **56(11*)** |

* வெளிநாட்டு மாணவர்கள்

### 20.2.5 எட்டப்படாத இலக்குகள்

நிதிப் பற்றாக்குறை காரணமாக ரூபா. 20.4 மில்லியன் பெறுமதியான கட்டட நிர்மாணப் பணியானது 2015 இற்கு ஒத்திவைக்கப்பட்டது.

### 20.2.6 திறன் அபிவிருத்தி

**உட்கட்டமைப்பு**


- நான்கு மாடிகளைக் கொண்ட யுத்த கூட்டுப் பயிற்சி விளையாட்டு நிலையம் ஒன்று கல்லூரியின் கல்விசார் கட்டடத்துடன் சேர்க்கப்பட்டது. இதன் மொத்த நிலப் பரப்பு 24214 சதுர அடிகளாகும். இதில் கேட்போர்கூடம் மற்றும் 202 நபர்களுக்கான இருக்கை போன்றவற்றுக்கான வசதிகள் உள்ளன. இக்கருத்திட்டத்திற்கான செலவினம் ரூபா. 47.08 மில்லியனாகும்.

- அலுவலர்களின் சமயலறையானது அதற்கான கருவி வசதிகள் கொண்டு தரமுயர்த்தப்பட்டது.

- ரூபா. 37.9 மில்லியன் பெறுமதியான இரண்டு மாணவ தங்குமிட கட்டடங்கள் பூர்த்தியாக்கப்பட்டன. இது 24 அலுவலர்கள் தங்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ளது.

## 20.3 முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பகுப்பாய்வு

**வரைபு 28.1: நிதிசார் முன்னேற்றம்**




**மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்**

- மாணவர் அலுவலர்களுக்கான தங்குமிட வசதியுடைய கட்டடத் தொகுதியானது 2014 ஆம் ஆண்டுக் காலத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டது. இக்கருத்திட்டத்திற்காக இவ் ஆண்டுக் காலத்தின் போதுரூபா. 39.7 மில்லியன் செலுத்தப்பட்டது.
- நான்கு மாடிகளையுடைய கட்டடம் (யுத்த விளையாட்டு நிலையம்) 2014 ஆம் ஆண்டுக்காலத்தில் பூர்த்திசெய்யப்பட்டது. இக்கருத்திட்டத்திற்காக இவ்வாண்டுக் காலத்தில் ரூபா. 47.08 மில்லியன் செலுத்தப்பட்டது.

- திட்டமிடப்பட்டவாறு பாடநெறிகளும் சம்பந்தப்பட்ட பயிற்சி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

## 20.4 பிரச்சினைகளும் சவால்களும்

ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் அடைவதிலுள்ள பிரச்சினைகள் கீழுள்ள பிரிவுகளில் காணப்படுகின்றன.

ய. நிதிசார் மட்டுப்பாடுகள்.
டி. மனித வள மட்டுப்பாடு

சவால்கள்

ய. வெளிநாட்டு மாணவர்களை அதிகரித்தல்
டி. விரிவுரைகளுக்காக சிறந்த வளவாளர்களை பெறுதல்.

## 20.5 எதிர்கால வாய்ப்புக்கள்

பணியாளர்களுக்கான பயிற்சிநெறியானது முழுமையான உள்ளக பயிற்சி நெறியாக இடம்பெற வேண்டுமென உத்தேசிக்கப்படுவதனால், அவசியமான சந்தர்ப்பம் தவிர, அனைத்து மாணவர்களுக்கும் கல்லூரியினுள் சிறப்பு தங்குமிட வசதிகளை வழங்க வேண்டியது அவசியமாகும். இதுவே ஏனைய பணியாளர் கல்லூரிகளில் பின்பற்றப்படுகின்ற சம்பிரதாய முறையுமாகும். கல்லூரியில் தற்போதுள்ள சிறப்ப தங்குமிட வசதிகள் 13 ஆகக் காணப்படுவதோடு, இதன் நடுத்தரக் காலத்திற்கான தேவைப்பாடு 35 ஆகும். சிறப்பு தங்குமிட வசதிகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க வேண்டுமாயின், சம்பந்தப்பட்ட உபயோக வசதிகளும் அதகரிக்கப்படல் வேண்டும்.

# 21
# பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி

## 21.1 மேலோட்டப் பார்வை

கொழும்பு, பாதுகாப்புச் சேவைக் கல்லூரியானது கொழும்பு 2, மலே வீதியில் 4.5 ஹெக்டயர் பரப்பில் 2007 ஜனவரி மாதம் ஒரு தேசிய பாடசாலையாக தாபிக்கப்பட்டது. இது ஆயுதப்படை மற்றும் பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள் தமது பிள்ளைகளை பிரபல்யமிக்க பாடசாலைகளில் அனுமதித்தல் தொடர்பில் அவர்கள் எதிர்கொள்கின்ற தற்போதைய சவால்களை இலகுபடுத்துவதற்கே பிரதானமாக தாபிக்கப்பட்டது. இது ஒரு கட்டுக்கோப்பான சூழமைவில் உயர் தரமானதும் சம அந்தஸ்துடையதுமான கல்வியை வழங்கும் நோக்கிலான அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களுக்கு உதவக்கூடிய புதிய ஆளுகை முறைமையினை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் சோதித்தல் போன்ற நோக்கங்களையும் நிறைவேற்றுகிறது. பாதுகாப்புச் சேவைகள் கல்லூரியானது கல்வி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நேரடியாக செயற்படுவதோடு, அதன் நிர்வாகக் கட்டுப்பாடு அரச பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது பாதுகாப்புச் சேவைகள் கல்லூரியானது ஒரு கலப்பு பாடசாலையாக இயங்குவதோடு, 2240 மாணவர்களும் 99 ஆசிரியர்களும் உள்ளனர். தரம் 13 இற்கான வகுப்பினை ஆரம்பித்ததும் மாணவர்களின் எண்ணிக்கையினை 3600 வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது தரம் 1 முதல் 9 வரையான வகுப்புக்களின் அனைத்து கல்விசார் மற்றும் மேலதிக கல்விசார் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் கல்லூரியானது கண்டிப்பான, விரிவான அணுகுமுறையொன்று தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. மேலும் மக்களின் நன்மை கருதி இலங்கையின் கல்வி அமைச்சின் வழிகாட்டலுக்கு இணங்க, சிறந்த வளமாக கல்வியை பயன்படுத்துவது தொடாபில் கல்லூரியானது கவனமெடுத்து வருகிறது. மேலும் இது அறிவுசார்ந்த விசாரணையினை ஊக்குவிப்பதோடு ஒரு வழிபாட்டு நடவடிக்கையாக கல்விக்கு கௌரவமளிப்பதாகவும் கருதுகின்றது.



**பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி – கொழும்பு**

குருணாகல், பாதுகாப்புக் கல்லூரியானது 2009 ஜனவரி 29 ஆம் திகதி ஒரு தேசிய பாடசாலையாக தாபிக்கப்பட்டது. தற்போது இது ஒரு கலவன் பாடசாலையாக இயங்குவதோடு, 665 மாணவர்களையும் 28 ஆசிரியர்களையும் கொண்டுள்ளது.



பாதுகாப்புக் கல்லூரி - குருணாகல்

## 21.2 2014 இல் பெற்ற அடைவுகள்


2014 இன் போதான பிரதான நடவடிக்கைகளும் முன்னேற்றங்களும்

-  ஆரம்பதர கட்டடத் தொகுதியின் நிர்மாணம் (தொகுதி இல.06)





-  ஆரம்பமாகும் திகதி - 2011 ஆகஸ்ட் 01
-  முடிவடையும் திகதி – 2014 பெப்ரவரி 24
-  செலவினம் - ரூபா. 224 மில்லியன்
-  கட்டடத்தின் வகை –ஐந்து மாடிகளைக் கொண்ட வகுப்பறையும் தங்குமிட வசதியும்
-  கட்டடத்தின் நோக்கம் - வகுப்பறை, பணியாளர் அறை, கழிவறைத் தொகுதி, மற்றும் குடியிருப்பு அலகுகள்

- மொத்த நிலப் பரப்பு – 6814 சதுர மீட்டர் (73345 சதுர அடி)
- முன்னைய நிலைப்பாடு - இவ் ஆண்டில் (2014) இலக்கு அடையப்பெறவில்லை, பணிகள் அடுத்த ஆண்டுக்கு (2015) ஒத்திவைக்கப்பட்டது.
- விடுதிக் கட்டடம் மற்றும் விளையாட்டு மைதானத்தின் நிர்மாணம் - மதிப்பிடப்பட்ட செலவு - ரூபா. 603 மில்லியன்




## 21.3 2014 இல் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு

நடவடிக்கைகள் தொடர்பிலான மதிப்பாய்வும் கற்றுக்கொண்ட விடயங்களும் - நிர்மாணப் பணிகள் இராணுவத்தின் நுளசு பிரிவினால் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பின் கீழ்




மேற்கொள்ளப்பட்டமையினால், இது வெளியக ஒப்பந்தக்காரர்களால் மேற்கொள்ளப்படுவதை விட மிகவும் வினைத்திறனுடையதாகவிருந்தது.

## 21.4 பிரச்சினைகளும் சவால்களும்

- மின்சாரம் மற்றும் நீர் ஆகியவற்றுக்கான கட்டணங்களைச் செலுத்துவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்தல்.
- சேவை உடன்படிக்கையை மீளாய்வு செய்தல்
- சேவை நீரை தூய்தாக்கல் முறைமை
- வரைவு செய்யப்பட்ட பாதுகாப்புச் சேவைகள் கல்லூரிச் சட்டத்தை அங்கீகரித்தல்.

## 21.5 எதிர்கால வாய்ப்புக்கள்

- விடுதி மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றின் நிர்மாணிப்பு – மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா.603 மில்லியன்
- வலையமைப்புடனான கணினி ஆய்வுகூடங்கள்
- தரவுத்தளத்தை தாபித்தல்
- உயர்தரத்தை ஆரம்பித்தல்

# 22
# கூட்டான சேவைகள் மொழி மற்று பயிற்சி நிறுவகம்

## 22.1 மேலோட்டப் பார்வை

கூட்டான சேவைகள் மொழி மற்றும் பயிற்சி நிறுவகமானது பாதுகாப்புப் படையினர் தமிழில் வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் மற்றும் பேசுவதற்குமான வினைத்திறனை அதிகரிக்கும் இலக்கோடு அவர்களுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்கும் நோக்கிலாளதொரு பயிற்சி நிறுவகமாக 1986 இல் பாதுகாப்பு அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. இந்நிறுவகமானது இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் ஆகியோருக்கான 89 பாடநெறிகளை பூர்த்திசெய்துள்ளது.

## 22.2 2014 இல் பெற்ற அடைவுகள்

### 21.2.1 பிரதான செயற்பாடுகள்

- இந்நிறுவகமானது 2014 ஆம் ஆண்டின் போது முப்படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோரிலிருந்தான 345 மாணவர்களுக்கு 03ஓ பாடநெறிகளை பூர்த்தி செய்துள்ளது.

- இந்நிறுவனமானது ரூபா. 1234438.00 செலவிலான குழாய்க்கிணறு மூலமான நீர் வழங்கல் கருத்திட்டங்களை நிர்மாணதிதுள்ளது.



- மாணவர்களுக்கான கழிவறைத் தொகுதி விரிவாக்கத்துக்கான செலவு ரூ. 244561.00 ஆகும்.





### 22.2.2 2015 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட பணிகள்

- பிரேரிக்கப்பட்ட அலுவலகத் தொகுதிக் கட்டடம்
- மாணவர் அலுவலர்களின் தங்குமிடக் கட்டட புத்தாக்கம்
- அலுவலர்களின் மற்றும் றுழுள ∴ளுபவ இன் உணவகத் தேவைப்பாடு

### 22.2.3 கற்றுக்கொண்ட விடயங்கள்

நிறுவகத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதில் அதன் உட்கட்டமைப்பு வசதிகளே பிரதானமாக அங்கம் வகிக்கும் என்பதை நிறுவகம் இனங்கண்டுள்ளதோடு, படை உறுப்பினர்களிடையே பயிற்சிநெறி மீதான ஆர்வமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 22.3 நிறுவகம் எதிர்கொண்ட பிரச்சினைகள்

- நிறுவகத்தில் உரிய தேவைப்பாடுகளை நிறைவேற்றும் வகையிலான போதிய தங்குமிட வசதிகள் இல்லை.

- பௌதீக வளங்களின் பற்றாக்குறை காரணமாக நிறுவகமானது நிர்வாகத் தொழிற்பாடுகளில் பிரச்சினைகளைக் கொண்டுள்ளது.

## 22.4 எதிர்கால வாய்ப்புக்கள்

- ஆங்கில மற்றும் பிரெஞ்சு மொழிக் கற்கைகளை ஆரம்பித்தல்.
- தங்குமிட வசதிகளில் மேம்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளைப் பெறுதல்.

# லங்கா லாஜிஸ்டிக்ஸ் அன் ரெக்னோலாஜீஸ் லிமிடட் (டுடுவுடு)

## 23.1 மேலோட்டப் பார்வை

டுடுவுடு ஆனது முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனியாகும். இது பாதுகாப்பு அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் செயற்படுவதோடு, அமைச்சுக்கும் அதன் வரிசை முகவர்களுக்குமான பொருட்கொள்வனவு வசதியை மேற்கொள்ளும் தலையாய பொறுப்பினைக் கொண்டுள்ளது. இவை தவிர, யுத்த நிறைவினையடுத்து தேசிய மட்டத்திலான பல்வேறு கருத்திட்டங்களிலும் இது ஈடுபட்டுள்ளதோடு, இலங்கையிலுள்ள பாரம்பரிய பாதுகாப்புத் துறையொன்றை ஊக்குவிப்பதற்கான கருத்திட்டங்களிலும் முனைப்பாக ஈடுபட்டுள்ளது.

## 23.2 2014 ஆம் ஆண்டில் பெற்ற அடைவுகள்

### 23.2.1 பிரதான நடவடிக்கைகள்

இக்காலப் பகுதியில் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களை பழுதுபார்ப்பதற்கான வசதியை வழங்க முடிந்ததோடு, விமானப் படையினால் வேண்டப்பட்ட டுடுவுடு பிற துணைப் பொருட்களையும் கொள்வனவுசெய்ய முடிந்தது. இலங்கை இராணுவத்திற்குத் தேவையான வாகனங்களை பாகிஸ்தானிலிருந்து கடன் அடிப்படையிலும் கொள்முதல் செய்தது.

இக்கம்பனியானது தேசிய ஆட்கள் பற்றிய பதிவேட்டுக்கான கேள்விமனு ஒப்பந்தத்தை வழங்கல், நுசீ பற்றிய தீர்வொன்றை அமுல்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கான இறுதி முடிவைக் கொண்ட ஆலோசனைச் சேவை தொடர்பான ஏற்பாடு போன்ற தகவல் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்ப தொடர்பான அனேக கருத்திட்டங்களில் ஈடுபட்டது.

அமைச்சினதும் அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களினதம் நோக்கெல்லையின் கீழான நிறுவகங்களுக்கான அனேக ஆலேசானைப் பணிகளையும் மேற்கொண்டது. இதற்கிணங்க, டுடுவுடு ஆனது கூட்டுறவுத் திட்டங்களை வகுத்தல், சாத்தியவள மதிப்பாய்வினை மேற்கொள்ளல், மற்றும் விசேட ஆய்வொன்றை மேற்கொள்ளல் போன்றவற்றில் ஈடுபட்டது. கொழும்பு வர்த்தக பிரதேசங்களுக்கான உட்கட்டமைப்பு திறன் தயார்நிலையினை மதிப்பிடும் நோக்கில் இதனை மேற்கொண்டது.

டுடுவுடு ஆனது அமைச்சுக்கான பாதுகாப்புத் துறை வணிகமயமாக்கலுக்கான பாரிய திட்டமொன்றையும் வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டது.

### 23.2.2 திறன் கட்டியெழுப்புகை


டுடுவுடு ஆனது நிறுவனத்தின் வெற்றிக்கான பிரதான முதலீட்டு உபாயமொன்றாக பணியாளர்களுக்கு பயிற்சியளித்து விருத்திசெய்வதற்கு உத்தேசம் கொண்டுள்ளது. எனவே, கம்பனியானது தகவல் தொழில்நுட்ப திறன் விருத்தி மற்றும் பொருட்கொள்வனவு, முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதி ஆகியவற்றிலான சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் வியாபார மாநாடுகள் மற்றும் கள மன்றங்கள் போன்றன மீதான செயலமர்வில் பணியாளர்கள் பங்கேற்பதற்கான வாய்ப்பினை வழங்கியது.

## 23.3 2014 இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பகுப்பாய்வு/ மதிப்பாய்வு


**அட்டவணை 23.1 : 2008-2014 காலப்பகுதியில் நிறுவனத்தின் நிதிசார் முன்னேற்றம்**

| விபரம் | 2007.·.08 | 2008.·.09 | 2009.·.10 | 2010.·.11 | 2011.·.12 | 2012.·.13 | 2013.·.14 |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.மில். | ரூ.மில். | ரூ.மில். | ரூ.மில். | ரூ.மில். | ரூ.மில். | ரூ.மில். |
| வருமானமும் சம்பந்தப்பட்ட செயலாற்றுகையும் | | | | | | | |
| வருமானம் | 71.40 | 105.45 | 40.71 | 46.09 | 69.97 | 130.62 | 95.17 |
| மொத்த இலாபம் | 15.40 | 23.69 | 6.73 | 33.67 | 69.46 | 99.68 | 81.50 |
| இயக்கப்பாட்டு இலாபம் (வட்டி மற்றும் வரிக்கு முன்னரான இலாபம்) | 2.27 | 4.67 | 4.92 | 11.00 | 4.28 | 13.81 | 9.60 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 1.75 | 4.13 | 4.81 | 10.82 | 7.62 | 17.38 | 15.57 |
| வரி | 1.05 | 3.57 | 2.77 | 3.18 | 2.91 | 3.23 | 4.70 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 0.69 | 0.57 | 2.04 | 7.65 | 4.71 | 14.15 | 10.88 |
| சொத்துக்களும் கடப்பாடுகளும் | | | | | | | |
| நடைமுறைச் சொத்தல்லாதவை | 11.43 | 10.63 | 8.43 | 4.03 | 15.48 | 12.53 | 8.56 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 124.63 | 174.88 | 138.00 | 132.62 | 194.46 | 159.09 | 157.02 |
| மொத்தச் சொத்துக்கள் | 136.06 | 185.51 | 146.43 | 136.65 | 209.94 | 171.62 | 165.58 |
| மொத்த சம பங்குடமை | 96.44 | 97.00 | 93.30 | 100.95 | 106.97 | 119.39 | 109.04 |
| நடைமுறைப் பொறுப்புக்களல்லாதவை | - | 0.76 | 1.33 | 1.87 | 19.30 | 4.08 | 4.04 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 39.62 | 87.74 | 51.80 | 33.83 | 83.67 | 48.14 | 52.50 |
| நிகர சொத்துக்கள் | 96.44 | 97.00 | 93.30 | 100.95 | 106.97 | 119.39 | 109.22 |
| பிரகடனப்படுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - | - | - | - | **1.05** | **1.20** |
| விகிதம் பற்றிய பகுப்பாய்வுகள் | | | | | | | |
| ஒரு பங்கிற்கான ஈட்டுகை | 3,375 | 2,756 | 9,930 | 37,312 | 22,974 | 69,003 | 1.36 |
| ஒரு பங்கிற்கான நிகர சொத்துக்கள் | 470,439 | 473,171 | 455,122 | 492,425 | 521,818 | 582,400 | 14.00 |
| சம பங்குடமை தொடர்பிலான அறவீடு | 0.72 | 0.59 | 2.19 | 7.58 | 4.40 | 11.85 | 9.97 |
| மொத்தச் சொத்துக்கள் தொடர்பிலான அறவீடு | 1.67 | 2.52 | 3.36 | 5.60 | 2.24 | 8.24 | 6.57 |
| ஒட்டுமொத்த இலாப | 21.57 | 22.47 | 16.53 | 73.06 | 99.28 | 76.31 | 85.63 |
| இயக்க இலாபம் | 3.18 | 4.43 | 12.09 | 23.87 | 6.12 | 13.31 | 16.36 |
| நிகர இலாபம் | 0.97 | 0.54 | 5.01 | 16.60 | 6.73 | 10.83 | 11.43 |
| நடைமுறைச் சொத்துக்களின் விகிதம் (தடவைகள்) | 3.15 | 1.99 | 2.66 | 3.92 | 2.32 | 3.30 | 2.99 |


வரைபு 23.1 : வருமானமும் செயலற்றுகையும் ரூ.மில்.





வரைபு 23.2: சொத்துக்களும் கடப்பாடுகளும்



வரைபு 23.3 : விகிதப் பகுப்பாய்வு




வரைபு 23.4 : மொத்த இலாபம் ரூ.மில்




## 23.4 பிரச்சினைகளும் சவால்களும்

ஆயுதப் படையினரின் சேவைகளுக்கான அறவீடுகளைச் சேகரிப்பதில் எதிர்கொண்ட சவால்களை கம்பனிக்கான அச்சுறுத்தலாகக் கருத முடியும். குறைந்தபட்ச சாத்தியப்பாட்டினை வழங்குவதற்கான நடைமுறையானது டுடுவுடு ஐ ஒரு நிறுவனமாக வர்ச்சியடையச் செய்வதில் அதன் திறமையினை கணிசமானளவு மட்டுப்படுத்தியிருந்தது. இச் சவால்கள் எவ்வாறிருப்பினும், டுடுவுடு ஆனது அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளையும் உரிய வேளைக்கு எதிர்கொண்டதோடு, கடன் வழங்குநருக்கான கொடுப்பனவைச் செலுத்துவதில் அனாவசிய தாமதம் எதுவுமிருக்கவுமில்லை. அத்தோடு, கடந்த இரண்டு வருடகாலமாக திறைசேரிக்கான பங்கிலாபங்களையும் செலுத்தியிருந்தது. கம்பனியானது நிர்வாகக் கட்டண ஈட்டுகைக்கானதொரு விலையின் உச்ச அளவை முன்வைப்பதனூடாக ந2.5 சதவீத நிர்வாகக் கட்டணம் எனும் அமைச்சரவையின் ஆணை தொடர்பில் ஒரு மீளாய்வினை கம்பனி மேற்கொண்டது.

கம்பனி எதிர்கொண்ட மற்றுமொரு சவால் யாதெனில், பாதுகாப்பு அமைச்சின் நோக்கெல்லையன் கீழ் வருகின்ற அனேக பிரதான கருத்திட்டங்களை தொடக்கிவைப்பதில் வழங்கப்பட்ட சேவைகளுக்கு ஏற்பட்ட செலவுகளை மீளளிப்பதற்கான குறைபாடு ஆகும்.

## 23.5 எதிர்கால வாய்ப்புக்கள்

### 23.5.1 நடுத்தரக காலத்தில் (216-2018) நிறுவனத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

இலங்கையில் ஆயுதப் படையினை உருவாக்குவதற்கான இதன் அர்ப்பணிப்புக்களின் ஒரு அங்கமாக, டுடுவுடு ஆனது னுளுஐ இன் ஒத்துழைப்போடு இராணுவத்தினருக்கான காலணிகள் தயாரிப்பு வசதியைத் தாபிப்பதற்கான அதன் கருத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்தது. ஆயுதப் படையினர் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்தான செலுத்தப்படாத கட்டணங்களிலிருந்து எழக்கூடிய நிதிப் பற்றாக்குறை காரணமாக இக்கருத்திட்டத்திற்கான முதலீட்டினை நிறைவு செய்வதற்கு கம்பனியினால் முடியாமலிருந்தது. 2007 முதல் ஜூலை 2009 வரையான காலத்தில் கம்பனி ஈட்டிய உரிய அறவீடுகள், அத்தகைய கருத்திட்டங்களுக்கான தொடக்க முதலீடு என்பதால், டுடுவுடு இற்கு வழங்கப்பட முடியுமென திறைசேரி சுட்டிக்காட்டியிருந்தது. அத்தகைய தொடக்க முதலீடுகள் 2015 இல் வழங்கப்படுமென டுடுவுடு எதிர்பார்க்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் இது அடைந்துள்ள நிபுணத்துவம் மற்றும் பிரபல்யமிக்க ஆலோனை நிறுவனங்களுடன் விருத்திசெய்துள்ள உபாய ரீதியான பங்காளித்துவம் ஆகியன அரசாங்கத் துறைக்கு போட்டிமிக்க தன்மையிலானதொரு ஆலோசனைச் சேவை வழங்குநராக மிழிரச் செய்யக்கூடும் என்பதனால் டுடுவுடு ஆனது எதிர்காலத்தில் அதன் ஆலோசனைச் சேவையினை விஸ்தரிப்பதற்கு எதிர்பார்த்திருக்கிறது.

### 23.5.2 நிறுவனத்தை மேம்படுத்துவதற்காக நீண்ட காலம் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள்

டுடுவுடு இன் வரைவுச் சட்டம் நிறைவுசெய்யப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் மற்றும் சட்ட வரைஞர் ஆகியோரிடமிருந்தான அவசியமிக்க அங்கீகாரங்களும் பெறப்பட்டுள்ளன. எனினும், இச்சட்டம் குறித்தான 12.'.0125.'.503.'.007 எனும் இலக்க அமைச்சரவை பத்திரம், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் 2011 டிசம்பர் 20 ஆம் திகதிய விஞ்ஞாபனம் ஆகியன வேறுபட்டன. கம்பனியின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தும் வகையில் எதிர்காலத்தில் இவ்விடயத்தை முன்னெடுப்பது இன்றியமையாததாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

# ரக்ணா ஆரக்'க லங்கா லிமிடட் (சுயுடுடு)

## 24.1 மேலோட்டப் பார்வை

ரக்ணா ஆரக்'க லங்கா லிமிடட்ட (சுயுடுடு) இன் முழு உரிமையும் இலங்கை அரசாங்கத்திற்குரியதென்பதோடு, இது பாதுகாப்பு அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் செயற்படுகிறது. இது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2006 ஒக்டோபர் 23 ஆம் திகதி பிரமுக ஆரக்'க லங்கா லிமிடட் என பதிவுசெய்யப்பட்டதோடு, அதனையடுத்து 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ரக்ணா ஆரக்'க லங்கா லிமிடட் என 2008 ஜுலை 28 ஆம் திகதி மீள் பதிவுசெய்யப்பட்டது. இக்கம்பனியின் தலைமைக் காரியாலயம் கொழும்பு 9 இலுள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (டீஆஜஐளர்) அமைந்திருப்பதோடு, கண்டி, மாத்தறை, காலி, இரத்தினபுரி, அனுராதபுரம், மேற்கு, கட்டுநாயக்கா, அம்பாந்தோட்டை மற்றும் வயபா போன்ற இடங்களில் 9 பிராந்திய அலுவலகங்களையும் கொண்டுள்ளது.

சுயுடுடு ஆனது பின்வரும் இரண்டு பிரதா குறிக்கோள்களை மையமாகக் கொண்டு தாபிக்கப்பட்டதாகும்:

- அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய இடங்களைப் பாதுகாத்தல்

- முன்னாள் படைவீரர்களுக்கு, அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் தொழில்வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு, இறைமை மற்றும் ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்துவதில் அவர்களின் சேவையினை அங்கீகரித்தல்.

சுயுடுடு இன் பாதுகாப்புப் படையணியானது முன்னாள் ஆண் மற்றும் பெண் படையினரையே தனியாகக் கொண்டதாகும். இவர்கள் தீவிரமிக்க பங்கரவாதத்தின் அச்சுறுத்தலிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக தனது உயிர்களை பணயம் வைத்துப் போராடியவர்களாவர். இத்தகைய வீரமும் திறமையும் மிக்க ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களை வேலையில் அமர்த்துதல் தொடர்பிலான கம்பனியின் கொள்கையானது மிகவும் திறமைவாய்ந்த பாதுகாப்புப் படையினரை பணிக்கமர்த்தல், குறைந்தபட்சம் ஒரு பகுதியாகவாவது மீள் செலுத்தலுக்கான கடமைப்பாடு, இவர்களின் தேசப்பற்று, துணிவு, தியாகம் போன்றவற்றுக்காக அனைத்து இலங்கையரும் கடமைப்பட்டுள்ள கடப்பாடு போன்றன மீதான அதன் வலியுறுத்தல்களுக்கு மத்தியில் உதயமாகின்றது.

இத்தகையதொரு தொடக்கம் முதல், 77 முன்னாள் படைவீரர்களை மாத்திரம் இது வேலைக்கமர்த்திய போது, சுயுடுடு ஆனது 3500 இற்கும் மேற்பட்ட ஆண் மற்றும் பெண் முன்னாள் படைவீரர்களுக்கு கௌரவமிக்க தொழில்வாய்ப்பினை இன்று வழங்குமளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. தொழில்வாய்ப்புக்களை வழங்குதல் தவிர, முன்னாள் படைவீரர்களை தான் ஒரு இராணுவ வீரன் என்ற நிலையிலிருந்து ஒரு குடிமகனாக மாற்றம் பெறச் செய்வதன் மூலம் அவர்களை சமூகத்துடன் மீள-ஒன்றிணைந்து வாழ்வதற்கான வழிவகைகளையும் இக்கம்பனி வழங்கியுதவுகிறது.

சுயுடுடு ஆனது தற்போது பின்வரும் நான்கு பிரதான செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகிறது:

- நிறுவனங்களுக்கான பாதுகாப்பினை வழங்குவதற்கும் தேசத்தின் இன்றியமையா அம்சங்களை நிறுவுவதற்குமான ஏற்பாடு

- இலங்கையிலிருந்தும் இலங்கையூடாகவும் செயற்படுகின்ற கப்பல் போக்குவரத்து தொடர்பிலான பாதுகாப்பு குறித்தான ஏற்பாடு

- முன்னாள் படைவீரர் மற்றும் வீராங்கனை ஆகியோருக்கு உதவும் வகையிலான விசேட கருத்திட்டங்களை முன்னெடுப்பதோடு, அதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்தல்:

  -ஓய்வுபெற்ற ஆயதப்படையினருக்கும் பொலிஸாருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாட்டினை செய்து கொடுத்தல்.


  -சுற்றுலாப் பயண தகவல் மையத்தைத் தாபித்தல். இச்செயற்பாட்டின் மூலம் முன்னேற்றம் பெற்று அபி வெனுவன் அபி நிதியத்திற்கு வழிவகுத்தல்.

- தனியார் பாதுகாப்புச் சேவை வழங்கும் கம்பனிகள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் ஆகிவற்றின் காவலாளிகளுக்கு, தொம்பேயிலுள்ள கம்பனியின் பயிற்சிப் பாடசாலை மூலம் தீ, அவசர பதிலளிப்பு நடவடிக்கை, மற்றும் கடல் சார்ந்த பாதுகாப்பளிப்பு ஆகிய துறைகளில் பயிற்சியளிப்பதன் மூலம் இலங்கையில் பாதுகாப்பின் நியமதரத்தை உயர்த்துதல்.

அட்டவணை 24.1: நிதிசார் செயலாற்றுகை 2008-2014

| செலவினம் | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் (ரூ.மில்) | 111.60 | 251.90 | 447.60 | 537.20 | 830.60 | 1,651.80 | 1,677.60 |
| மூலதனச் செலவினம் (ரூ.மில்) | 1.40 | 3.00 | 2.30 | 8.50 | 23.10 | 75.00 | 8.80 |

வரைபு 24.1: வருடாந்த அடிப்படையில் செலவினம்



# 25
# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

## 25.1 மேலோட்டப் பார்வை

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையானது (ேனுனுஊடீ) 1984 இன் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச்சட்டத்தினால் தாபிக்கப்பட்டதோடு, இது போதைப் பொருள் து்பிரயோகத்தை தடுத்தல், கட்டுப்பாட்டு சிகிச்சை வழங்கல் மற்றும் புனர்வாழ்வளித்தல் ஆகியன தொடர்பிலானதொரு தேசிய கொள்கையினை வகுத்து அதனை மீளாய்வு செய்வதனைக் கொண்டு பொறுப்பளிக்கப்பட்ட பிரதான தேசிய நிறுவனமாகும். இது தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் போதைப் பொருட்களைத் தடுத்தல் மற்றும் அது தொடர்பிலான இயக்கங்களைக் கட்டுப்படுத்தல்.

சிகிச்சையளிப்பு மற்றம் புனர்வாழ்வளிப்பு போன்ற சேவைகள் ேனுனுஊடீ ஆல் வழங்கப்படுகின்றன. சேவைகள் தரம் ரீதியாக மேம்படுத்தப்படுவதோடு, அனேக போதைப்பொருள் பாவனையாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வசதியளிப்புக்களை வழங்குவதன் மூலம் அவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்படுகின்றது. இது போதைப் பொருள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளிலிருந்து அவர்களுக்கு நிவாரணமளிக்கும் வகையிலேயே அவர்களது திறமைகள், மனோபாவம், மற்றும் வலிமை ஆகியவற்றை விருத்தி செய்தல் மற்றும் ஆண்மீக முன்னேற்றங்களை மேம்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக இடம்பெறுகிறது.

சபையினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற தடுப்புச் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்கள் கண்டி, காலி, நிட்டம்புவ, தலங்கமை போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ளன.

ஒவ்வொரு நிலையங்களும் வழங்குகின்ற சேவைகள் பின்வருமாறு

- 21 வயதிற்குட்பட்டோருக்கு கண்டியிலுள்ள "யோவுன்" சிகிச்சை நிலையம்
- போதைப்பொருளுக்கு அடிமையானோர் (0 முதல் 6 வருடங்கள்) - காலி
- போதைப்பொருளுக்கு அடிமையானோர் (6 முதல் 12 வருடங்கள்) – தலங்கம
- போதைப்பொருளுக்கு அடிமையானோர் (12 வருடங்களுக்கு மேல்) – நவதிகந்த

## 25.2 2014 இல் பெற்ற அடைவுகள்

தென்னைப் பயிர்செய்கை மற்றும் கட்டணம் செலுத்தல் வாட்டுகள் ஆகியன மூலம் 2014 இல் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 3.5 மில்லியனாகும்.



2014 இல் முன்னெடுக்கப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு:

- உடல் ஆரொக்கியம் பற்றி மனநோய் மருத்துவரினால் விரிவுரை.
- ஒவ்வொரு போயா நாட்களிலும் சில் பிரச்சாரம் மற்றும் பண போதனை
- பணியாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
- பெற்றார் கூட்டம் மற்றும் பின்தொடர் கூட்டம்.
- இசை நிகழ்ச்சியும் பாதுரு சிற்றுண்டியும்.
- ளுவுனு நிகழ்ச்சித்திட்டம்இ ர்ஜஏ நிகழ்ச்சித்திட்டம், ஹெப்பரைரிஸ் நிகழ்ச்சித்திட்டம், மற்றும் காசநோய்த் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்.
- வழிபாட்டு அறையினை நிர்மாணித்தல், வெசாக் பண்டிகைச் செயற்பாடுகள் மற்றும் பக்திப் பாடல்கள் ஆகியவற்றை தொடங்கி வைத்தல்.



பயிரிடல் நடவடிக்கை – நவதிக்கந்த

- புதவருட கொண்டாட்டம்
- உளவளத்துணை ஆலோசகர் திரு. சுனில் திசாநாயக்கவினால் அபின நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை
- டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டமும் சிரமதானப் பணிகளும்.
- விளையாட்டு நடவடிக்கைகள்
- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி
- முறைசாரா கல்வி நிகழ்ச்சித்திட்டம்



பாதணி தயாரிப்பு – தலங்கமை


- 5 ளு நிகழ்ச்சித்திட்டம்
- வருடாந்த கலை விழா
- கிறிஸ்துமஸ் தின நிகழ்ச்சித்திட்டம்

- ஜேனுனுஊடீ இன் 30 ஆம் வருட நிகழ்வு

**அட்டவணை 25.1 : 2014 இல் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

| நடவடிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்பாளர் களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் | 796 | 5206 |
| தனிப்பட்ட உளவளத் துணை | 1815 | 2238 |
| கூட்டான உளவளத் துணை | 615 | 3432 |
| குடும்ப ரீதியான உளவளத் துணை | 87 | 276 |
| விசேட நிகழ்ச்சித் திட்டம் | 285 | 1736 |
| பணியாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (சிறைச்சாலை) | 01 | 60 |
| குடும்ப சந்திப்புகள் | 07 | 350 |

201 இல் வெளியிட்ட பிரசுரங்கள் பின்வருமாறு












- “இலங்கையில் போதைப் பொருள் துஷ்பிரயோகம் மீதான ஆராய்ச்சி ஆவணங்கள் மற்றும் ஆராய்ச்சிச் சுருக்கங்களின் தொகுப்பு – பகுதி-ஜஜஜ” ஐ பிரசுரித்து விநியோகித்தமை.
- போதைப்பொருள் துஷ்பிரயோகப் பரவலாக்கம் குறித்து குளியாப்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் துரித மதிப்பீட்டு ஆய்வினை முன்னெடுத்தல்.
- ஜேனுனுஊடீ சிகிச்சை நிலையத்தி போதைப் பொருள் பற்றிய சிகிச்சையளிப்பின் வினைத்திறன் தொடர்பிலானதொரு ஆய்வினை முன்னெடுத்தல்.
- யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் போதைப்பொருள் பரவும் விதம் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளல்.
- குருணாகல் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள் பரவுகை பற்றிய ஆய்வு
- ஹர்மு கருத்திட்டம் - கம்பனித்தெருவில் ஊசிமூலமாக போதை ஏற்றுவொருக்கான தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்ட இல. ளுநுளுசுடு 1206186
- ஹர்மு கருத்திட்டம் - பெண் போதைப் பொருள் பாவனையாளருக்கு சமுதாய மைய சிகிச்சை நிலையத்தை தொடர்தல் - கருத்திட்ட இல. ளுநுளுசுடு 1206186
- ஜேனுனுஊடீ ஆனது போக்குவரத்து அமைச்சின் ஒத்துழைப்போடு, 12 இலங்கை போக்குவரத்து பஸ்களிலும் 6 புகையிரதப் பெட்டிகளிலும் போதைப்பொருட் தடுப்புச செய்திகளைக் காட்சிப்படுத்தியது.

- 




## 25.3 பிரச்சினைகளும் சவால்களும்

- னுனுஊடீ இன் ஆராய்ச்சிப் பிரிவில் ஆராய்ச்சிப் பணியாளர்களின் பற்றாக் குறை காரணமாக தேசிய மட்டத்திலான ஆய்வினை முன்னெடுப்பது கடினமாகவுள்ளது. ஆராய்ச்சிப் பிரிவின் ஆளணியினை அதிகரிக்க வேண்டிய உடனடித் தேவைப்பாடு காணப்படுகிறது.

- ஆராய்ச்சி முறையியல்.:. பகுப்பாய்வுத் திறமைகள் தொடர்பிலான புதிய தொழில்நுட்பங்களின் பற்றாக்குறை. தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான ஆராய்ச்சி முறையியல்கள் மீதான பயிற்சித் தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

- போதைப்பொருள் துஷ்பிரயோகம் மீதான தேசிய ஆய்வினை நடத்துவதற்கு நிதிப் பிரச்சினை காணப்படுதல். ஆய்வினை முன்னெடுப்பதற்கு நிதி சார்ந்த மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த உதவிய வழஙகல்.

## 25.4 எதிர்கால வாய்ப்புக்கள்

- சம்பந்தப்பட்ட முகவர்களுடன் போதைப்பொருள் துஷ்பிரயோகம் மீதான தேசிய ஆய்வொன்றை 2016 இல் முன்னெடுப்பதற்கான திட்டம்

- ஆராய்ச்சிப் பிரிவில் ஆளணியின அதிகரித்தல்.

- புதிய மென்பொருளில் போதைப்பொருள் துஷ்பிரயோக கண்காணிப்பு முறைமைத் தரவுத்தளத்தினை விருத்திசெய்து, வரிசை முறைமை இணையத்தள வடிவமைப்பினை அபிவிருத்தி செய்தல்.

## 26
## நகர அபிவிருத்தி அதிகாரசபை (ருனுயு)

### 26.1 மேலோட்டப் பார்வை

அதிகாரசபையின் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு,

இலங்கையின் பௌதீக அபிவிருத்தி உபாயங்களுக்கு இசைவாக ஒருங்கிணைப்பு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல்.

காணி பயன்பாடு, நகர அபிவிருத்தி நோக்கங்களுக்காக பெருமாளவு காணிகளின் ஒதுக்கம், நகர் பிரதேசத்தினுள் பாவனை குறைந்த காணிகள் தொட்பிலான பிரச்சினைக்கான தீர்வு போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டு ந.அ.அதிகாரசபையின் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட நகர்ப் பிரதேசங்களை மீள உருவாக்குதல்.

நகர் பிரதேசங்களில் முதலீடு செய்வதற்கன வாய்ப்புக்களை வழங்குதவன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வசதியளித்தல்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிசார் நிலைப்பாட்டினை அதிகரிக்கும் வகையிலான பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.

நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை சரியாக அமுல்படுத்துவதன் மூலம் அதிகாரசபையின் வினைத்திறனை அதிகரித்தல்.

### 26.2 2014 இல் பெற்ற அடைவுகள்

- பொருளாதார கேந்திர நிலையமாகவும் சுற்றுலாத்துறைக்கான மைய அமைவிடமாகவும் திகழும் வண்ணம் கொழும்பு நகரின் அபிவிருத்தி.
- சிறி ஜயவர்தனபுர கோட்டையை ஒரு நிர்வாக தலைநகராக அபிவிருத்தி செய்தமை.
- நகர் புத்தாக்க கருத்திட்டத்தின் கீழ் அதன் 2 ஆம் கட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கான வீடுகளை நிர்மாணித்து வழங்குவதை விரிவாக்கம் செய்தமை.
- பசுமைமிக்க பூங்காக்கள், பசுமைத் தரைத் தோற்றங்கள், மற்றும் பொது வசதிகளின் விரிவாக்கம் போன்றவற்றினூடாக நகரின் எழில்மிகு அபிவிருத்தி.
- சிறிய மற்றும் நடுத்தர கோபுரங்களின் அபிவிருத்தி.
- “புராணகும கருத்திட்டம்” இன் கீழ் இனங்காணப்பட்டதான கட்டடக்கலை ஆலோசனைச் சேவைகள் மற்றும் நகர அபிவிருத்திக்கான திட்டம் ஆகியவற்றுக்கான ஏற்பாடு.
- தொல்பொருளியல் முக்கியத்துவமிக்க இடங்களை மக்களைக் கவரக்கூடியதாக புத்தாக்கம் செய்து பேணுவதன் மூலம் அவற்றைப் பாதுகாத்தல்.
- நகர்ப் புறங்களை பொதுமக்கள் வசிக்கக்கூடியதாகவும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் மிக்கதாகவும் விருத்திசெய்தமை.
- பொதுமக்களுக்கு அனுகூலங்களை வழங்கும் வகையில் பொருத்தமான வலயமிடல் திட்டங்களை தயாரித்தல்.

அட்டவணை 26.1: கருத்திட்டங்கள் தொடர்பான நிதிசார் தகவல்கள்

| நடவடிக்கை | மதிப்பிடப்பட்ட செலவினம் (ரூ.மில்) | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மில்) | |
|---|---|---|---|
| நகர் புத்தாக்க கருத்திட்டம் கட்டம் ஐ இன் கீழ் 9064 வீட்டு அலகுகளை நிர்மாணம். | 31270.8 | | 14,323 |
| நகர் புத்தாக்க கருத்திட்டம் கட்டம் ஐஐ இன் கீழ் 9064 வீட்டு அலகுகளை நிர்மாணம். | 30384.15 | | 1,787 |
| நகர் அழகுபடுத்தல் கருத்திட்டம் | 1006.7 | | 334.6 |
| குறிப்பிட்ட தொல்பொருளியல் சார்ந்த பெறுமதிமிக்க கட்டடங்கள்.: ஆதனங்களை புத்தாக்கம் செய்து பாதுகாத்து அவற்றை அபிவிருத்தி செய்தல். | 3643 | | 1,042.7 |
| சிறிய மற்றும் நடுத்தர நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | - | | - |
| "புற நெகும" கருத்திட்டத்தின் கீழ் ஆலோசனைச் சேவைகளை வழங்கல். | 6700 (6 சதவீத ஒதுக்கங்களை ந.அ.அதிகாரசபைக்குச் செலுத்துவதுதல்) | | 20.38 |
| நகர உட்கட்டமைப்பு வசதி மற்றும் நகர முதலீட்டுக் கருத்திட்ட அபிவிருத்தி. | 5101.23 | | 1,256.58 |

- **நகர் புத்தாக்க கருத்திட்டம் ஐ**







தெமட்டகொட வீடமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட் வீடுகளை அதன் பயனாளர்களுக்க கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, மயுரா இடத்திலான நிர்மாணிப்பு மற்றும் 31 வத்தை வீடமைப்புக் கருத்திட்டங்கள் ஆகியன பூர்த்தியடைந்தன. பிரேரிக்கப்பட்ட வீடமைப்பு நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுவருவதோடு, சலமுல்ல வீடமைப்புக் கருத்திட்டத்தின் கட்டம் 1 மற்றும் கட்டம் 2 இன் 33மூ உம், 54.:.66 வத்த வீடமைப்புக் கருத்திட்டத்தின் 98.9மூ உம் ஹீனமுல்ல வீடமைப்புக் கருத்திட்டத்தின் 87மூ உம் மாளிகாவத்தை வீடமைப்புக் கருத்திட்டத்தின் 19மூ உம் அளுத் மாவத்தை வீடமைப்புக் கருத்திட்டத்தின் 8.6மூ உம் கொலன்னாவை வீடமைப்புக் கருத்திட்டத்தின் 16மூ உம் சிறில் சீ. பெரேரா மாவத்தை வீடமைப்புக் கருத்திட்டத்தின் 97மூ உம் பேர்கு'ன் வீதி வீடமைப்புக் கருத்திட்டத்தின் 60மூ உம் எதிரிசிங்க வத்தை வீடமைப்புக் கருத்திட்டத்தின் 71மூ உம் தச்சிவத்தை வீடமைப்புக் கருத்திட்டத்தின் 66மூ உம் அங்கொட வீடமைப்புக் கருத்திட்டத்தின் 60மூ உம் பிரதீபா மாவத்தை வீடமைப்புக் கருத்திட்டத்தின் 29மூ உம் பூர்த்தியடைந்துள்ளன.









- **நகர் புத்தாக்க கருத்திட்டம் ஐஐ**

ஹீனமுல்ல விவசாயப் பிரதேசம், அளுத்மாவத்தை, மட்டக்குளி, ரொரிங்டன் இடம், கிளிங்கா மாவத்தையின் கட்டம் 2, ஆர்மய இடம், சிறில் சீ பெரோ மாவத்தை கட்டம்2, மாதம்பிட்டிய வீதி, கிம்புல எல, அப்பிள் வத்தை, ஒருகொடவத்தை ஆகிய வீடமைப்புக் கருத்திட்டங்களின் பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **நகர் அழகுபடுத்துகை**





யாழ்ப்பாண கடற்கரைப் பூங்கா கருத்திட்டத்தின் கட்டம் 1 இன் 98 சதவீதமும் கட்டம் 2 இன் 33 சதவீதமும் பூர்த்தியடைந்துள்ளன. அம்பாறை ஏரியைச் சூழ அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நடைப் பயிற்சிப் பாதையின் 60 சதவீத நிர்மாணப் பணிகள் நிறைவடைந்தன. மட்டக்களப்பு, சதுருகொண்டான் சதுப்புநில பூங்காவின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அமுல்படுத்தப்பட்ட நகர் அழகுபடுத்தல் கருத்திட்டத்தின் கீழ் ஹெட்டிபொல



நகரின் 62மூ உம், குருணாகல் ஏரியின் தோற்றக் கருத்திட்டத்தின் 20மூ உம், கோட்டே பாஸ்தியன் மாவத்தையில் மிதக்கும் சந்தைக் கருத்திட்டத்தின் 80மூ உம், பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டடத்தின் முக்கிய பிரமுகர்கள் நுழைவாயிலின் தரைத்தோற்றப் பணியின் 90மூ உம் பூர்தியாகியுள்ளன. மேலும், மொரட்டுவை கடற்கரைப் பூங்காவின் 35மூ உம், கண்னொருவ தரைத்தோற்றக் கருத்திட்டத்தின் கட்டம் 1 இன் 98மூ உம், கட்டம் 2 இன் 50மூ உம், கதிர்காமம் திறந்த பூங்கா கருத்திட்டத்தின் 10மூ உம், மினுவாங்கொட நகர் அழகுபடுத்தல் கருத்திட்டத்தின் 75மூ உம் பூர்த்தியடைந்துள்ளன.



- **வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களின் மறுசீரமைப்பு**

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடங்களின் மறுசீரமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் நகரின் பிரதான இடங்களில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க பல்வேறு கட்டடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இதற்கிணங்க, கணக்காய்வுத் தலைமை அதிபதியின் கட்டடத்தின் புதுதாக்கப் பணிகள் பூர்த்தியடைந்து 2014 ஜுலையில் பொதுமக்களுக்காக திறந்துவைக்கப்பட்டது. மேலும் கோட்டை கோல்ட் சென்டர், கொழும்பு 7 ரேஸ் கோசிலுள்ள கிராண்ட் ஸ்ரான்ட் கட்டடம், மருதானை ரிபோலி சந்தை, புறக்கோட்டை கபூர் கட்டடம், போன்றவற்றின் புத்தாக்கப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், கண்டி, எஹலபொல வலவ்வவின் புத்தாக்கப் பணிகள் 1 சதவீதத்தாலும், ஹங்குரான்கெத்த வி'ஞு கோவிலின் புத்தாக்கப் பணிகள் 20 சதவீதத்தாலும் பூர்த்தியடைந்துள்ளன.

- **சிறிய மற்றும் நடுத்தர நகர் அபிவிருத்திக் கருத்திட்டம்**



இதன் கீழ் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் ஏனைய சம்பந்தப்பட்ட நகர்ப் பிரதேசங்களினால் அமுலப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்திக் கருத்திட்டங்களுடன் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

- **"புற நெகும" கருத்திட்டம்**



நகர அபிவிருத்தி அதிகாரசபையானது புற நெகும அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் கட்டடக் கலை சார்ந்த ஆலோசனைச் சேவைகளை வழங்கியுள்ளதோடு, அதற்கான ஆலோசனைக் கட்டணத்தின் 3 சதவீதமாகிய ரூபா. 20.38 மில்லியன் பெறப்பட்டது.

- **நகர முதலீட்டுக் கருத்திட்டங்கள்**

நகர உட்கட்டமைப்பு தரமுயர்த்தல் மற்றும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் பின்பவருமாறு



யாழ்ப்பாணம் ஓய்வு விடுதியின் 3மூஇ பள்ளிமுனை விளையாட்டு மைதானம் 10மூ மற்றும் வவுனியா வாகனத் தரிப்பிடம் 5மூ.

கண்டி மற்றும் மாத்தளை புகையிரதப் பாதைக்கு

சமாந்தரமாகச் செல்லும் நடைப்பயிற்சிப் பாதையின் 50மூஇ புசல்லாவை சந்தைத் தொகுதியின் 30மூஇ புசல்லாவ பஸ் தரிப்பிடத்தின் 2மூஇ தம்புள்ள புனித பிரதேச அபிவிருத்திக் கருத்திட்டத்தின் 40மூ மற்றும் எலிசபத் இராணி சந்தைத் தொகுதியின் 15மூ பூர்த்தி செய்யப்பட்டன.








அனுராதபுரம் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், றுவான் வெலி சாய கட்டுகெலியாவ வீடமைப்புக் கருத்திட்டத்தைச் சூழ்ந்த பிரதேச அபிவிருத்தி, ந.அ.அதிகாரசபையின் வடமத்திய மாகாண அலுவகல நிர்மாணப் பணி மற்றும் மிகிந்தல புனித பிரதேச அபிவிருத்தி போன்றன பூர்த்தியடைந்ததோடு, அனுராதபுர நகர அபிவிருத்தி 1 ஆம் கட்டத்தின் 10 சதவீதம் பூர்த்தியடைந்தது.

எம்பிலிப்பிட்டிய சந்தை நிர்மாணிப்பின் 90மூ உம் எஹிலியகொட பொதுமக்கள் சதுக்கத்தின் 75மூ உம் எஹலியகொட சந்தையின் 3மூ உம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரம்புக்கணை புகையிரத நிலையம் மற்றும் அதனையண்டிய வீதி அபிவிருத்திகள் இனங்காணப்பட்டதோடு இவை தொடர்பில் 90 சதவீத பணிகள் பூர்த்தியடைந்தன. கேகாலையில் தொசான் பங்களாவின் புத்தாக்கப் பணிகளும் பூர்த்தியடைந்தன.

பதுள்ள சந்தைக் கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள், கழிவகற்றல் கருத்திட்டம், கிரிவெஹர அபிவிருத்திக் கருத்திட்டம், செல்லக்கதிர்காமம் யாத்திரிகர் வசதி நிலையம் போன்றவற்றின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்தன. மேலும் பண்டாரவளை பஸ் நிலையத்தின் 95மூஇ செல்லக்கதிர்காமம் வாகனத் தரிப்பிடத்தின் 80மூஇ மீகஹகிவுல நகர அபிவிருத்தியின் 40மூ பூர்த்தியடைந்தன. மேலும் பதுள்ள சேனாநாயக்க மாவத்தையில் வாகனத் தடிப்பிடத்தின் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

காலி, இம்மானுவ நகரின் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருவதோடு, ஹபறாதுவ நகரின் அபிவிருத்திக் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அகுரஸ்ஸ நகரின் விரிவாக்கக் கருத்திட்டம் கட்டம் 1 ஆனது 30மூ உம், ஊறுபொக்க விளையாட்டு மைதானம் மற்றும் சிறுவர் பூங்கா ஆகியன 30மூ உம், கொதுவகொட பொதுச் சந்தைக் கருத்திட்டத்தின் 100மூ உம் பூர்த்தியடைந்ததோடு, மாத்தறை ராஹூல கல்லூரியின் பிரதான மண்டபத்தின் நிர்மாணப் பணி 7மூ பூர்த்தியடைந்ததோடு, அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட நகர அபிவிருத்திக் கருத்திட்டங்களின் கீழ் வீரக்கெட்டிய ராஜபக்' விளையாட்டு மைதானத்தின் 70மூ பூர்த்தியடைந்தது. அங்குணகொலபெலஸ்ஸ சந்தைத் தொகுதி மற்றும் தங்காலை ஜயசிங்க வத்தை சந்தைத் தொகுதி ஆகியவற்றின் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெல்கந்தை மற்றும் பாதுக்க பொல ஆகியவற்றின் மேல் மாகாண நிர்மாணப் பணியினுள் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் பூர்த்தியடைந்தன. ஹோமாகம லோட்டஸ் கோபுரத்தில் பலதுருவத்தை கருத்திட்டம், பொழும்பு சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை அபிவிருத்தி, பிலியந்தல மற்றும் பாணந்துறை நகரின் மைய அபிவிருத்தி, கோட்டே தீயணைப்புப் படையினரின் உத்தியோகபூர் விடுதிகள் கருத்திட்டம் ஆகியன இடம்பெற்று வருகின்றன. மேலும் கம்பஹாவில் பஸ் தரிப்பிடம் மற்றும் வாகனத் தரிப்பிடம் ஆகியனவும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 26.3 எதிர்கால வாய்ப்புக்கள்

-  “முறைப்படுத்தப்பட்ட நகர திட்டங்களுக்கு இசைவாக நகர அபிவிருத்தி அதிகாரசபை பிரகடனம் செய்த பிரதேசங்களின் அபிவிருத்தி”
-  2013 மற்றும் 2014 காலப்பகுதியில் கருத்திட்ட இலக்குகளை நிறைவேற்றுதல்.
-  உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கான கவர்ச்சிமிக்க பொருளாதார மையமாக கொழும்பு நகரை தரமுயர்த்தல்.
-  நகர புத்தாக்க கருத்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானமுடைய

குடும்பங்களுக்கான 65,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான இலக்கினை அடைவதையும் பொருத்தமான முதலீடுகளுக்கான நகரின் காணிகளை மேம்படுத்தலையும் முன்னெடுத்தல்.

- அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களையும் விரிவாக்கம் செய்து தாபிப்பதனூடாக இலங்கையின் நிர்வாக தலைநகரமாக சிறி ஜயவர்தனபுர கோட்டே நிர்வாக நகரை அபிவிருத்தி செய்தல்.

- முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.

- கீழுள்ள கருத்திட்டங்களை 2015 ஆம் ஆண்டுக் காலத்தினுள் கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்துவதற்கு பிரேரிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாண அலுவலகக் கட்டடம் மற்றும் திருகோணமலையில் சுற்றுலா விடுதி ஆகியவற்றின் நிர்மாணம், மரத்தடிச் சந்திப் பிரதேசத்தில் ஹோட்டல் அபிவிருத்திக் கருத்திட்டம், வர்த்தக அபிவிருத்திக் கருத்திட்டம், மற்றும் திருகோணலை மத்திகாலி கடற்கரைப் பூங்கா அபிவிருத்தி, காத்தான்குடி கடற்கரைப் பூங்கா, கல்லடி பாலத்தை அண்டிய பூங்காவின் தரைத்தோற்றம், சொச்சிமுனையில் உல்லாசப் பயணிகள் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம், மட்டக்களப்பில் நிர்வாக கட்டடத்தொகுதி, அம்பாறையில் பொதுச் சந்தை மற்றும் ந.அ.அதிகாரசபையின் மாவட்ட அலுவலக நிர்மாணம், மண்முனை, பொத்துவில் பிரதேச அபிவிருத்திகள் மற்றும் அருகம்பையில் சுற்றுச் சூழல் நிலைமைகளின் மேம்பாடு.

- மத்திய மாகாணம் - கொட்டகல சதுப்புநில பூங்கா, கிரேகரி ஏரி ஆகியவற்றின் அபிவிருத்தி, நல்லதானியவில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், தலவாகலையில் தரைத்தோற்ற கருத்திட்டம் கட்டம் 2 ஆகியன 2015 ஆம் ஆண்டில் நுவரேலியா மாவட்டத்தில் அமுல்படுத்துவதற்கு பிரேரிக்கப்படுகின்றன. எலிபொல வலவ்வ பாதுகாப்பு, போகம்பர சிறைச்சாலை அபிவிருத்தி, நகருக்கு வெளியில் பஸ் தரிப்பிடம், மஹாவலி நதிக்கரை தரைத்தோற்றம், வைத்தியசாலைக்கான பொது வாகனத் தரிப்பிட நிர்மாணம், பொலிஸ் விடுதி இடமாற்றம், பொது வாகனத் தடிப்பிடம் மற்றும் நடைப்பயிற்சிப் பாதை ஆகியவற்றின் நிர்மாணிப்பு, பேராதெனிய சந்தை மற்றும் பஸ் நிலைய நிர்மாணம் ஆகியன 2015 ஆம் ஆண்டில் கண்டி மாவட்டத்தின் முன்னெடுப்பதற்கு பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வருகின்றன.

- வட மாகாணம் - யாழ்ப்பாண நகரில் பல்மாடி வாகனத் தரிப்பிட நிர்மாணம், பஸ் நிலையம், அலுவலக கட்டடம் மற்றும் விடுமுறை கால சுற்றுலா விடுதிகள் ஆகியவற்றின் அபிவிருத்தி. வவுனியா பஸ் நிலைய நிர்மாணம் மற்றும் சாவகச்சேரி, வெல்வெட்டித்துறை, புதுக்குடியிருப்பு ஆகிய நகரங்களில் வாராந்த சந்தையை நிர்மாணிப்பதற்கும் பிரேரிக்கப்பட்டன.

- அனுராதபுர நகர மைய அபிவிருத்திக் கருத்திட்டங்கள், நொச்சியாகம நகர அபிவிருத்தி மற்றும் மிஹிந்தலை, தம்புத்தாகம, திரப்பானை, கெகிராவை, தலாவை மற்றும் எப்பால நகரம் போன்ற பிரதேச அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் முன்னெடுப்பதற்கு பிரேரிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களாகும்.

- சப்ரகமுவ மாகாணம் - கேகாலை மாவட்டத்தின் கேகாலை, ரம்புக்கணை, மாவனல்ல, யட்டியாந்தோட்டை ஆகிய நகரங்களில் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ரூபா. 1892 மில்லியனை முதலீடு செய்வதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது. பெல்மதுல்ல பஸ் நிலையம், எஹிலியகொட வாகனத் தரிப்பிடம், நிவித்திகல இரத்தினக்கல் சந்தைக் கட்டடம் மற்றும் பஸ் நிலையம், கொடகவெல பஸ் நிலையம், கஹவத்தை விளையாட்டரங்க அபிவிருத்தி, பலாங்கொடயில் வர்த்தகத் தொகுதி, நாகஹமுத்துவ வயல் நிலத்தை ஒரு பொது வாகனத் தரிப்பிடமாக அபிவிருத்தி செய்தல் போன்ற நிர்மாணிப்புகள் இரத்தினபுரி மாவட்டத்தின் கீழ் பிரேரிக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களாகும்.

- ஊவா மாகாணம் - கதிர்காமம் நகர அபிவிருத்தி, செல்லக்கதிர்காமத்தில் திறந்தவெளி பூங்கா, பதுள்ள சந்தைத் தொகுதி மற்றும் பிபில, வெல்லவாய, புத்தள, மொணராகலை, வெலிமட, கெப்பட்டிப்பொல, எல்ல, ஹப்புத்தளை, மஹியங்கணை ஆகிய நகரங்களில் இனங்காணப்பட்ட விசேட கருத்திட்டங்கள்.

- வட மேல் மாகாணம் - அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக ரூபா. 9700 மில்லியன் முதலீடு செய்து அதனை மேற்கொள்வதற்கு பின்வருவன இனங்காப்பட்டுள்ளன. குருணாகல் நகர மைய அபிவிருத்திக் நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டம் 1 மற்றும் 2, சாத்தியவடி காணியில் வர்த்தக மற்றும் குடியிருப்பு நிர்மாணக் கருத்திட்டம், குருணாகல் பிரதேசத்தில் சுற்றுவட்ட வீதி அபிவிருத்தி,, தென்னங்குரியாவ, ஆணைமடுவ பிரதேசத்தில் உட்கட்டமைப்புடனான ந.அ.அதிகாரசபையின் காணி அபிவிருத்தி, வங்கிகள் மற்றும் நிதி முகவரகங்களை நிர்மாணிப்பதற்கான காணி அபிவிருத்தி, பிரேரிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக குருணாகல் நகரின் பதடியவல காணி சுவீகரிப்பு, புத்தளத்தில் கடற்கரைப் பூங்கா அபிவிருத்தி, ஆணைமடுவயில் நகர அபிவிருத்தி, மஹாவ, சிலாபம், மல்சிறிபுர, ஹெட்டிப்பொல, குளியாப்பிட்டி, கிருள்ள போன்ற நகரங்களின் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆகியன 2015 ஆம் ஆண்டில் விருத்தி செய்வதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களாகும்.

- தென் மாகாணம் - கொத்துவகொட சந்தைக் கட்டட நிர்மாணிப்பு மற்றும் வாராந்த சந்தை, வெலிகம கடற்கரைப் பூங்கா, அகுரஸ்ஸ நகர அபவிருத்தி, மாத்தறை நில்வள கங்கையுடனான நகர வனம், மாத்தறை ராஹுல கல்லூரியின் பிரதான மண்டப நிர்மாணம் போன்றன 2015 இல் பூர்த்திசெய்வதற்கு பிரேரிக்கப்பட்டன. மிட்டனிய விளையாட்டு மைதானம், மஹாவெவ மற்றும் கட்டுவான சந்தை அபிவிருத்தி, அரசாங்க விடுதிகள் இடமாற்றம், பொலிஸ் நிலைய மற்றும் பஸ் நிலைய அபிவிருத்தி, அங்குணுகொலபெலஸ்ஸவில் பொதுமக்கள் மலசலகூடம் நிர்மாணம், தங்காலை பஸ் நிலைய அபிவிருத்தி, பரீவெல கடற்கரைப் பூங்கா கருத்திட்டம், வலசமுல்லவில் கடைத்தொகுதி மற்றும் பஸ் நிலையம், அம்பலாந்தோட்டை நகர அபிவிருத்தி, கடற்கரைப் பூங்கா மற்றும் சுற்றாடல் நேய விவசாய அபிவிருத்திக் கருத்திட்டம், பெலியத்த சந்தை அபிவிருத்தி, கிரிந்த கடற்கரைப் பூங்கா அபிவிருத்தி, தெபரவெவ கடைத் தொகுதி அபிவிருத்தி, சூரியவெவயில் பொலிஸ் விடுதிகள், பொலிஸ் நிலையம் மற்றும் நிர்வாக கட்டடத் தொகுதிக் கருத்திட்டம், கராபிட்டியவில் கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம், பொதுமக்கள் வாகனத் தரிப்பிடம் மற்றும் வீதி அழகுபடுத்துகைக் கருத்திட்டம், தத்தாலை விளையாட்டு மைதான அபிவிருத்தி ஆகியன காலி மாநகர சபையின் கீழ் பிரேரிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களாகும். அம்பலாங்கொட நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழான அலுவக கட்டடத்தொகுதி கட்டம் 1, இமாதுவ சந்தை மாற்றுவழிப் பாதை நிர்மாணம், ஹிக்கடுவை ஹபராதுவ போப் பொத்தல, பண்டாரகம, அக்மீமான்ன நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியனவும் 2015 ஆம் ஆண்டுக் காலத்தில் அமுல்படுத்தப்படுவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளன.